

18678

ரூ 1.50

பிப்ரவரி 1980

# அமர பாரதி



தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல் தானே.
—திருமூலர்

★

அமர பாரதிக்கு
எங்கள்
நல் வாழ்த்துக்கள் !

★


ஏ. வி. ஆர். எஸ். சாரிடீஸ்
' ஆனந்தா '
26, திருமூர்த்தி தெரு,
சென்னை-600 017

# அமரபாரதி பிப்ரவரி 1980

சுவடி—1 | இன்பமே எந்நாளும் துன்பமில்லை. | ஏடு—1





## சௌந்தர்ய லஹரி

சரத் கால வெண்மதி போல்
திகழும் நின் மேனி
சடை முடியில் பிறைமதியும்
மணி முடியும் சூடி
கரங்களிலே புத்தகம் வெண் ஜப
மாலை கொண்டு
கருணை அருள் வரம் தந்து
அபயமதும் தருமே
சிரம் தாழ்த்தி ஒரு முறை நின்
சேவடியைத் தொழுதே
சிந்திக்கும் கவிவாணர்
சிந்தையினில் நீயே
சர மழைபோல் தேன் தீம்பால்
திராட்சையிலும் இனிதாய்
சத்தியமாம் சொற்கள் தமைச்
சமைத்திடுவாய் தாயே!

—ஸ்ரீ சங்கரர்

தமிழ் வடிவம்:
அ. வெ. ர. கிருஷ்ணசாமி
ரெட்டியார்



சந்திர சேகர, சந்திர சேகர, சந்திர சேகர பாஹிமாம்.
சந்திர சேகர, சந்திர சேகர, சந்திர சேகர ரக்ஷமாம்.

# இளமையில் கல்

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

கவிகளில் சிறந்தவர் காளிதாசர். சிறுபிராயத்தில் கல்வியைக் கருத்தோடு பெறவேண்டும் என்று கூறுகிறார். கல்விக்கு இரண்டு அங்கங்கள் உண்டு. ஒன்று குருபக்தி. மற்றொன்று வினயம். கோபம் கண்டனம் போன்றவை கல்வி பயிலுங்கால் கூடவே கூடாது. கல்வி பயின்று, அதைப் பயன்படுத்துங்கால், ஒரு சில சமயங்களில் கோபம் போன்றவை வேண்டியிருக்கலாம். ஆனால் குழந்தைகளாக இருக்கும் பொழுது, சுதந்திரம், பெரியோர் சொல்லை மீறி நடத்தல் முதலியன கூடாது.

மருந்து சாப்பிடும் பொழுது பத்தியமாயிருக்க வேண்டியிருக்கிறது. படிப்பும் ஒரு மருந்து. பத்தியத்தினாலேயே நோய் குணமாகி விடுவதுண்டு. மருந்துகூட இரண்டாம் பட்சமானது தான். பத்தியமே முக்கியம். படிப்புக்குப் பத்தியமாகிய குருபக்தியும் வினயம் என்னும் அடக்கமும் அத்தியாவசியமானவை.

வணக்கம் உயர்வு தரும் என்பதற்குப் பாத தூளியை ஓர் உதாரணமாகக் கூறுவதுண்டு. காலிலிருந்து கிளம்பி அதுமேலே போகிறது. தாழ்மை மேலே கொண்டுவிடும் என்பதை அந்த உதாரணம் விளக்குகிறது. குழந்தையாக இருக்கும் பொழுதே ஆசார்ய அனுக்கிரகத்தைப் பெற வேண்டும். இப்பொழுது தாழ்மையுடன் இருப்பின், பிறகு மேன்மை உண்டாகும்.

கல்வி பெறுங்காலத்தில் குழந்தைகளுக்கு வேறுவேலையே கூடாது தாய். தந்தை, குரு இம்மூவரிடமும் அசையா பக்தி கொண்டிருந்தால், மேன்மை தானாகவே வந்து அடையும்.

வேதம் அடிக்கடி மாத்ருபக்தி, பித்ரு பக்தியை வற்புறுத்தியிருக்கிறது. வெவ்வேறு சாகைகள், வெவ்வேறு உபநிஷத்துக்கள் எல்லாம் இதைச் சொல்லியிருக்கின்றன. ஒளவையார் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று சொல்லியிருக்கிறார். வேதமும் ஒளவையாரும் அன்னையையும் பிதாவையும் தெய்வமாகப் பாவிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதால், தெய்வம் ஒன்று இருக்கிறது என்பது நிச்சயம்.

வித்தியாப்பியாஸம் என்பது ஒரு யோகம். கலங்காத சித்தத்துடன் அதில் முயற்சி செய்ய வேண்டும், கல்வி பயிலுங்காலத்தில் உலகக் காரியங்களில் ஈடுபட வேண்டிய தேவையில்லை. 'பரோபகாரம் செய்ய வேண்டாமா? தனக்காக மட்டுமா படிப்பது?' என்று கேட்கலாம். பரோபகாரம் அவசியம் செய்ய வேண்டும். அதற்கு அவசியமான கல்வியைச் சம்பாதித்துக் கொண்டு பிறகு அதில் இறங்கவேண்டும்.

மூட்டை தூக்கி வாழ்க்கை நடத்தும் ஒருவன் ஜ்வரத்தால் அவஸ்தைப்படுகிறான். அப்பொழுதும் மூட்டை தூக்கச் சிறிது சக்தி இருக்கிறது. ஆனால் மூட்டை

### உகந்த பருவம்

வயது காரணமாகக் கிளி யின் தொண்டையில் உள்ள சவ்வுதடித்துப்போய்விடும். அப்புறம் அந்தக கிளிக்கு என்ன முயன்றாலும் பேசக் கற்றுக்கொடுக்க முடியாது. அது இளம் வயதில் இருக் கும்பொழுதே கறறுக் கொடுத்து விடவேண்டும்.

அதுபோன்று முதுமை நிலையை அடைந்த பிறகு மனத்தை இறைவன்பால் செலுத்துவது சிரமமான காரியமஆகிவிடும். எனவே, இளமைப் பருவத்திலேயே அதற்கு வித்திடவேண்டும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

---

யைத் தூக்கி பிரயாசைப் பட் டாலுகில், ஜ்வரம் அதிகமாகி விடும். அதனால், ஜ்வரம் உள்ள வரையில் சும்மா இருந்து, மூட் டையைப் பிறகு தூக்கக் சக்தி யைத் தேடிக் கொள்ள வேண் டும். அப்படியே கல்விப் பயிற்சி உலக சேவைக்குப் பூர்வாங்கம். உலகவிஷயங்களைக் காதில்போட் டுக் கொள்ளாமல், ஆசார்ய பக் தியுடன் இருந்து, கல்வியைக் கற்றுக் கொண்டு விட்டால், பிறகு நன்றாக உலக சேவை செய்ய முடியும்.

மாணவர்களுக்குக் கற்பிக்கும் போதுதான், உபாத்தியாயர் களுக்குத் தாங்கள் ஏற்கெனவே படித்ததை மனனம்செய்ய வேண் டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது அவர்கள் மறுபடி கற்போர் ஆகிவிடுகிறார்கள். பல விதமாக ஜீவனம் செய்ய வேண்டியிருப்பதில், ஆசிரியர் கள்தான் தாங்கள் கற்றவித்தை யையே ஜீவனத்துக்கு வழியாக் உபயோகிக்கிறார்கள். மற்றவர் கள் படிப்பு முடிந்தால் வேறு வேஷம் போட்டுக் கொண்டு போய் விடுகிறார்கள்.

தாங்கள் கற்பிக்கப் போகிற விஷயத்தை முன்னாடியே உபாத் தியாயர்கள் ஆராய்ந்து கொண்டு விடின், பிள்ளைகள் மனத்தில் பதியும்படி போதிக்கக் கூடிய சக்தி உண்டாகி விடும்.

உங்களுக்கு இந்தக் கதை தெரிநதிருக்கும். ஒரு வித்வான் ஓர் அரசரிடம் சென்று, அவருக் குத் தாம பாகவதம் சொல்வ தாகக சொன்னாராம். 'எனக்கு இப்பொழுது கேட்க அவகாசம இல்லை. மறுபடியும் அவகாசம் கிடைக்கும் பொழுது அவசியம் கேட்கிறேன். அதற்குள் பாகவதத் தைப் படித்துக் கொண்டு வாருங்கள்!'' என்று பணிவாகச் சொல்லி அனுப்பினாராம் அரசர்.


இப்படியே இருப்பத்தொரு முறை அரசர் அவரைத் திருப்பி யடித்திருக்கிறார். இருபத்திரண் டாம் முறை அவர் வரவில்லை. காரணம்,பாகவதத்தின் அந்தரங் கத்தை அறிந்து கொண்டு ஆத்ம லாபத்தைத் தேடி வித்வான் வனத்துக்குப் போய்விட்டார். அப்படி அவர் போய் விட்டதை அறிந்த அரசர் பிறருக்கு உப தேசம் செய்யும் பககுவம் அவ ருக்கு அப்பொழுது வந்து விட் டது என்பதை உணர்ந்து, தாமே நேராகச் சென்று அவரை வணங்கித் தமக்கு உபதேசம் செய்ய வேண்டுமென்று பிரார்த் தித்து அழைத்து வந்தாராம். இதிலிருந்து, 'படிக்கப்படிக்க உட் கருத்து வெளிப்படும். அப் பொழுது கற்பிப்பதற்கு யோக் கியதை பெருகும்' என்று விளங்கவில்லையா? ★

18679

# தனக்கு உவமை இலாதான்

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

உலகில் அநேகவிதமான பிராணிகள் இருக்கின்றன. இவைகளுள் மனிதராகப் பிறப்பது மிகுந்த புண்யத்தின் பயனாக ஏற்படக்கூடியது. இந்த மனிதப் பிறவியில் தான் பிறவாத தன்மை பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மற்ற எல்லாப் பிராணிகளும் பிறந்து பிறந்து செத்துப் போகும். மனிதப் பிறவியில் பிறந்த நாம் சாகாமல் அமரர்களாக ஆகமுடியும். அதற்கு வழியைச் சொல்கின்றவை தான் நம்முடைய மத நூல்கள். அந்த மத நூல்களில் அமரத்துவத்தை அடைய 'பா' ரூபமான ஜோதியை, அதாவது ஒளியை அடைய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பாரதி என்றால் ஜோதி வடிவமானது, ஞானவடிவமானது அழிவில்லாத அமரத்துவத்தை அடைவிக்கக் கூடியது என்று பொருள். 'அமர' என்று அடைமொழி அதற்கு இன்னும் மெருகேற்றி நித்யமாக இருக்கக்கூடிய வாழக்கூடிய நிலையை உறுதிப் படுத்துகிறது. இவ்வகையில் 'அமர பாரதி' என்னும் பெயர் பொருள் பொதிந்து சிறக்கிறது.



'ஞான தீபேன பாஸ்வதா' என்றும் 'பஹூனாம் ஜன்மனாம் அந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே' என்றும் பகவத்கீதை கூறுகின்றது. இந்த நல்ல நிலையைப் பெறுவதற்கு இறைவன் அருள் தேவை. நதியைத் தாண்டிச் செல்ல வேண்டுமானால் படகு தேவை. அது போல் பிறவிக் கடலைத் தாண்டச் செல்வதற்கு குருவின் அருள் தேவை தாமரையிலே கிடக்கும்

### தீபச்சுடர்

காற்றில்லாத கண்ணுடிப் பாத்திரத்தில் வைத்தால் தீபச் சுடர் அசையாமல் இருக்கிறது. அதேபோல மாயை வசப்படாத சித்த புருஷர்களின் அறிவு ஸ்திர மாயிருக்கிறது.

### ருசிபேதம்

உப்பும் கர்ப்பூரமும் பார்க்க ஒன்றுபோல் இருக்கின்றன. சுவைத்தால் அவற்றின் ருசி தெரிந்துவிடுகிறது. அதேபோல நல்லவர்களையும் தீயவர்களையும் பழகிப் புரிந்து கொள்ளலாம்.

### பிரதிபிம்பம்

கண்ணுடியில் பெரிய மலையின்பிரதிபிம்பம் சிறிதாகத் தெரிகிறது. அதனுல் மலை சிறுத்துவிட்டது என்றுகூற முடியுமா? அதன் பெருமை எந்நாளும் சிறுத்து விடுவதில்லை.

—தெலுங்குக்கவி வேமனு

---

தண்ணீர் தாமரையில் ஒட்டாதது போல, குரு நம்மிடையே வாழ்ந்து கொண்டிருந்தாலும் எவ்விதமான இன்பதுன்பத்திலும் ஒட்டாமல் அருள் பாலிப்பவர். அறியாமையிலிருந்து விடுபட்டவர் குரு. ஆகவேதான் நம்முடைய அறியாமையையும், துன்பத்தையும் குருவால் அகற்றமுடிகிறது.

குருவிற்கு உவமை உலகத்திலேயே கிடையாது. 'சந்திரன் போல் முகம்' என்று சொல்லலாம். 'தாமரைபோல் மலர்ந்த முகம்' என்று சொல்லலாம். ஆனுல் இதுபோல் எதையும் சுட்டிக்காட்டி குரு என்றுஉவமை கூறமுடியாது. 'திருஷ்டாந்தோ நைவ திருஷ்ட; த்ரிபுவன ஜடரே ஸத்குரோர் ஞான பாது' என்று ஆதி சங்கரரே கூறுகிருர்.

குரு ஜாஜ்வல்யமான தேஜஸை உடையவர். ஆனுல் சந்திரன் போல் குளிர்ந்தவர். இயற்கையாகவே ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் அன்பாயிருப்பவர். ஆயிரம் ஆண்டு தவம் செய்த பலனை ஒரு நிமிஷத்தில் தம்முடைய தவவலிமையினுல் அருள் பாலிக்கும் ஆற்றல் பெற்றவர். பகலில் ஸூர்ய கிரணத்தினுல் தவிக்கப்பட்ட பூமியை இரவில் சந்திரன்எப்படி இயற்கையாகவே குளிரச் செய்கிருனே, அதுபோல் ஸம்ஸார தாபத்தை இயல்பாகவே அகற்றுபவர். கருணையின் இருப்பிடமானவர். தம்மை வணங்குபவர்களுக்கெல்லாம் பந்துவாக விளங்குபவர்.

இவ்விதம் அநேக மகிமை பொருந்திய குருவை நாம் வாழ்க்கையில் அடைந்து ஞான ஒளியைப்பெற வேண்டும். அப்படிப்பட்ட குருவாக இன்று நம்மிடையில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர் ஜகத்குரு சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி அவர்களே. அவர்களுடைய அருளால் இந்த அமரபாரதி பத்திரிகை அழிவில்லாத நல்ல அறிவைப் புகட்டக்கூடிய விஷயங்களை எல்லாம் விளக்கிக்கொண்டு ஸூர்ய சந்திரர்கள் உள்ள காலம்வரை பிரகாசிக்க வேண்டுமென ஆசீர்வதிக்கிருேம்.

நாராயணஸ்ம்ருதி:

# மூலப் பொருள்

## ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை. ஒருவனுக்குப் பணம் சேர்த்துப் பெரிய பணக்காரன் ஆக வேண்டும் என்ற ஆசை. இன்னொருவனுக்குத் தன் குடும்பம் நன்றாக நடக்க வேண்டுமே என்ற ஆசை. வேறு ஒருவனுக்கு நோய் நொடியின்றிச் சௌக்கியமாக வாழ வேண்டும் என்ற ஆசை. ஏதோ ஒரு சிலருக்குப் பிறவிப் பிணி நீங்கிப் பேரானந்தம் கிடைக்காதா என்ற ஆசை. ஆசை நிறைவேற முயற்சி தேவைப் படுகிறது.

முயற்சிக்குக் கல்வி உறுதுணையாகிறது. ஆனால் எது சரியான கல்வி என்பது பலருக்கும் தெரிவதில்லை. எதை அறிந்தால் எல்லா ஆசைகளும் நிறைவேறிப் பேரமைதி கிட்டும் என்பது புரிவதில்லை.

உண்மையான கல்வி மெய்ப் பொருள் அறிவைத் தருவது. அது 'வித்யை' எனப்படுகிறது. உலக வாழ்க்கைக்கு மட்டும் உதவும் கல்வி 'வித்யை' ஆகாது. பிரும்ம வித்யைதான் பரம்பொருளைக் காட்டித் தரவல்லது. பரம் பொருளில் ஊறித் திளைத்த மகான்கள் வழி காட்டி ஒளி காட்டினால் தான், நாம் பயன் பெற முடியும்.

அங்கிங்கெனாத படி எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளின் அம்சம் தான் நாம்.

விஞ்ஞானம் வளர்ந்து முதிர்ந்திருக்கும் இந்நாளில், 'பரம் பொருளை அறிந்து கொள்வதனால் என்ன பிரயோசனம்?' என்ற கேள்வி எழுவதில் வியப்பில்லை. விஞ்ஞானம் அளித்திருக்கும் பல வசதிகளையும் கண்டு மலைத்துப் போய் அடிப்படையான தத்துவத்தை மறந்து விடக் கூடாது.

விஞ்ஞானம் வளர்த்திருக்கும் அற்புதமான சாதனங்கள், அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் இன்றிக் கிடைத்திருக்க முடியுமா? இந்த மூலப் பொருள்களை விஞ்ஞானிகளால் தயார் தான் செய்ய முடியுமா? மூலப் பொருள்களைக் கொடுத்தால் விஞ்ஞானிகள் விந்தை புரிந்து காட்டுவார்கள். பொன் இல்லாமல் நகைகள் செய்ய முடியாது. நகைகள் உருவாகப் பொன் உருக



வேண்டும். பொன்னை உருக்கத் தீ தகிக்க வேண்டும். தீயின் சூட்டில் பொன்னை உருக வைப்பது எந்தத் தத்துவம்?

விஞ்ஞானப் படைப்புகளுக்கு மூலப் பொருள் தேவை, முறை தேவை; கலவையும் சேர்க்கையும் தேவை.

கடவுள் எந்த மூலப் பொருளை கொண்டு ஆதியில் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார்? மூலப் பொருள்களையே படைத்த ஆண்டவன் பெரிய படைப்பாளி என்பதில் ஐயம் இல்லை. ஒரு மலையில் கீழே விழுந்து விடுமோ என்ற நிலையில் ஒரு பாறை ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். மக்கள் அதைப் பார்த்து என்ன சொல்வார்கள்? 'இப்படிப் பாறையை அற்புதமாக அந்தரத்தில் நிறுத்தி வைத்திருப்பவன் யார்?' என்றே வியப்பார்கள். பாறை தானுகவே அங்கு தோன்றியிருப்பதாகச் சொல்ல மாட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு பொருள் அனைத்தையும் படைக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறது என்பது தானே?

அந்தப் பரம் பொருளின் அம்சமான நம்முடைய செயலாற்றல், அறிவாற்றல் எல்லாம் அற்பமானவை. ஆண்டவன் எல்லா வல்லமை பொருந்தியவனுகவும் எல்லாம் அறிந்தவனுகவும் இருப்பதால், அவனது செயலாற்றலும் அறிவாற்றலும் மகத்தானவை; முழுமையானவை.

பேரண்டத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் தன்னிலிருந்தே படைத்துத் தானும் அதில் ஓர் அம்சமாகப் புகுந்திருப்பதாக வேதம் அ[illegible]ழ் பாடுகிறது. எனவே, அவனே மூலப்பொருள். முடிவுப் பொருளும் அவனே.

அவன் அம்சமாக ஊடுருவியிருக்கும் வரை அவன் படைத்த எல்லாப் பொருள்களிலும் அவனது செயலாற்றலும் அறிவாற்றலும் இருந்தே ஆக வேண்டும். உண்மையில் நாம் பெற வேண்டிய கல்வி அவனைப் பற்றியே. அதுவே உண்மையான கல்வி.

நாம் செப்பிடு வித்தை பார்க்கிறோம். விதை நட்டு, மரம் முளைத்து,காய்காய்த்துப் பழமாக தொங்குவதைச் செப்பிடு வித்தைக்காரன் ஐந்துநிமிஷ நேரத்துக்குள் காட்டிவிடுகிறுன்; இந்திர ஜாலம் புரிந்து விடுகிறுன். நாம் நேரில் கண்ணுல் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அவன் அதை எப்படிச் செய்கிறுன் என்பது புரிவதில்லை. 'நல்ல கண் கட்டி வித்தை' என்கிறோம்.

மகேந்திர ஜாலங்கள் புரியும் பகவானைப் புரிந்து கொள்ளும் பக்குவம் நமக்கு எப்படி இருக்க முடியும்?

இந்தப் பிரும்ம வித்யையைப் பெற்றுப் பிரும்ம அநுபவம் பெறுவது தான் சிறந்த கல்வி. அதுவே நமது ஆசைகள் அனைத்தையும் சமனப்படுத்திப் பரம சாந்தியை அளிக்க வல்லது. ★

---

தூய்மை என்னும் மலர் மனத் தோட்டத்தில் மலர்கிறது.

—ஜவஹர்லால் நேரு

# அவதாரத்தின் நோக்கம்

## ஸ்ரீ. சிருங்கேரி ஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகள்

பகவானின் மகிமை ஓர் அற்புதம். ஒரு தடவை பகவானுக்கு நமஸ்காரம் பண்ணி விட்டாலே மோட்சம் கிடைத்துவிடும். நம்பிக்கை தான் வேண்டும்.

ஒரு கவி தாம் இரண்டு தவறுகள் செய்து விட்டதாகக் கூறுகிறார். "போன பிறவியில் ஒரு தவறு செய்திருக்கிறேன். அது என்ன, தெரியுமா? முந்திய பிறவியில் உள்ளன்புடன் நான் உனக்கு ஒரு நமஸ்காரம் செய்ததில்லை. செய்திருந்தால் எனக்கு இந்தப்பிறவி ஏற்பட்டிருக்காது. மோட்சம் கிடைத்திருக்கும். இந்தப் பிறவி எனக்கு ஏற்பட்டிருப்பது எதனால்? போனபிறவியில் உனக்கு நமஸ்காரம் பண்ணாததனால். இது நான் அப்பிறவியில் செய்ததவற்றுக்குத்தண்டனை தானே? எனவே, நான் ஒரு தவறு செய்திருப்பது உறுதியாகிறது.


"இப்பிறவியில் உள்ளன்போடு உனக்கு நமஸ்காரம் செய்திருக்கிறேன். இனி எனக்கு மறுபிறவி கிடையாது. மறுபிறவி இல்லாததால் உனக்கு நமஸ்காரம் செய்ய முடியாது. இது இன்னொரு தவறு. எனது இரண்டு தவறுகளையும் மன்னித்துக் கொள்!" என்கிறார்.

நமஸ்காரத்தில் திருப்தி அடைந்து மோட்சம் அளிக்கும் ஆற்றல் பகவானுக்குஇருக்கிறது. நம் அனைவருக்கும் வழிபடு தெய்வம் அவன். நமது மகிமை, நமது பெருமை, நமது பராக்கிரமம் எல்லாம் அவன் மகிமையில் ஓர் அணு மாத்திரம் தான்.

இந்தப் புவி இருக்கிறது. இது எத்தனையோ பரந்து விரிந்திருக்கிறது. இதில் ஒரு சிறு பகுதி-இரண்டொரு ஏக்கர் விஸ்தீர்ணமுள்ளநிலம் கிடைத்துவிட்டாலே நமக்கு ஆணவம் ஏற்பட்டு விடுகிறது. அகந்தை, செருக்கு, வீண் பெருமை எல்லாம் வந்து விடுகின்றன.

பிறருக்கு நாமும் தான் உதவி செய்கிறோம். ஆனால் எப்படிச் செய்கிறோம், எவ்வளவு செய்கிறோம், எப்பொழுது செய்கிறோம்?

நாம் எவனுக்கு உதவி செய்கிறோமோ, அவனால் நமக்கு ஒரு நன்மை ஏற்பட்டிருக்கவேண்டும். அதனால் நமக்குத் திருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும். அப்புறம் நமக்கு மனம் இருக்கவேண்டும். அப்படி இருக்குமானால், நம்மால்



இயன்றால் ஏதோ ஒரு சிறு உதவி செய்யத் துணிவோம். இது நமது சிறுமையைக் காட்டுகிறது.

ஆனால் ஆண்டவனின் பெருமையைப் பாருங்கள். சிறுவயதில் சேர்ந்து படித்த பொழுது ஏதோ ஒரு நட்பு குசேலருடன் ஏற்பட்டது.

குசேலரோ பரம ஏழை. கட்டிக் கொள்ளக் கந்தைத் துணிக்குமே பஞ்சம். பகவானோ சகல ஐசுவரியங்களுக்கும் அதிபதி. குசேலர் தம் சந்நிதிக்கு வருவதற்கு முன்பாகவே, தாம் எழுந்து ஓடிச்சென்று அவரை வரவேற்றார். ஆசார உபசாரங்கள் செய்து ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் அமரச் செய்தார். சாக்ஷாத் ருக்மிணிதேவி பொன் பாத்திரத்தில் நீர் கொண்டு வந்து கொடுக்க, ஏழைக் குசேலரின் கால்களைத் தாமே கழுவினார். அதைத் தம் தலையில் தெளித்துக் கொண்டு பிறவிப் பயன் கிடைத்து விட்டாற் போல மகிழ்ந்தார்.

ஆனால் நாம் என்ன செய்திருப்போம்? நம்மோடு பதினைந்து ஆண்டுகள் சேர்ந்து கல்விபயின்ற நண்பர்களை, நாம் நல்ல நிலைமையில் இருந்து கொண்டு, அவர்களைக் குசேலர் போன்ற நிலையில் இருக்கும் பொழுது பார்த்தால் என்ன செய்வோம்? கண்டும் காணாதது போல் இருந்துவிடுவோம். முகம் கொடுத்துக் கூடப் பேசமாட்டோம். இது சாதாரணமாக நமது அநுபவம். புராணங்களில் கூட இப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பதாக வருகிறது.

துருபதனும் துரோணரும் சேர்ந்து கல்வி பயின்றவர்கள். பெரியவனான பிறகு துருபதன் துரோணரை யார் என்று கேட்டானாம். துரோணர் சும்மா இருக்கவில்லை. அர்ஜுனனைச் சிஷ்யனாகத் தயார் செய்து, துருபதனைக் காதைப்பிடித்து இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தச் சொன்னாராம். 'உன் காதைப்பிடித்து இழுத்து வந்தானே, அவனுடைய குரு நான்' என்றாராம். இதை எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், தங்கள் தங்கள் அந்தஸ்தை ஒட்டி ஒருவரை ஒருவர் அலட்சியம் செய்வது அந்தக் காலத்திலும் உண்டு என்பதைத் தெளிவு படுத்தத்தான்.

துரோணர் துருபதன் நிலைக்கு நேர் எதிர்மாறு கிருஷ்ணர்-குசேலர் கதை.

நாம் நமது வாழ்க்கையில் நல்ல ஒழுக்கம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தான் பகவான் மானிடனாகத் தோன்றி, நல்ல ஒழுக்கங்களைக் கடைப் பிடித்துக் காட்டினார். இதனைக் கதையாகக் கொள்ளக் கூடாது. பகவான் தமது அவதாரகாலத்தில் நமக்கு ஆதரிசபுருஷராக விளங்கியது, நாம்கடைப்பிடிக்க வேண்டியஅறநெறிகளை அநுஷ்டித்துக் காட்டிய உண்மை நிலை என்று உணர வேண்டும்.

பகவான் பகவத் கீதையில் கூறுகிறார்.

''நான்செயலற்று ஒய்ந்திருந்து விட்டால், மக்களும் என் வழியைப் பின்பற்றிச் செயல்கள் புரியாமல் வாளா இருந்து விடுவார்கள். சான்றோர்களின் வழியைப் பின்பற்றிப் பிறரும் நடக்க முற்படுவார்கள். நான் சிறு தவறு செய்து விட்டால், அவர்களும் தவறு செய்ய முற்பட்டு விடுவார்கள். எனவே,எதுவும் தவறு செய்யாமல்ஓர் ஆதர்சமாக இருக்கவே நான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன்''

ஆண்டவனின் இந்த மகிமையைப் புரிந்து கொண்டு ஒழுகினால். அவன் நிலைமைக்கு நாமும் உயரமுடியும். இதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

# வேர்விட்ட வேத நெறி


**பிரபுதாஸ் பி. பட்வாரி**

*தமிழக ஆளுநர்*




ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் திருவருளுடன் வெளிவரும் 'அமரபாரதி' பத்திரிகைக்கு என் இதயங்கலந்த நல் வாழ்த்துக்கள்.

நமது பாரத நாடு பண்டைக் காலம் முதற்கொண்டே உலகம் முழுவதற்கும் ஒளிவிளக்காகத் திகழ்ந்து வந்திருக்கிறது. தொலை தூர நாடுகளில் உள்ள எத்தனையோ வெளிநாட்டுப் பிரமுகர்களையும் அறிஞர் பெருமக்களையும் தன்பால் கவர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் காண வெளியே செல்லத்தேவையில்லை. நமது வேதங்களதான் உலகிலேயே முதன்முதலாகத் தோன்றிய ஆதார பூர்வமான சமய நூல்கள். நமது மதம், பண்பாடு, நாகரிகங்கள், தத்துவம் எல்லாம் வேதங்களையும் அவற்றின் வழித் தோன்றலான இதிகாச புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் அடிநாதமாகக் கொண்டவை. உலகத்தின் ஏனைய நாடுகளில் உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்வதற்கு முன்பாக, சமூக அமைப்பைச் செப்பனிட்டுக் கொள்வதற்கு முன்பாக, பாரத நாட்டு மக்கள் எத்தனையோ முன்னேறி விட்டிருந்தனர். ஆன்மிகத் துறையில் மட்டும் அல்ல; விஞ்ஞான அறிவிலும் கூடத்தான். மன்னர் முதல் மக்கள் வரை பல்வேறு வகையான மக்களுக்கும் தேவையான நடைமுறை விதிகளைச் சிறப்பாக வகுத்துக் கொண்டிருந்தனர். அவை தனி மனித உறவையும் சமுதாய இணைப்பையும் உறுதிப்படுததின. குறிப்பாக அவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களின் துணை கொண்டு நின்றன. மக்களின் வாழ்க்கை கச்சிதமான இந்தச் சட்ட திட்டங்களுள் அடங்கியிருந்தது.

நமது சுதந்திரப் போராட்டத்துக்குப் பரிவோ இரக்கமோ சிறிதும் காட்டாத பிரிட்டிஷ் வைசிராய் லின்லித்கோ பிரபுகூட விஞ்ஞான நிபுணர்களின் கூட்டம் ஒன்றில் கண்ணியத்துடனும் பெருந்தன்மையுடனும் நேர்மையாக ஓர் உண்மையை ஒப்புக் கொண்டார்.

"மேல் நாட்டு நாகரிகத்தில் மிகுந்த மோகமும், ஆர்வமும், நம்பிக்கையும் கொண்டவர்கள்கூட இன்று ஓரளவு மனச்சோர்வு அடையும் நிலையில் தான் உள்ளனர். மேல்நாட்டினரின் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளால்பௌதிக, பொருளாதார வளர்ச்சி பெற்று உலகெங்கிலும் ஆதிக்கம் செலுத்த முடியும். ஆன்மிகமும் பொருளாதாரமும் இணைந்து கை கோத்துக் கொண்டு ஒருங்கே செல்லக் கூடிய சமூகத்தைப் படைக்க முடியும் என்று எண்ணிச் செயற்பட்டு அதில் ஏமாற்றமும் தோல்வியுமே கண்டனர் என்பது கண்கூடு. ஆனால் அதே நேரத்தில் இந்தியர்களோ எளிமையைக் கைக்கொண்டுபரம்பொருள்பற்றிய சிந்தனைகளிலும அக்கறை காட்டித்தத்துவவிசாரங்களில் மிகத் தேர்ந்து விளங்குகின்றனர். மேல் நாட்டு மேதைகள் இந்தப் பேருண்மையைக் கண்டறிய இப்பொழுதுதான் முனைந்துள்ளார்கள்.''

நம் பண்பாடும, நாகரிகமும் இயற்கையிலேயே சமயத்தையும் தத்துவத்தையும் ஆதாரமாகக் கொண்டவை. இதற்கு அடிப்படைக் காரணம, எவ்வளவுதான் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டாலும் அதனால் கிடைக்கும் சுகத்தை ஆத்மானந்தத்துடன்- பேரின்பத்துடன ஒப்பிடும் போது நாம் மிகவும அற்பமானதாக மதிக்கிறோம் என்பது தான். 'பேரின்பத்துக்கான மார்க்கங்கள் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்றவாறு, ஞானம், பக்தி, கர்மம், யோகம் என்று பல வகைப்படுகின்றன. ஆனால் எந்த வழியில் சென்றாலும் எல்லோரும்அடையும் லட்சியம் ஒன்றே. ஒவ்வொருவரும் தமக்கே உரிய ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதன் மூலம் பிறவிப் பயனை அடையலாம். நம் வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்குபவை ஆன்மிகக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் ஆகும். இதன் விளைவால் புராதனமாக-பரம்பரையாகக் கிடைத்துள்ள நம்முன்னோர்களின் ஆன்மிக அறிவுதான், உலகையே ஒரு குடும்பமாகப் பாவிக்கும் மகான்கள் பலரைத் தோற்றுவித்திருக்கிறது. இதுவே நாம் பெற்ற பாக்கியம். இன்றைக்கும் ஆன்மிக ஒளிக்காக உலகம்நம்மை எதிர் பார்க்கிறது என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஸ்ரீ சங்கராசாரியார் போன்ற அவதார புருஷர்களும் அவர்கள் வழிவந்த ஆசாரியர்களும், மகரிஷிகளும் முனிவர்களும் வேதக் கருத்துக்களை அநுசரித்துப் பல சாஸ்திர நூல்களை எழுதியும் நாம் வாழும் காலத்துக்கேற்ப உபதேசங்களை வழங்கியும் வருகிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறக்கலாகாது; இவை எல்லாமே வேதத்தை அடிப்படையாகக் கொண்ட நம் ஸநாதன தர்மத்துக்கு மாறாக ஒருநாளும் இருக்க முடியாது. 'ஸநாதனம்' என்றாலே நிலையானது. அழிவில்லாதது என்று பொருள்.

நம் ஹிந்து சமயம், கலை, கலாசாரம், இலக்கியம்ஆகியவற்றைப் பேணிக்காப்பதற்கென்றே வெளிவரும் 'அமர பாரதி' என்னும் பத்திரிகை மிகவும் நல்ல முறையில் நம் லட்சியங்களைப் பிரசாரம் செய்வதன்மூலம் மிக உபயோகமான சேவை புரியும்; நாம் நம் பண்டைய நல்ல பழக்க-வழக்கங்களிலிருந்து மாறாமலிருக்கவும் உதவும் என நம்புகிறோம். ★

# இன்பமாக் கடல்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## தருமை ஆதீனம்

''ஞாலம் நின்புகழே மிக
வேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம்
ஆதியே''

உலகத்தில் மக்கள் அல்லும் பகலும் ஓய்வின்றி ஓடி உழைக்கிருர்கள். உண்டதே உண்டும் கண்டதே கண்டும் இன்பங்களை அடைகின்றனர். அடைகின்ற இன்பமோ நிலையேறுடைய இன்பமாக் இல்லை. நிலைத்த இன்பம் எது? அதுதான் இறைவழிபாட்டிஞல் அடையப்பெறுவது. இறைவன் ஒருவனே பூரண இன்பக் கடலாக விளங்குபவன். முகக்க முகக்சக் குறையாத நீரையுடைய கடல்போல அன்பர்கள் நுகர நுகரக குறையாக இன்பத்தைத் தருபவஞக-இன்ப வடிவினஞக இருப்பவன். மணிவாசகப் பெருமான் 'பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா மாளா இன்பமா கடலே' என அழைத்துப் பிரார்த்தனை செய்கிருர்.

தேசிய கவியாக விளங்கியவர் பாரதியார். கலைமகளின் அருளால் விரைந்துபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். கலைமகள் பெயராகிய 'பாரதி' என்னும் பெயரையே சிறப்புப் பெயராகப்பெற்ருர். அவர் 'பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்று பாடுகிருர் நாடு சிறந்து விளங்க வேண்டுமாஞல் அந்நாட்டில் சமயமும் மொழியும் சமுதாயமும் சிறக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அவர் பாடல்கள் அவ்வவற்றிலும் மக்களை எழுச்சிபெறச் செய்கின்றன. இன்று நாடு சுதந்திர நாடாக விளங்குகிறது.

நமதுசுதந்திர நாட்டில் எவ்வளவோ இதழ்கள் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றுள் சிறுபான்மையானவையே தனி மனித வளர்ச்சிக்கும் சமுதாயவளர்ச்சிக்கும்உரிய செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன மற்றையன அவ்வளர்சசிக்குரிய செய்திகளுக்கு முழு இடம் தருவதில்லை அதஞல் மக்கள் மனம் அதில் தோய்வதில்லை. ஆதலின் படிப்போர் மனததில் நல்ல பண்பாடுகள் வளரககூடிய வகையில் செய்திகள் இடம்பெறுதல் இன்றியமையாதது. அந்த வகையில் சமுதாயம் நன்னெறியில் நிற்க அமரபாரதி இதழ் பலதுறையிலும் பணியாற்றிச் சிறந்து விளங்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

ஒருவன் மனத்தில் வழக்கமாக எழும் எண்ணங்களே, அவன் மனப்பக்குவம் எத்தகையது என்பதைப் பளிங்குபோல் எடுத்துக காட்டும் கண்ணுடியாகும். ஏனெனில் எண்ணங்களின் சாயம் ஆன்மாவுக்கும் ஏறுகின்றது. ஆகையால் எப்பொழுதும் ஆன்மாவை நல்ல எண்ணங்கள் என்னும் சாயத்தில் தோய்க்க வேண்டும். அதுவே ஆன்மீக உயர்வுக்கு வழி.

—மார்கஸ் ஔரேலியஸ்

# வேத ஒலி

## அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியார்

'வேதம் பகவானைப் போல் அநாதியானது; அழிவில்லாதது. மனித வர்க்கத்திற்குக் கிடைத்துள்ள மாபெரும் பொக்கிஷம்' என்று மனு கூறுகிறார். இதிஹாச, புராணங்கள் வேதக் கருத்துக்களையே விளக்குகின்றன. உலகப் படைப்பிற்கு வேதமே பிரமாணமாக இருந்து வருகிறதென்று வேதமே கூறுகிறது. மனுவும் இதைப் பற்றிப் பேசுகிறார். வேதக் கருத்துக்கள் கருத்தளவில் எல்லா நூல்களிலும் இருந்து வருகின்றன. வேதம் இன்றும் ஓதப்பட்டு வருகிறது.

நம் வீட்டுக் கர்மாக்களில் வேத ஒலியையே நாம் கேட்கிறோம். ஆலயங்களிலும் வேத ஒலியைக் கேட்கிறோம். இன்றும் வேதம் ஜீவகளையோடு இருந்து வருவதைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். அதனுடைய தெய்வக் களையை இன்று நாம் பல வழிகளில் அநுபவிக்கிறோம். வேதாத்யயனம் செய்ததாலேயே இராமபிரான் பெருமை பெற்றான் என்று வால்மீகி கூறுகிறார்.

வேதக் கருத்துக்களின் விளக்கத்தைக் கூறுவதாலேயே பாரதமும் ஐந்தாவது வேதமாகக் கொள்ளப்படுகிறது. இதுவரை பிராமணர்கள் அத்யயனம் செய்து பாதுகாத்து வந்தார்கள். பாராயணங்கள் மூலம் வேத ஒலி எங்கும் கிளம்பி மக்களுக்கு மங்களத்தைக் கொடுத்து வருகிறது. உலக வரலாற்றிலேயே வேதம் தனித்த பெருமை பெற்று அதிசயமாக விளங்குகிறது. இவ்வித வேதம் பிரளய காலத்தில் ஒலி வடிவாக இருந்து வந்தது.

இந்த ஒலிகளை மகரிஷிகள் தங்களுடைய தவ வலிமை மூலம் ஆகாயத்தினின்று பெறுகிறார்கள். இந்நாட்களில் வானொலிப் பெட்டி ஒலி அலைகளை ஈர்ப்பதைப் போல் மகரிஷிகள் தவத்தின் வலிமையால் வேதங்களைப் பெறுகிறார்கள். தவத்தினால் ரிஷிகளின் செவிக்கும், விண்வெளிக்கும் தொடர்ச்சி ஏற்படுகிறது. அதன் மூலம் வேதத்தை மகரிஷிகள் பெறுகிறார்கள். வேதத்தைத் தவத்தின் மூலம் பெற்று உலகிற்கு அளிப்பதாலேயே 'ரிஷி' என்ற பெயர் உண்டாகிறது. ரிஷிகள், தங்கள் சிஷ்யர்களுக்கு வேதத்தை போதித்து அத்யயன பரம்பரையில் வேதத்தை வாழச்செய்தார்கள்.

கல்பம் முடியும்வரையில் வேதம் அத்யயனத்தில் இருந்து வருகிறது. கல்ப முடிவில் அத்யயனம் செய்பவர்கள் மறையவே, வேதம் மறுபடியும் ஒலி வடிவாகிவிடுகிறது. அடுத்த கல்பத்தில் மகரிஷிகள் வேதத்தைத் தவத்தின் மூலம் மீண்டும் பெறுகிறார்கள். இதுதான் வேதத்தின் கதை.

---

சூரிய ஒளியிலும் வெப்பத்திலும் தாமரைப்பூவும் மலர்கிறது; முள்ளிப்பூவும் மலர்கிறது. மாங்கனியும் பழுக்கிறது; எட்டிக் கனியும் பழுக்கிறது. என்றாலும் அவற்றின் குண தோஷங்கள் சூரியனைத் தொடுவதில்லை.

—கடோபநிஷத்து

# இறை பற்று

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பிறப்பு முதற்கொண்டே உயிர்களைச் சில இயற்கை வேகங்கள் ஊக்கிச் செலுத்துகின்றன. அந்த வேகங்களை முற்றிலும் வழியடைத்து விட முடியாது. வழியடைப்பில் சில சமயம் லாபம் கண்டு மிதமிஞ்சி அடைக்கப் பார்த்தால் பல்வேறு நோய்களும் மனோவியாதிகளும உண்டாகும். பிரகிருதி வேகங்களுக்குச் செல்வழி காட்டாமல் வழியடைப்பது தவறு என்பது பழைய சாஸ்திரமும், புதிய நிபுணர்களும் கண்ட உண்மையாகும. பெரும் புகழ்பெற்ற ஃப்ரூட் முதலிய மானஸ தருய நிபுணர்கள் இதை மிகவும் வற்புறுத்தி வருகிறார்கள். பகவத் கீதை என்னும் பாரத தேசத்துப் பழைய சாஸ்திரத்தில், இந்த உண்மையை மிகத் தெளிவான முறையில் பல அத்தியாயங்களில் பகவான் கீதாசாரியன் விளக்கியிருக்கிறான்.

இந்த விஷயத்தில், முக்கியமாகத் தற்கால நிபுணர்களால் எடுத்துச் சொல்லப் படுவது கிராமிய வேகங்களைப்பற்றி. அதாவது இணை விழைச்சு, பாராட்டுப் பசி, அதிகாரப் பசி முதலியன. இவை, ஓரளவு அடக்கியாள வேண்டிய வேகங்கள். சகதிக்குத் தகுந்தவாறு இவற்றை அடக்கியாண்டால் பலமும் உண்மை இன்பமும் பெறலாம். இதுவே யோகம் என்பது. மிதமிஞ்சிய அளவில் வழியடைத்தால அதுவே நம்மை மோசம் செய்துவிடும்.

மிதம் எது, எந்த அளவுக்கு மேல் சென்றால் தவறு ஆகும் என்பதை அவரவர் தத்தம் சக்தியை அளந்து உணர்ந்து முடிவு செய்து கொள்ள வேண்டும். ஒருவன் தன்னுடைய உண்மைச் சக்தி எவ்வளவு என்பதை அறிவதே விவேகம் என்பது. வெளி வேஷத்துக்கு ஆசைப்பட்டுத் தன் சக்தியை அதிகமாக எண்ணிக்கொண்டு, சோதனைக்கு உள்ளாகி, நஷ்டமடைவதைப் பகவத் கீதை வேண்டாம் என்கிறது.

இயற்கை வேகங்களை வழியடைப்பது அபாயம் என்பது பொது உண்மை. அவற்றைத் தரும வழியில் செலுத்துவதே மேலான விவேகம். அப்படிச் செலுத்தினால் அளவும், வரையறையும் தாமே ஏற்பட்டுவிடும். அந்தக் கேள்வியே தோன்றாது.

இயற்கை வேகங்களில், நமக்குத் தெரிந்த வேகங்களைத் தவிர நுட்பமான வேகங்களும் உண்டு. பசி, தாகம், இணை விழைச்சு ஆகியவை நமக்கு யாரும் சொல்லாமலே நன்றாகத் தெரியும். புது ஆராய்ச்சியில் கண்ட ஓர் இயற்கை வேகம் உண்டு. அதைத்தான் இங்கே சொல்லப் புகுந்தேன்.

மக்கள் தெய்வத்தைத் தேடுவதும் பராசக்தியை நாடுவதும், ஓர் இயற்கை வேகம். உலக சரித்திரத்தைச் சரியான முறையில் ஆராய்ந்தால் இந்த உண்மை விளங்கும். தொலைக் கண்ணாடி

## பெற்றோர் கடமை

உலகத்தில் கல்விக்குள்ள பெருமையே தனி. கல்வியில்லையேல் உலகம் முன்னேற முடியாது. நற்பண்புகளைப் பெற முடியாது. எனவே, குழந்தைகளுக்கு இளமையிலேயே கல்வி புகட்டுவது அவசியம். இது பெற்ற தாய்தந்தையரின் தலையாய கடமை. தம்குழந்தைகளுக்குச் சரியான காலத்தில் உரிய கல்வியறிவு புகட்டாத பெற்றோர் அவர்களுக்குப் பரமவைரிகள் ஆவார். ஏனெனில் படிக்காத குழந்தைகளின் நிலை, அவர்களது வருங்காலத்தைப் பாதிக்கும், அன்னப் பறவைகளுக்கிடையே காக்கையின் நிலை ஆகிவிடும். தாய் தந்தையர் பிற்காலத்தில் குழந்தைகள் தங்களைத் தூற்றும் படி வைத்துக் கொள்ளக் கூடாது. —சாணக்கியர்

---

யைத் தலைகீழாக வைத்துக் கொண்டு பார்த்தால் உண்மையைக் காணமாட்டோம். பராசக்தியை நாடுவது ஒரு பெரிய இயற்கை வேகம் என்று நாம் உணரவேண்டும். சிருஷ்டிஅமைப்பில் இயற்கையாக உண்டாகிய வேகம். இதை வழியடைப்பது நோய்களுக்குப், சித்தக் கோளாறுகளுக்கும் காரணமாகும். அவிவேகிகளும் லோகாயதர்களுமேயன்றி ஞானிகள், சித்தர்கள், இத்தகையவர்களுங்கூட முடிவில் பக்தி மார்க்கத்தில் சுகமும், சந்தோஷமும் காணுவது இந்த வேகத்தின் ரகசியமே. காந்தம் இரும்பை இழுப்பது போல், கற்பூரம், நெருப்பைத் தேடுவது போல், மின் சக்தி எப்பொழுதும் பூமியில் குதித்து மறையக் காத்திருப்பது போல், உயிரானது தான் பிரிந்த தெய்வத்தைத் தேடுகிறது. இதுவும் ஒரு இயற்கைப் பசி. வியக்தமாக விளக்கப் புகின், ஆண் பெண்ணைத் தேடுவதைப்போல், உயிர் தெய்வத்தைத் தேடுகிறது. பார்க்கப் போனால் இரண்டும் சமமான பேரிரகசியங்கள். ஆழ்ந்து யோசித்தால், இதன் உண்மை தெளிவாகும் தெரியாததைத் தெரிந்ததாக எண்ணிக் கர்வப்பட்டால் தெரியாது.

உயிரானது தெய்வத்தின் மேல் சாயும் இயற்கைப் போக்கை, அடக்கியாள்வது ''புருஷப் பிரயத்தினம்'' என்று கூறப்படும். அளவுக்குள் நின்றால் இந்த வழியடைப்பு, பகுத்தறிவு, விவேகம், தன்னம்பிக்கை என்றெல்லாம் பெயரும், வடிவமும் பெறும். அளவுக்கு மிஞ்சினால் அவிவேகம், பழி, பாவம் இவற்றில் முடியும். இந்த நியதியை அறியாமல் நடந்து கொள்வதும், நடந்து கொள்ளத் தூண்டுவதும் பெருந் தவறு.

அரை குறையாகப் படித்த படிப்பு மக்களை ஏமாற்றும். மேல் நாட்டில் பௌதிக ஆராய்ச்சியில் உச்சஸ்தானம் பெற்றவர்களும் தெய்வத்தை நாடியே அடக்கத்துடனும், மிக்க பக்தியுடனும் நடந்து கொள்கிறார்கள். நாம் காணும் எந்தப் பொருளிலும் அளவுக்கடங்காத சக்தி மறைந்து கிடக்கிறது. அதுவே தேவி, பராசக்தி, பகவதி, ஈசுவரி என்று நம் முன்னோரும், பாரதியும், காந்தியும் வணங்கியது. எந்த உருவமும் தேவியினுடைய கோயிலாகும். ★

WITH THE BEST COMPLIMENTS

FROM

# NALLI CHINNASAMI CHETTY

**Silk Cloth and Piece Goods Merchants**

**No. 9, NAGESWARA RAO ROAD**

THYAGARAYANAGAR

**MADRAS 600 017.**

Phones : **444115 445657**

Grams : **'NALLICO'**

# திருவருளும் குருவருளும்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒரு பெரியவர் அரசமரத்தின் கீழ் அமர்ந்து கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தார். அங்கே ஒரு மாணவன் சென்றான். அம்மாணவன் மிடுக்கும், சொல்துடுக்கும் உடையவனாகக் காட்சியளித்தான். ''ஐயா! பெரியவரே! ஏன் உட்கார்ந்து கொண்டே தூங்குகின்றீர்? சுகமாகப் படுத்து உறங்கும்'' என்றான்.

''தம்பீ! நான் உறங்கவில்லை. கடவுளைத் தியானிக்கிறேன்.''

''ஓ! கடவுள் என்று ஒன்று உண்டா? ஐயா! நான் எம். ஏ. படித்தவன். நான் மூடன் அல்லன். நூலறிவு படைத்தவன். கடவுள் கடவுள் என்று கூறுவது மூடத்தனம். கடவுளை நீர் கண்ணால் கண்டிருக்கின்றீரா?''

''தம்பீ, காண முயலுகின்றேன்.''

''கடவுளைக் கையால் தீண்டியிருக்கின்றீரா?''

''இல்லை.''

''கடவுளின் குரலைக் காதால் கேட்டிருக்கின்றீரா?''

''இல்லை.''

''கடவுள்மீது வீசும் மணத்தை மூக்கால் முகர்ந்திருக்கின்றீரா?''

''இல்லை.''

''ஐயா! என்ன இது மூட நம்பிக்கை? உம்மை அறிவற்றவர் என்று கூறுவதில் என்ன தடை? கடவுளைக் கண்ணால் கண்டதில்லை, மூக்கால் முகர்ந்ததில்லை; கையால் தொட்டதில்லை; காதால் கேட்டதில்லை; இல்லாத வொன்றை இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு அரிய நேரத்தை வீணடிக்கிறீரே? உம்மைக் கண்டு நான் பரிதாபப்படுகிறேன். உமக்கு வயது முதிர்ந்தும் மதிநலம் முதிரவில்லையே? பாவம்! உம்போன்றவர்களைக் காட்சிச் சாலையில் வைக்கவேண்டும். கடவுள் என்றீரே? அது கறுப்பா, சிவப்பா?''

''அது சரி, தம்பீ! உன் சட்டைப் பையில் என்ன இருக்கின்றது?''

''தேன் பாட்டில்.''

''தேன் இனிக்குமா, கசக்குமா?''

''என்ன ஐயா! இதுகூட உமக்குத் தெரியாதா? சுத்த மக்குப் பிண்டமாக இருக்கின்றீர். உலகமெல்லாம் உணர்ந்த தேனை இனிக்குமா கசக்குமா என்று வினவுகின்றீரே, உணவுப் பொருள்களிலேயே தேன் தலைமை பூண்டது. இது அருந்தேன். இதை அருந்தேன் என்று எவன் கூறுவான்? அதற்காக இருந்தேன் என்பான். தேன் தித்திக்கும். இதை எத்திக்கும் ஒப்புக் கொள்ளும்.''

''தம்பீ! தித்திக்கும் என்றனையே, அந்த இனிப்பு கறுப்பா,

சிவப்பா! சற்று விளக்கமாக விளம்பு, நீ நல்ல அறிஞன்.''

மாணவன் திகைத்தான். தித்திப்பு என்ற ஒன்று கறுப்பா சிவப்பா என்றால், இந்தக் கேள்விக்கு என்ன விடை கூறுவது என்று திக்கித் திணறினன்.

''ஐயா! தேனின் இனிமையை எப்படி இயம்புவது? இதைக் கண்டவனுக்குத் தெரியாது! உண்டவனே உணர்வான்.''

பெரியவர் புன்முறுவல் பூத்தார். ''அப்பா! இந்தப் பௌதிகப் பொருளாக, ஜடவஸ்துவாகவுள்ள தேனின் இனிமையையே உரைக்க முடியாது, உண்டவனே உணர்வான் என்கின்றனையே? ஞானப் பொருளாக, அநுபவவஸ்துவாக விளங்கும் இறைவனை அநுபவத்தால் தான் உணர்தல் வேண்டும்.

'தேனுக்குள் இன்பம்
 கறுப்போ? சிவப்போ?
வானுக்குள் ஈசனைத்
 தேடும் மதியிலீர்!
தேனுக்குள் இன்பம்
 செறிந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன்
 ஒளிந்திருந்தானே!'

என்கிறார் பரம ஞானியாகிய திருமூலர்.''

மாணவன் வாய் சிறிது அடங்கியது. ''பெரியவரே! எனக்குப் பசிக்கிறது. சாப்பிட்டு விட்டு வந்து உம்முடன் உரையாடுவேன்.''

''தம்பீ! சற்று நில். பசி என்றனையே, அதைக் கண்ணுல் கண்டிருக்கின்றனையா?''

''இல்லை.''

''பசி பேசுவதைக் காதால் கேட்டிருக்கின்றனையா?''

''இல்லை.''

''பசியை மூக்கால் முகர்ந்திருக்கின்றனையா?''

''இல்லை.''

''பசியைக் கையால் தொட்டிருக்கின்றனையா?''

''இல்லை.''

''என்ன தம்பீ! உன்னை அறிஞன் என்று நீயே கூறிக் கொள்கிறாய். பசியைக் கண்ணுல் கண்டாயில்லை, காதால் கேட்டாயிலலை, மூக்கால் முகர்ந்தாயிலலை; கையால் தொடடாயில்லை; அபபடியிருக்க அதை எப்படி நமபுவது? பசி பசி என்று உரைத்து உலகத்தை ஏமாற்றுகின்றாய். பசி என்று ஒன்று கிடையவே கிடையாது. இது சுததப் பொய். பசி என்று ஒன்று இருக்கிறது என்று கூறுபவன் முட்டாள். உனக்கு இப்போது புரிகின்றதா? பசி என்ற ஒன்று அநுபவப் பொருள், அது கண்ணுல் காணக் கூடியதனறு. அதுபோல்தான் கடவுளும் அநுபவப் பொருள், அதைத தவஞ் செய்து மெய்யுணர்வினுல் உணர்தல் வேண்டும்.''

மாணவன் உடம்பு வேர்த்தது, தலை சுற்றியது. பெரியவர் கூறுவதில் உண்மை உள்ளது என்பதை உணர்ந்தான்.

''என் அறியாமையை உணர்கின்றேன், இருந்தாலும் ஒரு சந்தேகம், கடவுளைக் கண்ணுல் காண முடியுமா?''

''உன் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன் ஒரு கேள்வி,

தம்பி! இந்த உடம்பை நீ கண்ணால் பார்க்கின்ருயா?''

''என்ன ஐயா! என்னைச் சுத்த மடையன் என்று கருதுகின்றீர்? எனக்கென்ன கண் இல்லையா? இந்த உடம்பை எத்தனையோ காலமாகப் பார்த்து வருகிறேன்.''

''தம்பீ! நான் உன்னை மூடன் என்று ஒருபோதும் கருதமாட்டேன். நீ அறிஞன்தான். ஆனல் அறிவில் விளக்கநதான் இல்லை. கண் இருந்தால் மட்டும் போதாது. கண்ணில் ஒளியிருக்க வேண்டும். காது இருந்தால் மட்டும் போதுமா? காது ஒலி கேட்பதாக அமைய வேண்டும். அறிவு இருந்தால் மட்டும் போதாது. அதில் நுட்பமும் திட்பமும் அமைந்திருத்தல் வேண்டும். உடம்பை நீ பார்க்கின்ருய். இந்த உடம்பு முழுவதும் உனக்குத் தெரிகின்றதா?''

''ஆம். நன்ருகத் தெரிகின்றது.''

''அப்பா! அவசரப்படாதே. எல்லாம் தெரிகின்றதா?''

''என்ன ஐயா! தெரிகின்றது, தெரிகின்றது என்று எத்தனை முறை கூறுவது? எல்லாந்தான் தெரிகின்றது.''

''அப்பா! எல்லா அங்கங்களும் தெரிகின்றனவா?''

''ஆம்! தெரிகின்றன.''

''முழுவதும் தெரிகின்றதா?''

அவன் சற்று எரிச்சலுடன் உரத்த குரலில், ''முழுவதும் தெரிகின்றது'' என்ருன்.

''தம்பீ! உடம்பின் பின்புறம் தெரிகின்றதா?''

மாணவன் விழித்தான்.

''ஐயா! பின்புறம் தெரியவில்லை.''

''என்ன தம்பீ! முதலில், தெரிகின்றது தெரிகின்றது என்று பன்முறை பகர்ந்தாய். பின்னே பின்புறம் தெரியவில்லை என்கின்ருய். நல்லது, முன்புறம் முழுவதுமாவது தெரிகின்றதா?''

''முன்புறம் முழுவதும் தெரிகின்றதே!''

''அப்பா! அவசரங்கூடாது. முன்புறம் எல்லாப் பகுதிகளையும் காண்கின்றனையா? நிதானித்துக் கூறு......''

''எல்லாப் பகுதிகளையும் காண்கின்றேன்...எல்லாம் தெரிகின்றது.''

''தம்பீ! இன்னும் ஒருமுறை சொல். எல்லாம் தெரிகின்றதா? நன்கு சிந்தனை செய்து சொல்!''

''ஆம்! நன்ருகச் சிந்தித்தே சொல்கின்றேன். முன்புறம் எல்லாம் தெரிகின்றது.''

''தம்பீ! முன்புறத்தின் முக்கியமான முகம், தெரிகின்றதா?''

மாணவன் துணுக்குற்ருன். நெருப்பை மிதித்தவன் போல் துள்ளினன். தன் அறியாமையை உன்னி உன்னி வருந்தலானன்.

தணிந்த குரலில் பணிந்த உடம்புடன், ''ஐயனே! முகம் தெரியவில்லை!'' என்ருன்.

''குழந்தாய்! இந்த ஊன உடம்பில் பின்புறம் முழுதும் தெரியவில்லை. முன்புறத்தில் முக்கியமான முகம் தெரிய

வில்லே. நீ இந்த உடம்பில் சிறிதுதான் கண்டனே. கண்டேன் கண்டேன் என்று பிதற்றுகின்றாய், அன்பனே! இந்த உடம்பு முழுவதும் தெரியவேணுமானால் என்ன செய்ய வேண்டும், சொல்!''

''ஐயனே! இரு நிலைக் கண்ணாடிகளின் இடையே நின்றால் உடம்பு இருபுறங்களும் தெரியும்.''

''தம்பீ! இந்த ஊன உடம்பை முழுவதும் காண்பதற்கு இரு நிலைக் கண்ணாடிகள் தேவைப்படுவதுபோல், ஞானமே வடிவாய் உள்ள கடவுளைக் காண்பதற்கும் இரு கண்ணாடிகள் வேண்டும்.''

''ஐயனே! அந்தக் கண்ணாடிகள் எந்தக் கடையில் விற்கின்றன? சொல்லுங்கள். இப்போதே வாங்கிவருகின்றேன். பெல்ஜியத்தில் செய்த கண்ணாடியா?''

''அப்பனே! அவை பெல்ஜியத்தில் செய்ததன்று. வேதாகமத்தில் விளைந்தவை. ஞானமூர்த்தியைக் காண இரு நிலைக் கண்ணாடிகள் வேண்டும். ஒரு கண்ணாடி திருவருள், மற்றொன்று குருவருள். இந்தத் திருவருள் குருவருள் என்ற இரு கண்ணாடிகளின் துணையால் ஞானமே வடிவான இறைவனைக் காணலாம்.

''தம்பீ! திருவருள் எங்கும் நிறைந்திருப்பினும் அதனைக் குருவருள் மூலமே பெற வேண்டும். திருவருளும் குருவருளும் இறைவனைக் காண இன்றியமையாதவை.''


# அமரபாரதி

12, கிழக்குத் தெரு, மேற்கு சி. ஐ. டி. நகர், சென்னை 600 035.

## விளம்பர விகிதங்கள்

| | | |
|---|---|---|
| முழுப் பக்கம் | ... | ரூ. 300-00 |
| அரைப் பக்கம் | ... | ரூ. 150-00 |
| * உள் அட்டை | ... | ரூ. 350-00 |
| * வெளி அட்டை | ... | ரூ. 400-00 |

*கலர் விளம்பரங்கள் ஒவ்வொரு கலருக்கும் 25% தனிக்கட்டணம்

உ

# அமரபாரதி

## ஆன்மிக, கலாசார, இலக்கிய மாத இதழ்

ஸ்ரீ காஞ்சி முனிவர் சூட்டி அருளிய **'அமரபாரதி'** என்னும் பெயரில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின்** அநுக்கிரக பலத்தோடு தோன்றும் இப்புதிய மாத இதழுக்கு அறச்சான்றோர்களின் ஆசியும் கிடைத்துள்ளது. இதன் தொண்டு சிறந்து பெருக **வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள்** அனைவருடைய ஒத்துழைப்பையும் கோருகிறோம்.

எல்லா விவரங்களுக்கும், தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**அமரபாரதி**
12, கிழக்குத் தெரு,
மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை 600 035.

**சந்தா விவரம் :** தனிப்பிரதி விலை ரூ. **1-50**
ஆண்டுச் சந்தா ரூ. **17-00**
ஆயுள் சந்தா ரூ. **250-00**

---

மானேஜர்
**அமரபாரதி**
சென்னை 600 035.

ஐயா,

இத்துடன் அமரபாரதிக்கான ஆண்டுச் சந்தா ரூ. **17** / ஆயுள் சந்தா ரூ. **250** மணியார்டராக / டிராப்டாக அனுப்பியுள்ளேன். எனக்கு / என் சார்பாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு......................மாதத்திலிருந்து 'அமரபாரதி' இதழ்களை அனுப்பவும்.

..............................................................

..............................................................

..............................................................

தங்கள்,



# படியாய்க் கிடப்பவர்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

''வேடிக்கையான ஒரு செய்தி நிகழ்ந்திருக்கிறது, பாருங்கள்! கன்னங்கரிய நஞ்சை உண்கிறவனுக்கு உடம்பில் நீலம் பாரிக்கும் என்பர்; வெண்ணெய்போல் வெளுத்த அமுதம் உண்பவனுக்கு மேனி வெளுக்கும் என்பர். ஆனால், கடலைக் கடைந்தபோது நடந்தது என்ன? விஷமும் அமுதமும் ஒரே கடலிலிருந்து தோன்றின. நஞ்சையுண்டான் மகாதேவன்; மேனி கறுத்தது திருமாலுக்கு! அமுதமுண்டான் திருமால்; திருமேனி முழுக்க வெளுத்தது சங்கரனுக்கு! சிவன் உயர்ந்தவனா, விஷ்ணு உயர்ந்தவனா என்று சச்சரவிடும் மூடர்களே, இது ஏன் இப்படி ஆயிற்று, சொல்லுங்கள்'' என்று கேட்கிறார் ஒரு பக்தர்.

சண்டைக்காரர்கள் திகைக்கிறார்கள். அடியவரே விடையளிக்கிறார்—''அரன் வேறு, அரி வேறு அல்ல, நண்பர்களே! இருவரும் சேர்ந்து ஒருவரே. நாராயணன் அமுதமுண்ணக் கண்டு களித்தான் பரமசிவன்; அவன் மேனி முழுவதும் வெளுத்தது. கொடிய ஹலாஹல விஷத்தைச் சிவபெருமான் விழுங்கியதுமே, திருமாலின் நெஞ்சம் கலங்கித் துடித்து வருந்தியது; நஞ்சின் விளைவு, அரியின் மேனியில் ஏற்பட்டது; அவன் கரிய திருமேனியன் ஆனான். எனவே, நான் சொல்வதைக் கேளுங்கள். 'ஹரி ஹரா, நாராயணா சிவசங்கரா' என்று போற்றுங்கள்!'' என்கிறார்.

இப்படிச் சொன்ன பக்தர் யார் என்பது தெரியுமா? பண்டரபுரத்தில் ஞானதேவர் தோற்றுவித்த பாகவத சம்பிரதாயத்தில் வந்தவர் இவர். சிவ-விஷ்ணு-பேதத்துக்கு இங்கு இடமில்லை. சிவபெருமானது இலிங்கமே விட்டலனுக்குச்கிரீடமாக அமைந்தது என்பது ஐதிகம். ஆண்டவனுடைய அடியார் அனைவரும் ஒரே குலத்தினர்; இது தொண்டர் குலம்; இறைவனைத் தொழுகிற குலம்; இங்கு எவ்வகையான வேறுபாட்டுக்கும் இடமில்லை

இறைவனின் நாமமகிமையில் பெரிதும் ஈடுபட்டவராதலால், இந்தப் பக்தருக்கு நாமதேவர் என்று பெயர் ''நாம

ஸங்கீர்த்தனமே பக்திக் கோயிலின் கோபுரவாசல். அது முழுமதிபோல மகிழ்ச்சியளிப்பது; புண்ணிய தீர்த்தம் அனைத்துக்கும் மேலான தீர்த்தம்; மந்திரங்களுக்குச் சிகரமான மந்திரம்; குறைவற்ற இன்ப இல்லம்; விடுதலைக்குப் பிறந்தகம்; இதை விஞ்சும் ஜப தபம் 'ஏதுமில்லை' என்பது இவர் கொள்கை.

நாம கீர்த்தனத்தினால், நாம் மட்டுமல்ல, தேவனும் களிக்கிறான். தேவனுக்கும் சில சமயம் இல்லாத வல்லமை அவன் திருநாமத்துக்கு உண்டு. 'மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ! நின் நாமம் கற்ற ஆவலிப் புடைமை கண்டாய், அரங்கமா நகருளானே!' என்று பாடினார் தொண்டரடிப் பொடியாழ்வார், திருமாலை முதற் பாட்டிலே. 'அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும், திரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே' 'என்கிறார் ஓர் வைணவ ஆசிரியர். எனவே, நாமதேவர் கூறுகிறார்—

''ஆண்டவனே! நீ ஒளிந்து கொண்டு எங்களுக்குத் தரிசனம் தரா விட்டாலும் கவலையே இல்லை. உன் பெயரை நீ எங்கே கொண்டு ஒளிப்பாய்? உன் திருநாமங்களையே நாங்கள் அல்லும பகலும் பாடுவோம்.''

இறைவன் பெயரை யாரும் போற்றலாம்; இதனால் ஐயமும் அச்சமும் துயரமும் நீங்கி, ஆன்மிக இன்பம் கிடைக்கிறது.

கி. பி. 1270-ல், பண்டரபுரத்தில், தையற்காரர் குலத்தில் உதித்தவர் நாமதேவர். வழிவழியாக விட்டலனிடம் பேரன்பு கொண்ட குலம் அது. எனவே அறியாக் காலம் முதல், இவரிடம் அன்பு செய்வித்து இவரை ஆட் கொண்டான் பரமன். கோவிலில் கடவுள், அடியார் இடும் நைவேத்தியத்தியத்தைப் புசிப்பதாக இவர் கருதியிருந்தார். தந்தை ஒரு நாள் வெளியூர் சென்றிருந்த போது, நாமதேவர் தாமே பூஜைசெய்து, விட்டலனுக்கு நைவேத்தியம் அர்ப்பணித்தார். அவன் உண்ணாமல் இருக்கவே அழுது அழுது, அவன் காலில் உயிரை விடுவதாக ஆணையிட்டு, அவனை உண்ண வைத்தார். இந்தப் பக்தச் சிறுவர்: இறைவன் இவரிடம் ஆவலுடன் தானே வந்து பேசுவதுண்டு என்பர்.

இத்தகைய பெருமை வாயந்த நாமதேவர், கடவுளைக் கண்டும் திருப்திபெறவில்லை. பதின்மூன்று —பதினான்காம் நூற்றாண்டுகளில், மத வேறுபாடுகள் எங்கும் தலைதூக்கியிருந்தன. அலாவுதீன் கில்ஜீ தெற்கே படையெடுத்த காலம்; நாட்டினரிடையே ஒற்றுமை இல்லை; சைவ—வைஷ்ணவ பேதம்; பௌத்த—ஜைனப் போராட்டம். இத்தகைய தருணத்தில், போக்குவரவு வசதிகள் இல்லாத காலத்தில் நாமதேவர் பண்டரபுரத்திலிருந்து பஞ்சாப் வரையில் எங்கும் நடந்தே யாத்திரை செய்து, பக்திநெறியைப் பரப்பினார். பஞ்சாபில் 'கோமான்' என்ற ஊரில் 'தேஹரா-ராஸாஹேப்' என்ற பெயரில், இவரது நினைவுக் கோயில் இன்றும் விளங்குகிறது. மராட்டி மொழியில் இவர் பாடிய ஆயிரக்கணக்கான அபங்கங்கள் ஒரு புறம் இருக்க, மறுபுறம் ஹிந்தியில் இவர் பாடி

யுள்ள 62 கீர்த்தனைகள், சீக்கிய ரின் தெய்விகப் பெருநூலான "க்ரந்தஸாஹேபி'ல் இடம் பெற்றிருக்கின்றன.

பெயரும் உருவமுமுள்ள ஸகுணப் பிரம்மத்தினிடம் முதலில் பற்றுக் கொண்டிருந்த நாமதேவர், பிறகு நிர்க்குணப் பிரம மததில் ஈடுபாடு கொண்டார். 1291 இல், இவர் ஆளந்தி என்ற ஊருக்கு வந்தபோது, விஸோபா கேஸர் என்ற மகாத்மாவைச் சந்தித்தார். நாகநாதரது கோவிலில், சிவலிங்கத்தின் மீது காலை வைத்துக் கொண்டு, விஸோபா படுத்திருந்தார். இந்த அபசாரத்தைக் கண்டு திடுக்கிட்ட நாமதேவர், அவரை எழுந்திருக்கச் சொன்னார்.

"நான் கிழவன்; கால் துவண்டிருக்கிறது. சிவன் இல்லாத பக்கமாக நீயே என் காலை எடுத்து வை" என்றார் விஸோபா.

நாமதேவர் அவரது காலை வேறிடத்தில் நகர்த்த முயன்ற போது, எங்கும் சிவலிங்கங்களே புலப்பட்டன. அன்றையிலிருந்து 'ஆண்டவன் எங்கும் பரந்தவன்' என்ற உண்மையை நாமதேவர் உணரலானார். பக்தியுடன் ஞான யோகமும் கலந்தது. மணணிலும் நீரிலும், மரத்திலும் கல்லிலும் எங்கும் கடவுள கரந்து பரந்திருப்பதை இவர் கண்டார்.

"விட்டலன் இங்கும் இருக்கிறான், அங்கும் இருக்கிறான். அவன் இன்றி உலகமில்லை. காணுமிடமெங்கும் அவன் வியாபித்திருக்கிறான். ஆகையால் நாமதேவனை அடியேன் அவனை எல்லா இடத்திலும் வணங்குகிறேன்'' என்று இவர் பாடினார்.

எங்கும் ஆண்டவனைக் காண்பவனுக்கு, அனைத்து துயிரும் சமமே அல்லவா? எனவே, இவர் எல்லாரையுமே பிரம்ம தரிசனத்துக்குக் கூவி அழைக்கிறார்—"அடே தம்பீ! உயர்ந்த அரிய மனிதப் பிறவி பெற்றிருக்கிறாய்; இதை நல்ல வழியில் பயன்படுத்து, ஏன் இப்படி முட்டாளாக ஏமாறுகிறாய்? அடே குருடனே! சம்சாரமாகிய இந்தக் காட்டில் தீப் பற்றி எரிகிறதே! எதை நம்பி நீ தூங்குகிறாய்? மனமெனும் பறவையே! இந்த உலகம் மாயவலை; இதில் சிக்கித் தவித்து நீ துயருற வேண்டாம்.''

வடநாடு முழுவதும் சுற்றி, பாகவத பக்திச் செல்வத்தை அள்ளி வழங்கிய நாமதேவருக்கு, எண்பதாவது வயதில், தம் குலதெய்வம் விட்டலனது நினைவு வருகிறது. இருபத்தெட்டு யுகங்களாக, விட்டலன், தனனை நோக்கி வரும் அடியவர்களை அணைத்துக் கொள்ள ஒற்றைச் செங்கல்மேல் நின்று காத்திருக்கிறான். அவனது இடப் பக்கத்தில், திவ்ய சோபையுடன் விளங்குகிறாள், ருக்மிணி தேவி. அவனது திருவடியருகில், உலகைக் காக்கவே பெருகியோடுகிறது, புனிதமான பீமாநதி. இந்த விட்டலனைக் காணத் துடிக்கிறார் நாமதேவர்.

"பண்டரபுரத்தில் வாசம்; சந்திரபாகையில் ஸ்நானம்; விட்டோபாவின் தரிசனம்—இதுவே பிறவிதோறும் நான் வேண்டுவது, ஸ்ரீஹரி! உதட்டில் உனது நாமஜபம, கண்ணால் பக்தர்களின் தரிசனம், 'மக்களிடம் மாதேவன் இருக்கிறான்' என்ற உணர்வு உள்ளத்திலே—இதுவே நான் வேண்டுவது'' என்கிறார்.

**உதவுங்கள்**

ரோமாபுரியில் புகழ் வாய்ந்த ஓர் ஓவியர் இருந்தார். ஒருநாள் அவர் தம் சிறந்த ஓவியம் ஒன்றை நாற் சந்தியில் வைத்தார். அதன் கீழ் ஒரு குறிப்பும் எழுதித் தொங்கவிட்டார்:

"கலையுணர்வு மிகுந்த ரசிகர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த ஓவியத்தில் எங்கேயாவது குறை பாடு தோன்றினால் அடையாளக் குறி இடுங்கள். திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும்."

மாலைக்குள் ஓவியம் முழுவதும் குறிகளால் நிறைந்து வழிந்தது,நட்சத்திரம்பூத்த வானம் போல!

மனம் உடைந்த ஓவியர், மறுநாள்இன்னொருகாரியம் செய்தார் வேறு ஓர் ஓவியத்தை நாற் சந்தியில் கொண்டு வைத்துக் கீழே குறிப்பு எழுதினார்:

"இவ்ஓவியத்தில் ஏதாவது குறைபாடு கண்டால், தயவு செய்து அதைத் திருத்தி உதவுங்கள்.பேருதவியாயிருக்கும்.!"

ஒரு வாரம் அந்த ஓவியம் அங்கேயே தொங்கியது. அதில் எங்கேயாவது சிறு கோடோ அடையாளமோ துருவித் துருவிப்பார்த்தும் கிடைக்கவில்லை.

---

வயது எண்பது நிறைந்து விட்டது. உடல் கூளமாயிற்று. விட்டலனின் கோவில் வாசலில் கடைசி மூச்சை விடும் பேராவலுடன் திரும்பி வருகிறார் நாமதேவர். விட்டலனின் கோயில் நெருங்கியது.

'வேங்கடவா! நின் கோயிலின் வாசலில் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே!" என்று வேண்டினார், குலசேகரப் பெருமான். இன்றும் திருமால் கோவிலில் கருவறை வாசலில் இருக்கும் படிக்குக் 'குலசேகரன் படி' என்றே பெயர்.

நாமதேவரும் கோவில் வாசலில் நின்று, "கோவிலுக்குள் போய்வருகிற தொண்டர்களின் திருவடிப்பொடி என்மேல் விழும் படி, கடைசிப் படியில் என் உயிர் நீங்க வேண்டும்" என்று இறைவனிடம் வேண்டிக்கொண்டார். 'எங்கே நான் சென்றாலும் நீ என தோழன்; கைப்பிடித்தே என்னை வழிநடத்திச் செல்வாய்' என்ற கருத்துடன், தள்ளாடியபடியே, ஒவ்வொரு படியாக ஏறினார். கடைசிப் படியில் இவர் திருவடியை வைத்த பொழுது, இவரது ஆன்மா இறைவனுடன் கலந்தது.

பண்டரபுரத்தில் விட்டலன் கோவில் முன்புள்ள கருங்கற் படியை இன்றைக்கும் 'நாமதேவர் படி' (நாமதேவாசீ பாயரீ) என்றே வழங்குகிறார்கள். 'ஜனங்களிடம் ஜனார்த்தனன் இருக்கிறான்' (ஜனீ ஜனார்தன) என்ற ஆன்ம நேய உணர்வை எங்கும் உணர்த்திக் கடவுள் அன்பில் திளைத்து அவனுடன் ஒன்றிய நாமதேவர், இன்றும் விட்டலன் கோவில் படிக்கட்டாக விளங்கி, 'எல்லோரும் ஓரினம்' என்ற கொள்கையை எங்கும் பரப்பிக் கொண்டே, இறைவனது திருநாமங்களைப் பாடிப் பாடி அவர் உருவினைக் கண்ணாரக் கண்டு கொண்டுகளிப்புடன் வாழ்கிறார்.

# தியாகராஜ ஸ்வாமியின் ஸம்ஸ்கிருத கிருதிகள்

டி. எஸ். பார்த்தசாரதி

ஜயதேவ ஸ்வாமி இயற்றிய கீத கோவிந்த காவியத்தில் காணப்பெறும் அஷ்டபதிப் பாடல்களே இந்திய ஸங்கீதத்தில் முதன் முதலாக வடமொழியில் இயற்றப்பட்ட இசை வடிவங்கள் என்று கருதப்படுகின்றன. கர்நாடக ஸங்கீதத்தில் தியாகராஜ ஸ்வாமிகளின் காலத்திற்கு முன்னேயே வடமொழி வாக்கேயகாரர்கள் பலர் இருந்திருக்கின்றனர். இவர்களுள் முக்கியமாக மார்க்கதர்சி சேஷய்யங்கார், நாராயண தீர்த்தர், ஸதாசிவ ப்ரஹ்மேந்திரா, ஸ்ரீதர அய்யாவாள், உபநிஷத பிரஹ்மம் ஆகிய பெரியோரைக்கூறலாம்.



தியாகராஜருடைய தாய்மொழி, தெலுங்கு ஆனால் அவருடைய கீர்த்தனைகளில் பெரும்பான்மையும், இரு இசை நாடகங்களும் அம்மொழியிலேயே இயற்றப்பட்டுள்ளன. ஆயினும் அவருடைய கிருதிகளுள் அறுபதுக்கு மேற்பட்டவை முழு ஸம்ஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து அவர் வடமொழியிலும் சிறந்த புலமைபெற்றிருந்தார் என்பது தெளிவாகிறது. ஸ்வாமியினுடைய வடமொழிப் பயிற்சியைப் பற்றி நமக்கு நிச்சயமாக ஒரு விவரமும் கிடைக்கவில்லை. அவருடைய தந்தையாகிய ராமப்ரஹ்மம் அவர்களே ஒருசிறந்த பண்டிதராகவும் வால்மீகி ராமாயணப் ப்ரசங்கியாகவும் இருந்ததால் தியாகராஜர் அவரிடமேவடமொழி பயின்றிருக்கக் கூடும். திருவையாற்றிலுள்ள ராஜா ஸம்ஸ்கிருத கலாசாலையில் அவர் மாணாக்கராக இருந்ததாகச் சில வரலாறுகள் கூறுகின்றன. இது எப்படியிருப்பினும், தியாகராஜருக்கு வடமொழியில் சிறந்த பாண்டித்தியம் இருந்ததென்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. அவருடைய முழு வடமொழி கிருதிகளைத்தவிர, அநேக

தெலுங்கு கீர்த்தனைகளிலும் சரணங்கள் அனைத்துமே வடமொழியில் அமைந்துள்ளன.

தியாகராஜருக்குச் சம காலத்தவர்களாகிய முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமாசாஸ்திரி முதலியோரும் வடமொழியில் கிருதிகளை இயற்றினர். தீக்ஷிதர் அவர்களின் கிருதிகள் அனைத்துமே (ஓரிரண்டைத் தவிர) ஸம்ஸ்கிருதத்தில் அமைந்தவை. ஒவ்வொருவரிடமும் ஒரு தனி நடை அமைந்திருந்தது. தியாகராஜ ஸ்வாமிகளின் வடமொழி கிருதிகளில் அமைந்துள்ள யதி ப்ராஸ அழகுகளும் ஓசைநயமும் ஒப்பற்றவை. "ஜகதாநந்தகாரக" 'வரலீலகானலோல' போன்ற கிருதிகளில் அவருடைய வடமொழிக் கற்பனை அபாரமாகப் பெருகியுள்ளது. இவற்றிலுள்ள பல நீண்ட ஸமாஸங்கள் அவருடைய கற்பனையிலேயே உதித்தவை.

0 0 0 0

செயலூக்கம் உள்ளவர்கள் சாதனத்தைத் தேடிச் செல்வதில்லை. சாதனம் அவர்களைத் தேடி வருகிறது. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என்ற பழமொழி அவர்களாலேயே பெருமை உறுகிறது.

செய்னிங்

0 0 0 0

அவருடைய வடமொழி கிருதிகளை நாம் கூர்ந்து ஆராய்ந்தால் அவர் தமக்கு முன்பிருந்த வாக்கேயகாரர்களுடைய ஸம்ஸ்கிருத சாகித்தியங்களையெல்லாம் நன்கு அறிந்தவராயிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. முக்கியமாக மார்க்கதர்சி சேஷய்யங்காரையும் நாராயணதீர்த்தரையும் அவர் சில இடங்களில் பின்பற்றுவதைக் காணலாம். 'தனுஜமேக ப்ரபஞ்ஜன' (அரக்கர் என்னும் மேகத்தைக் கலைக்கும் காற்று). "த்யுதிஜித அயுத விரோசந" (ஒளியால் பதினாயிரம் சூரியனை வென்றவன்) போன்ற தொடர்கள் சேஷய்யங்காரின் கீர்த்தனைகளிலும் காணப்படுகின்றன.

இவ்விதமே நாராயண தீர்த்தரின் 'க்ருஷ்ணலீலா தரங்கிணீ' இசை நாடகத்திலுள்ள பல சொற்களும் தியாகராஜ கிருதிகளில் காணப்படுகின்றன உதாரணமாக 'கிரிராஜ ஸுதா தநய', "விநதா ஸுத வாஹந', "நிகில லோக நிதான" முதலியவற்றைக் கூறலாம். தியாகராஜர் உபநிஷத ப்ரஹ்ம யோகியை நேரிலேயே சந்தித்தவராதலால் அவருடைய திவ்யநாம கீர்த்தனைகளிலிருந்து 'கநகாம்பர' 'கநகவஸந', 'பக்த சந்தன' 'ஸகலோந்நத' 'நவநீதாசா' முதலிய பிரயோகங்களைத் தமது கிருதிகளில் அமைத்திருக்கிறார்.

உபநிஷத ப்ரஹ்மத்துடன் காஞ்சியில்பலவருடங்கள் வசித்த முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களும் இவ்விதமேபல பிரயோகங்களைத் தமது கிருதிகளில் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாகப் பூர்வாசாரியர்களிடத்திலிருந்த பக்தியினால் தியாக ராஜர் சிற்சில இடங்களில் அவர்களை அனுசரித்திருந்த போதிலும், பெரும்பான்மையான கிருதிகளில் நாம் அவருடைய சிறந்த பாண்டித்தியத்தையும், கற்பனைத் திறனையுமே காண்கிறோம். அவருடைய பஞ்சரத்தின கிருதிகளுள் முதலாவதான 'ஜகதானந்த காரக' என்பது முற்றிலும் வடமொழியில் அமைந்திருப்பதுடன் ரத்தினங்கள் எனத் தக்க பல அபூர்வ பதப் பிரயோகங்களைக் கொண்டது.

''இந்த்ர நீலமணி ஸந்நி பாபகன
சந்த்ர ஸூர்ய நயனாப்ர மேய
வாகீந்த்ர ஜநக ஸகலேச சுப்ர
நாகேந்த்ர சயந சமந வைரி ஸந்நுத''

என்பது அவற்றுள்ஒன்று. இதைத் தாளக் கட்டுடன் பாடும்பொழுது அதன் அழகு பன்மடங்காகத் தோற்றமளிக்கிறது.

''நாத தனுமநிசம்'' என்ற சித்தரஞ்ஜநி ராக கிருதியைப் பாடும்பொழுது ஸாமவேதத்தின் ஸ்வரங்கள் நமது காதுகளில் ஒலிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

* * *

சான்றோர் பேச்சைக் குறைத்துச் செயலைச் சிறப்பாகச் செய்து முடிப்பர். —கன்ப்யூஷியஸ்

* * *

ஸங்கீத விஷயமாக அவர் இயற்றியுள்ள கிருதிகளில் மிக அழகிய வருணனைகள் வடமொழியில் காணப்படுகின்றன. நாரதரை 'நாத ஸரஸீருஹ ப்ருங்க'' (நாதமென்னும் தாமரையை வட்டமிடும் வண்டு) என்றும் ''வேத ஜநித வர வீணா வாதந தத்வக்ஞ'' (வேதத்திலிருந்து பிறந்த வீணையை வாசிப்பதன் தத்துவத்தை அறிந்தவர்) என்றும் ஸ்வாமிகள் வருணித்திருப்பது கொள்ளை அழகு. கிருஷ்ண பகவானை ''வேத சிரோ மாத்ருஜ ஸப்த ஸ்வர நாதாசல தீப'' (வேதங்களுக்குச் சிகரமானஓங்காரமென்னும் அன்னையிடம் தோன்றிய ஸப்த ஸ்வரங்களைக் கொண்ட நாதமென்னும் குன்றின் மேலிட்ட விளக்கே) என்றும் ''முரளீ வாதன விநோத மோஹனகர'' (குழல்வாசிப்பதில் இன்பமுள்ள மோகன ரூபனே) என்றும் ஸ்வாமிகளைத் தவிர யார் தான் வருணித்திருக்க முடியும்?

'வரலீல கான லோல' போன்ற கிருதிகளில் யதி, பிராஸ அழகுகள் கரை புரண்டு ஓடுகின்றன.

"வர்பூஷ வம்ச பூஷ் நத
போஷண ம்ருது பாஷண
ரிபு பீஷண
நர வேஷ நக பேஷண வர
சேஷ பூஷ தோஷிதாநக"
என்பது ஒரு சரணம்,

'பாலய ஸ்ரீரகுவீர' என்ற கிருதியில் யமக அழகுகள் காணப்படுகின்றன.

'தாராதீச வதந ராம
தாராதீச தமந'

இதில் முதல் 'தாராதீச' என்னும் பதத்திற்குச் 'சந்திரன்' என்றும் இரண்டாவது பதத்திற்கு 'வாலி' என்றும் பொருள்.

சில கிருதிகளில் மிருதங்கத்தின் ஜதிகளுக்கு ஏற்றவாறு பதப்பிரயோகம் அமைந்துள்ளது.

"ஸ்ரீ கர கோடி விபாகர
பாஸ
ஸுதாகர வதன கருணாகர
ராம"

"ஜிதப்ரியுநி விதாத நஜுநி
சஞ்ஜாத
பந்துகுல ஜாதுநி ஸீதா"
போன்றவை.

சில இடங்களில் பண்டிதர்கள் வியக்குமாறு பதங்கள் கையாளப்பட்டுள்ளன. இவற்றுள் "தாந்த குஜ வஸந்த" என்பது ஒன்று. 'குஜ' என்ற பதத்திற்கு மரம் என்று ஒரு பொருள் உண்டு. "புலனடக்கியவர்களென்னும் மரங்களை வஸந்த ருதுவைப் போல் மலரச் செய்பவன்" என்று பொருள்.

இவ்விதமாக வடமொழியில் உள்ள நூற்றுக் கணக்கான கிருதிகளுள் தியாகராஜ கிருதிகளும் அழியாத ஓர் இடம் பெற்று விளங்குவதைக் காண்கிறோம். இவற்றைத் தவிர அவர் ஓர் அழகிய சூர்ணிகையும் சில சுலோகங்களும் வடமொழியில் இயற்றித் தமது பாண்டித்தியத்தை ரஸிகஉலகம் வியக்குமாறு செய்திருக்கிறார். ○

---


# பி. வி. ராஜன் & கோ

## பட்டணம் பொடி

**போன்: 224. தந்தி: ராஜன்கோ**

**P. V. RAJAN & CO, ARKONAM.**

WITH

BEST

COMPLIMENTS

FROM

# EASUN ENGINEERING COMPANY LIMITED

(A Member of The Easun Group)

Bombay Mutual Building

N. S C. Bose Road,

MADRAS-600 001



# கல்வியும் கிளிப்பிள்ளையும்

## ஆசார்ய விநோபா பாவே

இப்பொழுதெல்லாம் மாணவர்களைப்பற்றிப் பொதுவாகவே கூறப்படுகிறது. அவர்களிடம் அடக்கம் இல்லை, ஒழுக்கம் இல்லை என்று! அதாவது ஆங்கிலத்தில், 'டிஸிப்ளின்' என்று கூறுகிறார்களே, அது இல்லையாம். அடக்க ஒடுக்கம் ஏன் இல்லை? ஏனென்றால் குரு பாவம் இல்லை. கல்வி போதிப்டவர்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்து நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நசித்து விட்டது. குரு பாவம் ஏன் இல்லை? ஏனென்றால் இன்று சரியான குருமார்கள் இல்லை. கல்வி போதிப்பவர்கள் பலரும் ஊழியர்கள் ஆகிவிட்டார்கள். ஆம், ஊதியத்துக்காக உழைப்பவர்கள் ஆகிவிட்டார்கள்.

சுதந்திர அறிவோடு - கல்வி போதிக்கிறார்களே, அவர்கள் தான் உண்மையில் குருமார்கள். 'இன்றைய போதகர்களிடம் சுதந்திர அறிவோ உணர்வோ இருக்கிறதா? இருந்தாலும் அதைப் பயன்படுத்தி மேம்பாட்டுக்கு வழி காண முடிகிறதா?' என்றால் இல்லையென்று தான் சொல்லவேண்டும். அவர்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. அதோடு என்ன சொல்லிக் கொடுக்க வேண்டும், எப்படிச் சொல்லி கொடுக்க வேண்டும் என்ற உத்தரவும் கிடைக்கிறது.

ஆசிரியமார்களைச் சந்திக்க நேரும்பொழுதெல்லாம் நானும் பார்க்கிறேன். அவர்கள் அறிவு பற்றியோ போதனா முறை பற்றியோ எந்தக் கேள்வியும் கேட்பதில்லை. 'எங்களுக்கு ஊதியம் குறைவாயிருக்கிறது, அதைப் பெருக்க .வழி என்ன?' என்றே கேட்கிறார்கள். மாணவர்கள் கூறுகிறார்கள், 'பள்ளிக்கட்டணம் அதிகமாகிவிட்டது, அதைக் குறைக்க வேண்டும்' என்று! கல்வி வளர்ச்சிக்கு என்ன வேண்டும், என்ன கூடாது என்ற கவலையே யாருக்கும் இருப்ப

தாகத் தெரியவில்லே. இப்படி யாக நாடு முழுவதிலும் எல்லாப் பற்றுக் குறைகளுக்கும் மேலாக அறிவுப் பற்றுக்குறை அதிகமாகி விட்டது.

எந்த நாட்டில் கருத்துச் சுதந்திரம் இருந்ததோ, எந்த நாடு ஆறு தரிசன சாஸ்திரங் களைக் கண்டதோ, அந்த நாட் டிலே இன்று கண்டும் காணுக் குருட்டு நிலே ஏற்பட்டு விட்டது. எனவே, அந்தச் சாஸ்திரங்களை யொட்டி அரவிந்தர் ஒரு தரிசனம் கண்டார். லோக மான்ய திலகர், ஸ்வாமி தயானந்தர், காந்திஜீ ஆகியவர் களும் கண்டார்கள். பண்டையக் காலம் என்ன, இடைக்காலம் கூட எத்தனேயோ தரிசனங்களைக் கண்டது. ஸ்ரீ சங்கரர், ராமா நுஜர், மத்வர், பஸவர் போன் ருேர் பல அற்புதமான கருத் துகளைத் தொகுத்துக் கொடுத் தனர். இவர்கள் கண்ட அதிசய உண்மைகளை யாராவது எங்கா வது சரிவரப் பயில்கிருர்களா? அதோடு விஞ்ஞான அறிவையும் தான் சுதந்திரமாகப் பயில முயல்கிருர்களா?

ஒவ்வொருவருக்கும் 'லிபரல் எஜுகேஷன்' தர வேண்டும் என்று கூறுகிருர்கள். அதற்கு என்ன பொருள்? ஒரே அச்சில் வார்த்த ஒரு விந்தைக் கல்வி. அந்தக்கல்வி பயில்வதனுல் கிட்டும் பயன் என்ன, தெரியுமா? ஒருவனுடன் பேசிவிட்டால், இன்னெருவனுடன் பேச வேண் டிய அவசியம் இருக்காது. ஏனெ னில் ஒரே புஸ்தகத்தைத் தான் அவனும் படித்திருக்கிருன், இவனும் படித்திருக்கிருன். இரு வரும் ஒரே பரீட்சையில் தான் தேறியிருக்கிருர்கள். இருவருமே கிளிப்பிள்ளேகள். ஆனல் எவ்வளவு தான் கிளியாக்க முயன்ருலும மனிதன் கிளியாக மாட்டான். கிளிப்பிள்ளேக்கு நாம் என்ன கற்றுத் தரு கிருேமோ, அதை அப்படியே நூற்றுக்கு நூறு பேசும். ஆனல் மாணவர்கள் இப்படி நூற்றுக்கு நூறு கிளியாக முடியாது. அதனுல் தான் அவர்களிடம், 'உங்களுக்கு என்ன கற்றுத்தரப பட்டிருக்கிறதோ, அதில் முப்பத்து மூன்று சதவிகிதம் நினேவு வைத்துக் கொண்டு

0 0 0 0

ஈசுவர மாயை வெகு விந்தையானது. அது அவனே விட்டுப் பிரியாமல் வாழ்கிறது. என்ருலும் ஈசுவரன் மாயைக்குக் கட்டுப்படு வதில்லே. எதுபோல வென்ருல் எப்பொழுதும் பாம்பின் வாயில் விஷம் இருக்கிறது. அந்த வாயினுலேயே அது சாப்பிடுகிறது. குடிக்கிறது. எல்லாம் செய்கிறது. ஆனல் பாம்பு தன் விஷத்தினுல் ஒரு பொழுதும் சாவதில்லே. அது கடிப்பவனே இறந்துவிடு கிருன்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

0 0 0 0

விட்டீர்களானால், நீங்கள் தேறினவர்கள் ஆவீர்கள்' என்று கூறப்படுகிறது.

ஒரு சமையற்காரன் நூற்றுக்கு முப்பத்து மூன்று ரொட்டிகளை நல்லதாகவும் மிகுதி அறுபத்தேழைக் காந்தலாகவும் செய்து தருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு நீங்கள் வேலை தருவீர்களா? அறுபது சத விகிதம் மதிப்பு எண் பெறுகிறவன் முதல் வகுப்பில் தேறியவனும். அதே போல நாற்பது ரொட்டிகளை மட்டுமே கருக்கிய சமையற்காரன் முதல் தரச் சமையற்காரன் என்று சொல்லப் படுவானா? அறிவு விஷயத்தில் முப்பத்தி மூன்று சதவிகிதம் அறுபது சதவிகிதம் இதெல்லாம் செல்லக் கூடிய காரியமா? அறிவு என்றால் நூற்றுக்கு நூறு சதவிகிதம் இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் முப்பத்து மூன்று சதவிகிதம் என்று ஏன் வரையறுத்திருக்கிறார்கள் என்றால் நாம் கற்றுத் தருவது அவ்வளவையும் அவர்களால் ஏற்க முடியாது, அவர்கள் கிளிப்பிள்ளைகள் அல்ல என்பதை உணர்ந்திருப்பதால்தான், அறிவுக்கு ஓர் எல்லை கிடையாது, அதற்கு வரன்முறை வகுப்பது அறியாமைக் கருத்து. கல்வி பற்றிய இன்றைய நிலையை நினைத்தால் மனம் புண்படுகிறது. எனவே, கல்வித் தரத்தை நிர்ணயிப்பதைக் காட்டிலும் அதன் தரத்தை உயர்த்துவதிலேயே யாவரும் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். கல்வி சிறக்க இதுவே சரியான வழி. ○

## தராசு



பணத்தை விட அறிவே உயர்ந்தது. எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

அதே போல அறிவைவிட ஒழுக்கமே உயர்ந்தது. இதையும் யாவருமே ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

ஆசிரியர்கள் புத்தகங்களைக் கொண்டு ஒழுக்கத்தைக் கற்றுத் தர முடியாது. தங்கள் நடத்தையினாலேதான் கற்றுத்தர முடியும். சொல்லொன்று செயலொன்றாக இருப்பவர்கள் இதற்குத் தகுதியற்றவர்கள்

கல்வியையும் புலமையையும் ஒரு தட்டிலும் உண்மையையும் தாய்மையையும் இன்னொரு தட்டிலும் வைத்துச் சமன் தூக்கிப் பார்த்தால் இரண்டாவது தட்டே தாழும்.

ஒழுக்கமில்லாத கல்வி தீமை செய்வதற்கான சக்தியை மட்டும் தரும்.

ஒரு கட்டடம் அரண்மனை போல் எத்தனை தான் அழகாயிருந்தாலும், அதில் யாரும் குடியிருக்கவில்லையென்றால் பாழாகவே தோன்றும். அதே போல எத்தனை தான் செல்வங்கள் பெற்றிருப்பினும் ஒழுக்கமில்லையேல் மனிதன் பதராகத்தான் மதிக்கப்படுவான். எனவேதான் ஒழுக்கம் சார்ந்த கல்வி உயிரினும் மேலானதாகப் போற்றப் படுகிறது.

—மகாத்மா காந்தி

*With Best Compliments From :*

# M\s. KAMATCHI & CO.

★

**Block No. 1**
**Plot 19.**
**EAST ROAD**
**West C.I.T. Nagar**

**MADRAS-600 035**

Cable : LAUREL PHONE : 4 4 1 2 2 8
Telex : 41-7475 MASS IN Res : 4 4 7 3 9 2

Manufacturers & Exporters of

REAL MADRAS HAND KERCHIEFS
HANDLOOM FABRICS, TOWELS,
BED SPREADS HANDMADE
CROCHET LACE GOODS. ETC



# வஜ்ரஸூசி உபநிஷத்து

**மகாகவி பாரதியார்**

வஜ்ரஸூசி உபநிஷத்து, பின் வருமாறு:

ஞானமற்றவர்களுக்குத் தூஷணமாகவும் ஞானக்கண்ணுடையவர்களுக்குப் பூஷணமாகவும் விளங்குவதும் அஞ்ஞானத்தை உடைப்பதுமாகிய வஜ்ரஸூசி என்ற சாஸ்திரத்தைக் கூறுகிறேன்.

"பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு வர்ணங்களுண்டு. அவற்றிலே பிராமணன் பிரதானமானவன் என்று வேத வசனத்தைத் தழுவி ஸ்மிருதிகளாலும் சொல்லப்படுகிறது. அதில் பிராமணன் யாரென்பது பரிசோதிக்கத் தக்கதாகும். ஒருவன் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக் கொள்கிறான். அங்ஙனம் பிராமணன் என்பது அவனுடைய ஜீவனையா? தேகத்தையா? பிறப்பையா? அறிவையா? செய்கையையா? தர்மகுணத்தையா? அவனுடைய ஜீவனே பிராமணனென்றால் அஃதன்று. முன் இறந்தனவும், இனி வருவனவும் இப்போதுள்ளனவும் ஆகிய உடல்களிலெல்லாம் ஜீவன் ஒரே ரூபமுடையதாயிருக்கின்றது. ஒருவனுக்கே செய்கை வசத்தால் பலவித உடல்கள் உண்டாகும் போது, எல்லா உடல்களிலும் ஜீவன் ஒரே ரூபமுடையதாகத் தான் இருக்கின்றது. ஆகையால் அவனுடைய ஜீவன் பிராமணனாகமாட்டாது. ஆயின், அவனது தேகம் பிராமணனோவெனில் அதுவுமன்று. சண்டாளன் வரையுள்ள எல்லா மனிதர்களுக்கும் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட உடலும் ஒரே அமைப்புடையதாகத் தானிருக்கிறது. மூப்பு, மரணம், இயல்கள், இயலின்மைகள்–இவையனைத்தும் எல்லா உடல்

களிலும் சமமாகக் காணப்படு கின்றன. மேலும் பிராமணன் வெள்ளை நிறமுடையவன், வைசியன் மஞ்சள் நிறமுடையவன், சூத்திரன் கருமையான நிறமுடையவன் என்பதாக ஒரு நியமத்தையும் காணவில்லை. இன்னும் உடல் பார்ப்பானுயின் தகப்பன் முதலியவர்களை இறந்தபின் கொளுத்தும் மகன் முதலியவர்களுக்குப் பிரம்மஹத்தி தோஷம் உண்டாகும். ஆதலால் அவனுடைய தேஹம் பிராமணனாக மாட்டாது. ஆயின் பிறப்புபற்றி பிராமணன் என்று கொள்வோமாஞல் அதுவுமன்று. மனிதபிறவியற்ற ஜந்துக்களிடமிருந்து கூடப் பல ரிஷிகள் பிறந்ததாகக் கதைகளுண்டு. ரிஷ்ய சிருங்கர் மானிலிருந்தும், ஜாம்பூகர் நதியிலிருந்தும், வால்மீகர் புற்றிலிருந்தும், கௌதமர் முயல் முதுகிலிருந்தும் பிறந்ததாகக் கதை

ஃ ஃ ஃ

இடையூறுக்கு அஞ்சி அறிவிலி எந்த ஒரு காரியத்தையும் தொடங்கவே மாட்டான். இடைப்பட்டவன் ஆரம்ப சூரத்தனமாகத் தொடங்குவான். இடையூறு ஏற்பட்டால் அப்படியே அரைகுறையாக நிறுத்திவிடுவான். அறிவாளி எத்தனை முறை இடையூறு ஏற்பட்டாலும், கருமமே கண்ணாக இருந்து எடுத்த காரியத்தை நிறைவேற்றியே தீருவான்.

—வடமொழி சுலோகம்

ஃ ஃ ஃ

கேட்கிறோம். அது போக வஸிஸ்டர் ஊர்வசி வயிற்றில் பிறந்தவர். வியாசர் மீன் வலைச்சியின் வயிற்றில் பிறந்தவர். பராசிக்ஸ்திரியர் கலசத்திலே பிறந்ததாக சொல்லுவார்கள்.

முன்னூலில் ஞானத்தில் பெருமையடைந்தவர்களாகிய பல ரிஷிகளின் பிறவி வகை தெரியாமலேயே இருக்கிறது. ஆகையால் பிராமணத்துவம் பிறப்புப் பற்றியதன்று. ஆயின், அறிவிஞல் பிராமணன் எனக் கொள்வோமென்ருல், அதுவுமன்று. க்ஷத்திரியர் முதலிய மற்ற வர்ணத்தவர்களில் கூட அநேகர் உண்மை தெரிந்த அறிவாளர்களாக இருக்கிருர்கள். ஆதலால், அறிவுபற்றி ஒருவன் பிராமணன் ஆகமாட்டான். ஆயின் செய்கை பற்றி ஒருவனைப் பிராமணனுகக் கொள்வோமெனில் அதுவும் அன்று. பிராப்தம், சஞ்சிதம், ஆகாமி என்ற மூவகைச் செயல்களும், ஒரே விதமான இயற்கையுடையனவாகவே காணப்படுகின்றன. முன் செயல்களால் தூண்டப்பட்டு, ஜனங்களெல்லாம் பின் செயல்கள் செய்கிறார்கள். ஆதலால் செய்கை பற்றி ஒருவனை பிராமணனுகி விடமாட்டான். பின் ஒருவன் செய்வோனைப் பிராமணனுகக் கொள்வோமென்ருல் க்ஷத்திரியன் முதலிய நான்கு வருணத்தவரும் தருமஞ் செய்கிருர்கள். ஆதலால் ஒருவன் தருமச் செய்கையைப் பற்றியும் பிராமணனுகிவிடமாட்டான்.

அப்படியானால் யார் தான் பிராமணன்? எவனொருவன் இரண்டற்றதும், பிறவி, குணம், தொழில் என்பவை இல்லாததும், உள்ளும் புறமும் ஆகாசம் போல் கலந்திருப்பதும், அளவிடக் கூடாததும், அனுபவத்தால் உணரத்தக்கதுமாகிய இறுதிப் பொருளை, நேருக்கு நேராகத் தெரிந்து காமம், குரோதம் முதலிய குற்றங்களில்லாதவனாய், பாபம், மாற்சரியம் விருப்பம், ஆசை, மோகம் முதலியவை நீங்கினவனாய் இடம்பம், அகங்காரம் முதலியவை பொருந்தாத நெஞ்சமுடையவனாய் இருக்கின்றானோ இங்ஙனம் கூறப்பட்ட இலக்கணமுடையவனே பிராமணனென்பது சுருதி ஸ்மிருதி, புராண, இதிகாசமென்பவற்றின் அபிப்பிராயமாகும். மற்றபடி ஒருவனுக்கு பிராமணத்துவம் சித்தியாகாது என்பது உபநிஷத்து. பிராமணராக வேண்டுவோர் மேற்கூறப்பட்ட நிலைமையைப் பெற முயற்சி செய்யக் கடவர். க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் முதலிய மற்ற லௌகிக வர்ணங்களுக்கும். இதுபோலவே தக்கவாறு லக்ஷணங்கள் அமைத்துக் கொள்க. அவ்வவ்விலக்கணங்கள் பொருந்தியவர்களே அவ்வவ் வருணத்தினரென்று மதிக்கத் தக்கவர்கள். அந்த இலக்கணங்கள் இல்லாதவர்கள் அவற்றையடையமுயற்சி செய்ய வேண்டும். போலீஸ் வேவுத் தொழில் செய்பவன் பிராமணன் ஆகமாட்டான்.

குமாஸ்தா வேலை செய்பவன் க்ஷத்திரியன் ஆகமாட்டான் சோம்பேறியாக முன்னோர் வைத்துவிட்டுப்போன பொருளை அழித்துத் தின்பவன் வைசியன் ஆகமாட்டான்.

# அன்பே தெய்வம்

## பால. இரமணி

அன்பு கொண்ட உள்ளம்—அது
ஆண்டவனின் இல்லம்!
வஞ்சமற்ற உள்ளம்—அது
அவனிடத்தில் தஞ்சம்!
களங்க மற்ற சிரிப்பு—அவன்
கோவிலிலே விளக்கு!
அமைதி கண்ட நெஞ்சம்—அவன்
துயிலுகின்ற மஞ்சம்!
கருணை காட்டும் நெஞ்சம்—அங்கு
கடவுளுக்கு விருப்பம்!
நினைத்து வாழும் மனிதர்—அந்த
ஆண்டவனார் தூதர்!
துதி பாட வேண்டும்—நம்
துயரங்கள் நீங்க!
கதி வேறு இல்லை—கடவுள்
அவனைத் தவிர!

# பசி பறந்தது; பக்தி பிறந்தது!

**தேஜினி**

எத்தனையோ பல ஆண்டுகளுக்கு முன், புஷ்பவாகனன் என்று ஒரு மன்னன் இருந்தான். அறத்திலே மிக்க ஈடுபாடு கொண்டவன். குடி படைகளிடம் அன்புமிகக் கொண்டவன். அவன் ஆட்சிக் காலத்திலே மக்களுக்கு எந்தப் பொருளிலும் பற்றுக் குறை ஏற்படவில்லை. வேண்டிய பொருள் வேண்டிய பொழுது கிடைத்து வந்தது. அவனைப் போலவே அவன் மனைவி லாவண்யவதியும் அறத்திலே பெரும் பற்றுக் கொண்டவளாயிருந்தாள். மக்களின் நலன் ஒன்றையே எப்பொழுதும் கருத்தில் கொண்டவர்களாயிருந்தனர் அந்த அரச தம்பதிகள். அத்தகைய அநுகூல தம்பதிகளைக் காண்பது அரிது

புஷ்பவாகன் மன்னன் ஒரு முறை கடுந்தவம் இயற்றினான். அதில் மகிழ்ந்த பிரும்மதேவர் அவன் முன் தோன்றிப் பொற்றாமரை மலர் ஒன்றைத் தந்தார். "மன்னவா! எப்பொழுதும் இப்படியே தர்மத்தில் ஈடுபாடு கொண்டவனாக நீ இருக்க வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறேன். உனது புகழ் மணம் பத்துத் திசைகளிலும் பரவட்டும். இந்தப் பொற்றாமரையைப் போற்றிப் பாதுகாத்துவா. நினைத்த மாத்திரத்திலேயே இது உன்னைச் சொர்க்கம், பூமி, பாதாளம் எங்கு வேண்டுமானாலும் இட்டுச் செல்லும்!" என்றார்.

எனவே, புஷ்பவாகனனின் நற்செய்கைகளும் நற்பணிகளும் மூவுலகிலும் மணம் பரப்பின. குடி மக்களோ இத்தகைய மன்னனை அடைந்ததில பெருமகிழ்ச்சி கொண்டனர். 'இந்த மன்னன் காலத்தில் வாழ நாம் என்ன பாக்கியம் செய்தோம?' என்று பூரித்தனர். நாளுக்கு நாள் மன்னன் புகழ் மாநிலம் முழுவதும் பரவிப் பொன்னுக்கு மணம் ஏற்றிய கதையாகத் திகழ்ந்தது.

ஒரு நாள் மன்னன் அறிவாற்றல் மிகுந்த சான்றோரைக் கூட்டி ஞான சர்ச்சை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது வாயிற் காப்போன் வந்து, பிரசேத முனிவர் வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்தான். மன்னன் விரைந்து சென்று

வணங்கி வரவேற்று அவ்வரை அழைத்து வந்தான். உகந்த இருக்கைஅளித்து, அவர் அமர்ந்த பின்,மிகவும் அடக்கமானகுரலில், "முனி சிரேஷ்டரே! என் இதயத்தில் அடிக்கடி ஓர் ஐயம் எழுகிறது. எனக்கு இத்தனை பெரும் புகழும் செல்வமும் சிறப்பும் கிடைக்கக் காரணம் என்ன? எத்தகைய புண்ணியத்தின் பயனாக மனிதனுக்கு இத்தகைய பேறுகள் கிட்டுகின்றன?" என்று கேட்டான்.

பிரசேத முனிவர் முறுவலித்தார். "மன்னவா! நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் இந்தப்புவியில் ஒரு வேடன் இருந்தான். அவன் பார்ப்பதற்கு மிகவும் அழகற்றவன். அஷ்டக் கோணல் என்பார்களே, அப்படி அவன் அவயவங்கள் அத்தனையும் ஒரே கோணல். எல்லோரும் அவனை ஏளனமாகப் பார்த்தனர். பெற்ற தாய் தந்தையர், உடன் பிறந்த சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர் எல்லோருமே

0 0 0 0

தீயவன் தன் தோழர்களிடம் எவ்வளவு இரக்கம்காட்டுகிறானோ, அதைக்காட்டிலும் பன்மடங்கு பகைவர்களிடமும் இரக்கம் காட்டுவான் நல்லவன். —ஹால்

0 0 0 0

அவனை அலட்சியப் படுத்தினர். யாரும் அவனிடம் கடுகளவு கூட அன்பு காட்டவில்லை.

வேடனுக்கு வாய்த்த மனைவியும் அவனைப்போலவே அழகற்றவளாயிருந்தாள். ஆனால் கணவனிடம் அபாரப் பற்றுக் கொண்டிருந்தாள். அந்நியோந்நிய தாம்பத்தியம் என்பார்களே அதற்கு அவர்கள் இலக்கணமாயிருந்தார்கள். இருவரும் ஒருவர் நலனை ஒருவர் வேண்டி வாழ்க்கையை ஓட்டி வந்தனர்.

இப்படியிருக்கும் பொழுது தான் ஒரு சமயம் நாட்டில் பயங்கரப் பஞ்சம் தலைவிரித்து ஆடத் தொடங்கியது. பசிப்பிணி மக்களைப் பரிதவிக்க வைத்தது. எங்கும் ஓலக்குரல் அவலமாக ஒலிக்கலாயிற்று. வேடனும் அவன் மனைவியும் பசி பொறுக்க முடியாமற் போகவே, வீட்டைத் துறந்து உணவு தேடப் புறப்பட்டனர். நாள் முழுவதும் ஓடி ஆடிச் சுற்றியும் அவர்களுக்கு உணவோ, பழமோ, இறைச்சியோ எதுவுமே கிடைக்கவில்லை. கால் கடுத்தது தான் மிச்சம்.

இனி நடக்கமுடியாது என்ற நிலையில், அவர்கள் ஒரு குளக் கரையை அடைந்தார்கள். சிறிது இளைப்பாறிச் செல்லலாம் என்ற எண்ணத்தோடு அமர்ந்தனர்.

அது தாமரைக் குளம். அதில் மலர்ந்திருந்த தாமரை மலர்களைக் கண்ட வேடனின்

மனத்தில் ஒருஎண்ணம்எழுந்தது, 'இதில் சில மலர்களைப் பறித்துச் சென்று விற்று வயிற்றுப் பாட்டுக்கு ஏன் வழி செய்து கொள்ளக் கூடாது?' என்று யோசித்தான். யோசனை செயலாக முகிழ்த்தது. கையில் தாமரை மலர்களுடன் மனைவியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அருகிலிருந்த வைதிசம் என்னும் நகரை அடைந்தான். தெருத் தெருவாகச் சுற்றி எத்தனையோ விலை கூறியும் வேடனுக்கு வாங்குவோர் கிடைக்கவில்லை. பஞ்ச காலத்தில்எவர் காசுகொடுத்துத் தாமரை மலர்களை விலைக்கு வாங்கப் போகிறார்கள்?

பசியினால் கண்கள் இருட்டிக் கொண்டு வரவே, கணவனும் மனைவியும் அப்படியே உட்கார்ந்து விட்டனர். அவர்களுக்கிருந்த பசியிலும் களைப்பிலும், ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவும் தோன்றாமல் அமர்ந்திருந்தனர்.

இருட்டிச் சிறிது நேரத்துக்கெல்லாம் வானத்து வெளிச்சம் பூமியில் படிந்தது. குளிர் காற்று இலேசாக உடலைத் தடவிக் கொடுத்தது. கனவில் ஒலிக்கிறாற் போலச் சில மங்களச் சொற்கள் காதில் விழுந்தன. கண்களைக் கஷ்டப்பட்டுத் திறந்து பார்த்தான். எதிரே ஒரு பெரிய மாளிகை இருப்பது தெரிந்தது. அங்கே ஏதாவதுஉணவுகிடைக்கலாமோ என்ற நைப்பாசையில் கணவனும் மனைவியும் இருந்த பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு புறப்பட்டனர்.

அது அனங்கவதி என்னும் கணிகையின் மாளிகை. அவள் விபூதி த்வாதசி விரதம் மேற்கொண்டிருந்தாள். அதையொட்டி விஷ்ணு வழிபாட்டுக்கான ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. விஷ்ணு பகவானின் பாவம்போக்கும் அழகிய உருவச் சிலையையும்சூழ்நிலையில் ஒரு தூய்மையையும் கண்ட வேடனின் மனம், பற்றற்றான் பற்றினைப் பற்ற விழைந்தது. அதோடு 'இந்தத் தாமரை மலர்களைக் கொண்டு பகவானுக்கு அலங்காரம் செய்தால் எப்படி இருக்கும்?' என்றும் எண்ணிப் பார்த்தது.

வேடன் தனது இத்தனை நாள் வாழ்க்கையில் கடவுளை ஒரு நாளும் வழிபட்டதில்லை வழிபட வேண்டாம்என்பதில்லை. அப்படி ஒரு சருணம் அவனுக்கு வாய்த்ததில்லை, அவ்வளவுதான். நாள் முழுவதும் கடமையே கருத்தாக, பற்றற்ற பாவனையில் அவன் பணியாற்றி மட்டுமே வந்திருக்கிறான். ஆனால் அந்தக் கணம் அவன் மனத்தில் பக்தி உணர்வு எப்படியோ தலை எடுத்தது. அதன் உந்தலில் அனங்கவதியிடம் சென்று தன் ஆவலை வெளியிட்டான்.

கண்ணனுன் விஷ்ணுபகவானுக்கு மிகவும் உகந்த மலரைக் கண்டு அனங்கவதி பெரிதும் மகிழ்ந்தாள். வெகுஅன்போடு வேடன் தந்த மலரைக்கொண்டு பகவானை அலங்கரித்தாள்.

ஆண்டவனின் அந்தத் திருக்கோலத்தைக் கண்ட மகிழ்ச்சியில் வேடனுக்கு அவள் மூவாயிரம் பொற்காசுகள் தந்தாள். ஆனால் வேடன் அதை ஏற்க மறுத்தான். வாயக்கு இனிக்கும் வகைவகையான தின்பண்டங்களைத் தட்டுத்தட்டாகக் கொண்டு வரச் செய்தாள். வேடுவ தம்பதிகள் அதையும் ஏற்க மறுத்துத் தட்டிக் கழித்து விட்டார்கள்.

அவர்கள் உள்ளத்தில் அப்பொழுது பக்தி உணர்வு மேலிட்டிருந்தது. பசி உணர்வு அடங்கிப் போயிருந்தது. பசி, தாகம அவர்களை வாட்டவில்லை. பக்தி சிரத்தையோடு அர்ப்பணித்த மலர்களுக்காக அவர்கள் எதையும் எந்தவிதத்திலும் ஏற்க முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பார்கள். ஆனால் பசி பறந்து போயிருந்தது.

அன்று இரவு அந்த வேட தம்பதிகள் அனங்கவதியோடு பட்டினியிருந்து, பச்சைத் தண்ணீர் பல்லில் ஊறுமல் பகவானைப் பூஜித்தார்கள். வாழ்நாள் முழுவதும் எத்தனையோ எளிய பறவைகளை வேட்டையாடிக் கொன்றவர்கள்தான் என்றாலும் அந்த நேரம் உண்டான பக்தி உணர்வு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையே மாற்றிவிட்டது. தூய்மையான உள்ளுணர்வோடு அவர்கள் புரிந்த மாசற்ற பக்தி அவர்கள் செய்த அத்தனை பாவங்களையும் வேர் அறுத்து மாய்த்து விட்டது.

பிரசேத முனிவர் கதையை முடித்தார். கதை முடிந்தது என்ற உணர்வு இல்லாமலே புஷ்பவாகன மன்னன் அவரை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தான்.

''இன்னும் என்ன பார்க்கிருய், மன்னவா?'' என்று கேட்ட முனிவர், முற்பிறவியில் நீ தான் அந்த வேடனக இருந்தாய். ராணி லாவண்யவதி உன் மனைவியாக இருந்தாள். பற்றற்ற உணர்வோடு நீ உன் கடமையைச் செய்து கொண்டிருந்தாய். அதனுல் ஆண்டவன் மகிழ்ந்து உன் உள்ளத்தில் பக்தி உணர்வைப் பெருக்கினுர். அந்த நல்வினையின் பயனுகத்தான் இப்பிறவியில் உனக்கு இவ்வளவும் கிடைத்திருக்கின்றன

''புஷ்பவாகனு! கடமையே எல்லாவற்றுக்கும் மேலான புண்ணியம். கடமையே கீர்த்திக்கும் புகழுக்கும் உறைவிடம். அதனுல் மனிதன் பலா பலன்களைச் சிறிதும் எதிர்பாராமல் பற்றற்ற உணர்வோடு கடமைகளைச் செவ்வனே செய்து வர வேண்டும். அதுவே முக்கியம்'' என்று முடித்தார். ○

# முதல் சுருக்கெழுத்தாளர்

வேத வியாசரின் மனத்திலே மகாபாரதம் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவாகிக் கருவாக வளர்ந்த நேரம். தாம் சொல்ல அதை எழுதித்தர ஒருவர் கிடைத்தால், காரியம் சுலபமாக முடியுமே என்று எண்ணினார். எத்தனையோ ரிஷிகளும், முனிகளும், தியாகிகளும், தபஸ்விகளும், அறவோரும் அறிவோரும் அவர் மனக் கண் முன்னே தோன்றினர். நெருங்கி அணுகியபோது அவர்கள் அதற்கு தயாராக இல்லை. 'இதென்ன இவர் சொல்ல நாம் எழுதுவதாவது? நமக்கே மூளையில்லையா? நாமே இப்படி ஒரு நூலைப் படைக்க முடியாதா? என்று எண்ணினார்களோ, என்னவோ?

எடுத்த காரியம் ஈடேற வேண்டுமே என்ற கவலை வியாசரைப் பற்றிக் கொண்டது. அந்த நேரம் பார்த்து 'டுண்டி' கணபதி தொந்தி கணபதியாக எங்கோ விரைந்து சென்றுகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததுமே, 'அடாடா! என்ன அபசாரம் செய்துவிட்டோம்! விக்ன விநாயகரை வணங்கியல்லவா எந்தக்காரியத்தையும் தொடங்கியிருக்கவேண்



டும்!'' என்று தோன்றியது. உடனே, ''அப்பா கணேசா!'' என்று அழைத்தார்.

''என்ன?''

'எனக்கு உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டுமே!''

''சித்தமாயிருக்கிறேன்!'' என்றார் கணபதி.

வியாசருக்குத் தம் காரியம் நிறைவேறி விட்டதாகவே தோன்றியது. ''நான் மகா பாரதம் இயற்றப் போகிறேன். அதை எழுதித்தர வேண்டும்!'' என்றார்.

''என் அகராதியில் முடியாது என்ற சொல் கிடையாது. உங்களுக்குத் தெரியாததை நான் சொல்லவில்லை. நான் ஒரு பொது நலத் தொண்டன். யார் எப்பொழுது கூப்பிட்டாலும் ஓட வேண்டியவன். கல்யாணமா, கார்த்திகையா, புதுமனை புகுவிழாவா, யாத்திரை புறப்படுவதா? எந்தக் காரியமாயிருந்தாலும் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து என்னை அழைக்கிறார்கள். அவர்கள் வேலை இடையூறின்றி நடக்க என்னால் இயன்றதைச் செய்ய வேண்டியிருககிறது. அதனால்ஒரு சிறு நிபந்தனை. நான் எழுதும் வேகத்துக்கு நீங்கள் சொல்லிக் கொண்டே போகவேண்டும். இடையில் சிந்திக்கிறேன் பேர் வழி என்று நிறுத்தினீர்களானால், நான் ஓடி விடுவேன். அப்புறம் என்னைப் பிடிக்க முடியாது!'' என்றார். வியாசரைத் தட்டிக் கழிக்கச் சரியான வழி என்று எண்ணினாரோ, என்னவோ?

ஆனால் வியாசர் அவரைக்காட்டிலும் வல்லாள கண்டராக இருந்தார். ''கணேசா! உன்நிபந்தனைக்குச் சம்மதம் ஆனால் என் நிபந்தனை ஒன்று உண்டு. அதற்கு நீ படிந்தாக வேண்டும்!'' என்றார்.

' என்ன?''

''நான் சொல்வதையெல்லாம் நீ புரிந்து கொண்டு எழுதவேண்டும். ஒரு தவறு கூட நேரக் கூடாது!'' என்றார்.

விநாயகர் மகிழ்ச்சியோடு சம்மதித்தார். தெளிவாகப் புரிந்து கொண்டு எழுதுவது, 'ஈயடித் தான் காப்பி' அல்ல என்பது விநாயகருக்குந்தெரியும், வியாசருக்கும் தெரியும். தவறாக எழுதி அந்தத் தவறுகளைத் திருத்துவது என்று வந்தால், அது எத்தனை சிரமம்? அதைக் காட்டிலும் இன்னொரு புதிய நூலே எழுதி விடலாம் என்பதும் தெரியும்.

முதல் சுருக்கெழுத்தாளரான விநாயகர், வியாச பாரதத்தை எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல் பிழையில்லாமல் எழுதிக் கொடுத்த பெருமை கொண்டவர். வல்வினை போக்கித் திருவாக்கும் செய்கருமமும் கைகூட்டும் ஸ்ரீ விநாயக பெருமான் அருளை வேண்டி அவர் தம் திருவுருவத்துடன் அமரபாரதியின் முதல் இதழைத் தொடங்குகிறோம். ஓவியர் ரகுநாத் தீட்டியுள்ள இவ்விநாயகரின் எடுப்பான திருவுருவம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில் சித்திரசாலையில் உள்ளது.

# ஆசாரியரும் அமரபாரதியும்

ரா. கணபதி

ஸரஸ்வதிக்கு பாரதி என்பது மற்றொரு பிரஸித்த நாமமாகும். நீரை வைத்து ஏற்பட்ட பெயர் ஸரஸ்வதி நெருப்பை வைத்து உண்டான நாமம் பாரதி. ஸரஸ் என்பது பொய்கையாம் நீர்நிலை. பொய்கையில் வாழ்பவள் ஸரஸ்வதி ''பா'' என்றால் ஒளி. ஒளியென்றால் தீயையே எண்ணுகிறோம். இயல்பாக ஒளி பொருந்தியது அதுவே அல்ல வா?ரதி என்றால் இன்பம்' களி. ஒளியில் களிப்பவள் பாரதி.

நீர் என்பது ஞானப் பிரவாஹம் தான்;ஒளி என்பதும்ஞானக் னிப் பிரகாசம்தான் ஆன்மாவுக்கு உயிரூட்டும் அமுத தீர்த்தம் ஞானமே யாதலால் அது நீராகவும், அறியாமையையும் அக் குணங்களையும் எரிப்பதும் அதே ஞானமாதலால் அது நெருப்பாகவும் உருவகம் பெறுகிறது. ஞான தேவதை, அறிவுத் தெய்வம் நீரை வைத்து ஸரஸ்வதி எனவும், நெருப்பை வைத்து பாரதி எனவும் பெயர் கொள்கிறது.

ஞானமா நிதியான ஆதி சங்கர பகவத் பாதர்களுக்கு ஸரஸ்வதி ஸம்பந்தம் நிறைய உண்டு. ஸரஸ்வதி தேவி ஸரஸவாணியாக வந்து அவரிடம் வாதிட்டு அவருக்கு வெற்றி தந்து, பின்னர் சிருங்ககிரி சாரதையாக அவரால் பிரதிஷ்டை செய்யப் பட்டாள் ஸரஸ்வதியின் ஆமோதனத்துடனேயே அவர் காஞ்சீபுரியில் ஸர்வக்ஞ பீடம் ஏறினார். தமது மட ஆசார்யர்களுக்கு சிருங்ககிரியில் பாரதி பட்டமும், காஞ்சியில் இந்த்ர ஸரஸ்வதி பட்டமும் ஏற்படுத்தினார் தசநாமிகள் என்று பத்து விதமாகத்துறவிகளை அவர்வகுத் திருப்பதில் பாரதி, ஸரஸ்வதி என்ற இரண்டும் அறிவுத் தெய்வத்தைக் குறிப்பிட, மீதமுள்ள எட்டு வேறெந்த தெய்வத்தையும் குறிப்பிடாமல் தீர்த்த, அரண்ய, கிரி,ஸாகர, பர்வத,புரி என்பது போல நாடு, நகர,நீர்,நிலைகளையே குறிப்பிடுகின்றன.

ஸரஸ்வதிக்கு மட்டும் ஏனிப் படி அவர் முக்யத்வம் தந்தார்? வாக்குவிசேஷத்தால் வாதிட்டே வேதாந்தத்தை நிலை நாட்டிய வேந்தரன்றோ அவர்? ஆசார்ய பாஷ்யங்களை ஸரஸ்வதி தேவியின் பொக்கிஷ ரத்தினங்களாகவே அறிஞருலகு கருதுகிறது அல்லவா? மௌன தக்ஷிண

மூர்த்தி ஆசார்யர்களாக அவதரித்த போது கொண்ட புதுப்பெரும் சிறப்பே வாக் விலாஸ மாமேதையானது தானே? இதனால் தான் வாக் தேவிக்குத் தனிச் சிறப்புத் தந்திருக்கிறார்.

ஸரஸ்வதிவதியும் ஞானப்பொய் கையானது பொயயான பல ஸித்தாந்த வாதங்களால் குழம்பிச் சேற்றுக் குட்டையா யிருந்தது. அப்போது ஆசார் யாள் தான் ஸத்ய அத்வைதத் தால் குட்டையைத் தெளிவித்து ஸரஸ்வதியை உண்மையான ஸரஸ்-வதியாக்கினார் என்று ஸர்வக்ஞாத்மர் துதிக்கிறார்.

வக்த்ரம் ஆஸாத்ய யம்
ஏவ நித்யா
ஸரஸ்வதீ ஸ்வார்த்த
ஸமன்விதா (அ) பூத் 1
நிரஸ்த துஸ்தர்க்க
ஸமஸ்த பங்கா
நவாமி தம் சங்கரம்
அர்ச்சிதாங்க்ரிம் ||

வாக்கின் பெருமை என்ன? தான் பெற்ற இன்பம் வையமும் பெற வைப்பது தான். ஞானத் தபோதனர்களும், பக்த சிகா மணிகளும், யோகியரும், கவி வாணர்களும், விஞ்ஞானிகளும் கூடக் கண்ட உண்மைகளை உலகு பகிர்ந்து கொண்டு பயனடைவது அவர்களது வாக்கின், எழுத்தின் மூலமே அல்லவா? 'அநுபவத் தை அனைவருக்கும் ஆக்குவது' என்பதே மொழியின் மஹத்வம். படைப்பினங்களில் மனிதன் ஒருவனுக்கேஇதுவெகு விசேஷம் பொருந்திய ஈசன் கொடையாக ஏற்பட்டிருப்பது.

பாரதி என்றாலே வாக்கு, மொழி என்று ஓர் அர்த்தம். அக்னியில் பிறப்பது அது பரம புருஷன் வாக்கிலிருந்து இந்திர னும் அக்னியும் உதித்ததாகப் 'புருஷஸூக்தம் புகல்கிறது. அதிகம் பேசினால் சூடேறுவதை நடைமுறையில் காண்கிறோம். அதனால் தான் ஜோதியில் இன் புறுவது எனப்பொருள் படைத்த 'பாரதி' என்றாலே மொழி என்னுகிறது. (இந்திரன் வாக்கிலிருந்து பிறந்ததால் இந்திர-ஸரஸ்வதி என்று சேர்ப் பதிலும் பொருத்தம் உள்ளது)

வாக்கும் நெருப்பும் தொடர் புள்ளது என்பதால் நாவினால் சுட்ட புண்ணாகப் பேசுவது தகுமா? அமுதமான அன்பிலே நம் அறிவையும் உணர்வையும் பிறருக்கு ஆக்கும் போது பனி நீராகவே வாக்கு பயனாக வேண்டும். பாரதித் தீயாக நம்முள் தூண்டும் சக்தி ஸரஸ்வதி நீராகப் பிறருக்குப் பாயவேண்டும். 'அமரபாரதி' என்பதில் 'அமர' என்பதுஅமுது அமுதநீர். இங்கு ஸரஸ்வதியும் பாரதியும்ஒன்று கூடுகின்றனர்.

நெருப்பு பாரதியும் நீர் ஸரஸ் வதியும் ஒன்றியிழையும்போது, சாரதை ஆகிறாள். சரத் கால தேவதையாகும்போது அறிவுத் தெய்வத்துக்கு சாரதா நாமம் ஏற்படுகிறது. வஸந்த, க்ரீஷ்ம

ருதுக்களில் வெப்பம் அதிகம். வர்ஷ, ஹேமந்த, சிசிர ருதுக்களில் மழையாகவும் பனியாகவும் நீரின் குளுமை அதிகம். சரத் ருதுவிலேயே ஸம சீத—உஷ்ணமாக உள்ளது. உள்ளத்தில் ஒளிரும் பாரதி உலகு குளிரும் ஸரஸ்வதியாக வரவேண்டுமாதலால் ஒளிக்கும் குளுமைக்கும் நடுநிலை தாங்கும் சாரதா நாமத்தில் ஆசார்யாளுக்கு அலாதிப் பிரியம். சிருங்ககிரியில் சாரதா பீடமென்றும் காமகோடி பீடம் உள்ள காஞ்சியில் சாரதா மடமென்றும் ஸ்தாபிதம் செய்தார்.

பாரதி, ஸரஸ்வதி, சாரதா நாமங்களைத் தம்மோடு இப்படிப் பொருத்திக்கொண்டு அமர அத்வைத நிலையை உபதேசித்த ஆசார்யர்களின்வழித்தோன்றல் காட்டும் வழி நின்று அமர பாரதி அமரமாகக் குளிரொளி பரப்பட்டும்.





மேற்படி சாதனங்கள் கீழ்க்கண்ட விலாசத்திலும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

கடவுள் காரியாலயம்
40, வைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை—5.
போன்: 844466

# ஐயம் போக்கும் ஐயன்

**டி. வி. விசுவநாத அய்யர்**

*கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற்கற்ற கேள்வி*
*வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்*
*எல்லாமாய் அல்லதுமாய் இருந்த தனை இருந்தபடி இருந்து காட்டிச்*
*சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்*
*—பரஞ்சோதியார்*

"ஆசார்ய தேவோ பவ" என்பது மறைமொழி. வைதிக வழியில்வந்த அனைவரும் வேதம் கூறியபடி நடக்க வேண்டும். வேதம் மனித வாழ்விற்கு வழி கோலுவதாகும். வேதம் ஆசார்யனைத் தேவனாகக் கூறுகிறது. சாமான்ய மனிதர்களுக்கு ஆசார்யன் தெய்வமானால், ஆசார்யனுக்கு தேவன் பரமாசார்யன் என்று கூறுவதில் தவறு இல்லையே! பரமாசார்யனுக்கும் ஆசார்யனாக ஆதி ஆசார்யனாக இறைவன் விளங்குகிறான். அந்த இறைவனது ஆசார்ய மூர்த்தத்தையே தக்ஷிணாமூர்த்தி என்கிறோம். கல்வியும், ஞானமும், கரையில்லாதது; எல்லையற்றது. எனவே கற்பதற்கு இது காலம், இன்ன இன்ன படித்தோம், யாவும் தெளிந்தோம் என்று கூறுவது இயலாது. ஆகவே வாழ்நாள் முழுவதும் ஆசார்ய கோலத்தில் இறைவனை அனைவரும் வழிபட வேண்டுவது மிகமிக அவசியம். அதுவே நன்மையும் பலனும் தர வல்லது.

சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனத் சுஜாதர் என்கிற நால்வரும் உலகைப் படைத்த பிரம்மனின் முதல் பிள்ளைகள். பிரம்ம தேவனிடம் பல காலம் வேதத்தைப் பயின்று ஓதி ஓதி உணர்ந்தவர்கள். அவ்விதம் ஓதி உணர்ந்தும் முற்றும் தெளிவு பெற இயலவில்லை. எனவே, ஞானத் தெளிவு பெறவேண்டி அவர்கள் கயிலை சென்று பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்தனர். நீண்ட காலம் தவம்செய்த அவர்களுக்கு இறைவன் அருள் புரிந்த திருக்கோலமே தக்ஷிணாமூர்த்தி வடிவமாகும். இறை

வன் எவ்விதம் தோன்றினான்? ஆலமரத்தடியில் சிறிய குமார வடிவத்தில் தென்திசை நோக்கி ஒரு காலை மடக்கிக் கொண்டு இன்னொருகால் அஞ்ஞானமாகிற முயலகனை மிதித்து கொண்டு ஒரு கையில் சின் முத்திரையுடன் வீற்றிருந்த நிலையில் காட்சியளித்தான். சனகாதியருக்கு அவன் புரிந்த உபதேசம் மௌனமே. இறைவனின் புன் முறுவல் ததும்பும் மௌனக் கருணையால் சனகாதியர் ஞானம் பெற்றார்கள். மௌன உபதேசம் என்பது சகல வித்தைகளையும் ஞானங்களையும் அநுபவித்து உணர்ந்து மேல் நிலைக்குச் செல்பவர்களுக்குச் செய்யும் உபதேசமாகும். அருணகிரி நாதருக்கும் முருகன் மௌனஉபதேசமேசெய்தான். "சும்மா இருசொல் அற" என்பது அவ்வுபதேசமாகும்.

இறைவன் கோரம் சாந்தம் ஆனந்தம் ஞானம் என்று பல வடிவங்களில் காட்சி தருகின்ற ஞான வடிவே தக்ஷிணாமூர்த்தி சொருபம்; ஆனந்த வடிவம் நடராஜ சொருபம்; ஆனந்த தாண்டவத்தைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது அவரது விரிந்த செஞ்சடை. நடராஜர் தாண்டவம் பொங்குகின்ற ஆனந்தம். பொங்கினால் அடங்கத்தானே வேண்டும்! அவ்விதம் பொங்கி வழிந்த ஆனந்தம் அடங்கிய நிலையே ஞானமாகும். அந்த ஞானமூர்த்தியே தக்ஷிணாமூர்த்தியாகும்.

தக்ஷிணாமூர்த்தியின் கோலத்தை வடமொழியில் உள்ள ஒரு தியான சுலோகம் வெகு அழகாக விளக்குகிறது;

சிஷ்யர்கள் வயது முதிர்ந்தவர்கள். குரு இளம் பிராயத்தினர் குருமௌனஉபதேசம்செய்கிறார். சிஷ்யர்களின் ஐயம் நீங்கிவிடுகின்றது. ஆலமரத்தடியில் நிகழ்கின்ற அதிசயத்தை என்ன வென்பது?

சாக்ஷாத் பரமேசுவரர் ஒரு காரியமுமில்லாமல் அசையாத மனத்தோடு கண்ணை மூடிக்



கொண்டு சாந்தமாக ஆனந்த நிலையில் அமர்ந்துள்ளார். அவருக்கு மௌனம் ஒருபோதும் கலைவதில்லை. சலனமற்ற மன நிலையில் இருந்தால் மௌனத்தைக் கடைப்பிடிக்க முடியும். நம்மால் மனதை ஒரு நிலையில் வைத்துக் கொள்ள இயலுவதில்லை. பலவித ஆசைகளினால் மனம் சஞ்சலமடைகிறது. இந்தச் சஞ்சலத்தால் கிழத்தன்மைவருகிறது. சாந்தம்தடைபடுகிறது. பரமேசுவரன்சாந்த சொரூபியாகவும், சஞ்சலமற்றவராகவும், என்றும் இளைஞராகவும் காட்சியளிக்கின்றார். இந்தக் கோலத்தை உள்ளத்தில் உணர்ந்து கொண்டு மிக வயோதிகர்களாகக் காணப்படும் சனகாதியர், சாந்த ஆனந்த கோலத்தை உபதேசமாகக் கொண்டனர்.

தக்ஷிணாமூர்த்தியே உரு வெடுத்து வந்ததாக நம்மால் கருதப்படும் ஜகத்குரு ஆதிசங்கர பகவத்பாதாள் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரங்களை நாம் நாள்தோறும் பாராயணம் செய்யும் முறையில் எளிதாகவும், தீவினைகளைப் போக்கி நல்வினைகள் விளைவிப்பதாகவும், உபநிஷதம் போதிக்கும் சித்தாந்தங்களையும் சுருக்கமாகச் சொல்லி அருளியிருக்கின்றார்கள். இந்தத் ஸ்தோத்திரங்களை மனனம் செய்வதால் வேதாந்தக் கருத்துக்களின் அறிவும், அமைதியும் நிச்சயமாக ஏற்படுகின்றன என்று பெரியோர்கள் உறுதி கூறியுள்ளார்கள். குரு பரம்பரையில் முதல் குருவாகப் பூஜிக்கப்படுபவரும், தக்ஷிணாமூர்த்தியுமான ஈசுவரனை எளிய சொற்செறிவுள்ள எட்டு சுலோகங்களால் ஸ்ரீமத் பகவத் பாதாள் துதித்திருக்கின்றார்கள். நாம் அடிக்கடி கண்டு ஆனந்தித்துஅனுபவிக்கும் பகத் பாதாளின் வண்ண ஓவியம், இளமைக் கோலத்தில் அதிதேஜஸுடன் விளங்கி, வயது முதிர்ந்த நான்கு சீடர்கள் சூழ்ந்து மௌன நிலையிலிருந்து சின்முத்திரைக் காட்டி நம்மைக் கவரச் செய்து, தக்ஷிணாமூர்த்தி கோலத்தையே பசுமரத்து ஆணி போல் நம் உள்ளத்தில் பதியச் செய்கிறது.

ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகளும் "சின்மயானந்த குரு" என்றே தக்ஷிணாமூர்த்தியை துதித்துள்ளார்கள். ஸ்ரீ அருணகிரிநாதரும் கந்தரனுபூதி இறுதியில் முருகனை "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" எனப் பிரார்த்திக்கிறார்.

ஆகவே, இம்மாதிரி ஞானத்தை வழங்கக் கருணையுடன் வீற்றிருக்கும் ஈசுவரனை நாள்தோறும் பக்தியுடன் பணிந்து போற்றி பக்குவமடைந்து சிறந்த ஞானம் பெற்று உய்வோமாக.

*

நம் அனைவரையும் காத்து ரக்ஷித்து வரும்
நடமாடும் தெய்வமாக விளங்கும் ஸ்ரீமத் பரமஹம்ச
பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் பவித்ரமான
பாத தூளியினால் 30—3—1958 அன்று எம் கம்பெனி
புனிதம் பெற்றது. அன்னாரது அருள்நோக்கின் பயனாகப்
பெருமதிப்பு வாய்ந்த ஸ்ரீமத் ராமாயணத்தையும்
பக்தியைப் பரப்பும் பிற நூல்களையும் வெளியிடும் அரிய
வாய்ப்புக் கிடைத்துள்ளதை அடக்கமுடியாத நன்றிப்
பெருக்கோடும் அகங்கனிந்த பணிவோடும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

—தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

அருள் நெறி காட்டும்

# லிப்கோ புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஸுந்தர காண்டம் — தமிழில் மூலம் | ரூ. 5 60 |
| 2. | ,, — C. R. S. தமிழ் வசனம் | ,, 15 00 |
| 3. | ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் ஸ்ரீமத் திராவிட வேதங்களும் | 6 00 |
| 4. | ஸ்ரீமத் பகவத் கீதை | 7 50 |
| 5. | அபிராமி அந்தாதி — உரையுடன் | 2 00 |
| 6 | ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ — உரையுடன் | 2 90 |
| 7. | நவக்ரஹ க்ஷேத்ர புராணம் | 6 60 |
| 8. | திருப்புகழ் மஞ்சரி | 2 00 |
| 9. | ஆறுமுகனுக்குகந்த ஆறு படைவீடுகள் | 7 50 |
| 10. | விரத பூஜா விதானம் | 7 20 |
| 11. | குடும்ப ஜோதிடம் | 7 20 |
| 12. | ஸ்ரீ மஹா பக்த விஜயம் | 5 75 |
| 13. | விவாஹ மந்த்ரார்த்த போதினி | 2 50 |
| 14. | கௌரீ கல்யாணம் வைபோகமே | 7 20 |
| 15. | ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீதேவீ பாகவதமும் | 3 50 |
| 16. | பெரிய புராணம் (கதைச் சுருக்கம்) | 1 50 |
| 17. | திருவிளையாடற் புராணம் ( ,, ) | 1 50 |

## தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை—600 017

51-ஆம் ஆண்டு ★ பொன்னான சேவை !

**சிறுவர் பக்கம்**

# கடவுளின் கட்டளை

**ஈ. ஸ்ரீ. நரசிம்மன்**

பூமியைப் படைத்த கடவுள் மனிதன், மிருகம், பறவை என்று எத்தனையோ ஜீவராசிகளைப் படைத்தார். அவை தங்கள் சாமர்த்தியத்தில் பிழைத்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டார். மனிதன், மிருகம் என்ற பாகுபாடின்றி, காடாக வளர்ந்துவிட்ட செடிகொடிகளுக்கிடையே எல்லாம் வளர்ந்தன. மான், கரடி மயில், யானை, புலி, சிங்கம், மாடு முதலியவை இருந்த இடத்திலே தான் மனிதர்களும் இருந்தார்கள். மிருகங்கள் இருந்த இடத்தில் இரவெல்லாம் கூச்சல். காரணம், பலமுள்ள மிருகங்கள் பலமில்லாத மிருகங்களைக் கொன்று தின்ன ஆரம்பித்தது தான். ஆனால் மனிதர்களைக் கண்டு மட்டும் அவை பயந்தன. ஏனெனில் அவற்றைப் போல் மனிதர்களுக்கு நான்கு கால்கள் இல்லை. ஆதலால் இரட்டைக் கால் மனிதர்கள் பொல்லாதவர்களாயிருப்பார்களோ என்று அவை பயந்தன. அதேபோல் மனிதர்களுக்கும் அவற்றிடம் அச்சம் நான்கு கால் பிராணிகள் தங்களையும் இரையாக்கிக்கொள்ளுமோ என்று! எனவே காதும் காதும் வைத்தாற் போல மேட்டுப் பாங்கான இடத்தைத் தேடிக் கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள்.

ஆனால் என்ன ஆச்சரியம்! பின்னால் திரும்பிப் பார்த்தால் பசுக்களும் எருதுகளும் கன்றுகளும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்த மனிதர்கள் "பசுக்களே! எருதுகளே! நீங்கள் எங்களோடு வருவது நியாயம் அல்ல. நாங்கள் இரண்டு கால் பிராணிகள். நீங்கள் நாலுகால் பிராணிகள். உங்களுக்கும் எங்களுக்கும் எத்தனையோ வேறுபாடுகள். நீங்கள் உங்கள் இனத்தோடு இருப்பது தான் நல்லது" என்றார்கள்.


'மனிதர்களே! நீங்கள் எங்களைத் தடுக்கக் கூடாது. நாங்கள் உங்களோடு இருக்கத்தான் ஆசைப்படுகிறோம். நாங்கள் சாக பட்சிணிகள். எங்களால் உங்களுக்கு ஒரு கெடுதலும் வராது. முடிந்த வரை உங்களுக்கு அநுகூலமாக இருக்கவே முயலுவோம்" என்றன மாடுகள். அதற்கு மேல் மனிதர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. மணற்பாங்காகவும், மேடாகவும் உள்ள இடத்தைத் தேடி மரத்தின் கீழ் தங்கினார்கள். மாடுகளும்

அவர்களோடுமற்ருெரு மரத்தின் கீழ் தங்கின.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு மனிதர்கள் எல்லோருஞ்சேர்ந்து இடத்தைச் செப்பனிட்டார்கள். கொம்புகளையும் கொடிகளையும் கொண்டு குடிசைகட்டிக்கொண்டார்கள். இலைகளைப் பரப்பிக் கூரைகள் வேய்ந்து கொண்டார்கள். அம்மாதிரியே மாடுகளுக்கும் கொட்டில்கள் கட்டிக் கொடுத்து அவற்றை அவற்றில் வசிக்கும்படி செய்தார்கள். கன்றுகள் பசுவின் பாலை ஊட்டிக் குடித்தன. வயிறு நிறைந்து கற்றுக்கொண்டார்கள். தங்கள் உணவில் சிலவற்றைப் பசுக்களுக்கும் போட்டார்கள்.

காட்டில் செந்நெல் தானியங்கள் உண்டாயிருந்தன. அந்த நெல்லைக் கொணர்ந்து தோலை நீக்கிச் சமைத்துச் சாப்பிடவும் தெரிந்து கொண்டார்கள்.

அவை மிகவும் ருசியாக இருந்தன அவற்றைப் பயிர் செய்ய எண்ணி, கண்டகண்ட இடங்களில் நெல்லை விதைத்தார்கள். ஆனால் மாடுகள் கட்டியிருந்த இடத்தில்



சுற்றிச் சுற்றித் துள்ளின.

மனிதர்கள் தாமும் அம்மாதிரி துள்ளிக் குதிக்க எண்ணங்கொண்டார்கள். பசுவின் பாலைக் கறந்துசாப்பிட்டார்கள். உற்சாகமும் பலமும் அதிகமாக ஆயின.

கொஞ்சநாளில் பாலிலிருந்து தயிர் வெண்ணெய், நெய், முதலிய பொருள்களைத் தயாரிக்கவும் கற்றுக்கொண்டார்கள். பற்றுக்குறைக்குக் காய்கறி-கிழங்குகளை வேகவைத்துத் தின்னவும் விதைத்த நெல் வளமாய்க் கொழித்து வளர்ந்தது. மாட்டின் சாணம், மரம், செடி கொடிகளின் தழைகள், புல் பூண்டுகள் இவை பயிருக்கு நல்ல எரு என்பதை மனிதர்கள் உணர்ந்தார்கள். உரமிட்டு உழுது வாலாயமாய்க் கிடந்த நிலங்களில் தானியங்களைப் பயிர் செய்தார்கள்.

ஆறுமாதங்களில் முற்றிக் கதிர்சாய்ந்து பூமியில் படுத்தது. அவற்றை அறுத்து நெல்லைத்

தட்டி எடுத்துக்கொண்டார்கள். தாள்களை அப்படியே விட்டு விட்டார்கள்.

ஒருநாள் மாடு ஒன்று அதனை மேய்ந்தது. விழுந்து விழுந்து கடித்துச் சாப்பிட ஆரம்பித்தன மாடுகள். மனிதர்கள் தங்களுக்கு நெல் சேகரித்து வைப்பது போல் அவைகளுக்கும் வைக்கோலைச் சேகரித்தார்கள்.

மனிதர்கள் மாடுகளிடம் இப்படி நன்றி உணர்ச்சி பாராட்டவே 'மனிதன் கெட்டிக காரனாக ஆகிவிட்டான். மாடு களைச் செல்வமாக வைத்துக கொள்வான். தன குழந்தை களைப் போல் பசுங்கன்றுகளையும் காப்பான்' என்று கடவுள் எண்ணினார்.

சூரியன் தெற்கிலிருந்து வடககு நோக்கிச் செல்லத் தொடங்கிய காலம் அது. கடவுள் அவர்கள்முன் தோன்றி, ''மனிதர்களே! நீங்கள் உங்களுக கென்று ஒரு வழி வகுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்கிறேன் நீங்களும் பசுக்களும் ஒற்றுமையாகஇருக்க ஓர் உடன்படிக்கை செய்து வைக்கலாம் என்றுஇருக்கிறேன். அதன்படி நீங்கள் நடந்துகொண் டால் உலகத்திலேயே நீங்கள் உயர்வீர்கள்'' என்றார்.

''ஆண்டவன் ஆணைக்குக் காத் திருக்கிறோம்.'' என்றார்கள் மனி தர்கள்.

''நீங்களும், மாடுகளும் நெருங் கிய தொடர்பு உடையவர்க ளாகி விட்டீர்கள். நீங்கள் மாடு களின் உதவியேடு நிலங்களை உழுது பயிரிடுங்கள். பயிர் அறு வடையாகும் போது நெல்லை நீங்கள் எடுத்துக்கொள்ளுங் கள். ஆனால் வைக்கோலை மாடுகளுக்குக் கொடுத்து விடுங் கள்.

நெல்லைக் குத்தி அரிசியை நீங் கள் எடுத்துக் கொள்ளுங்கள். அரிசியில் விழும் தவிட்டை மாடு களுக்குக் கொடுத்துவிடுங்கள். அரிசியைத் தண்ணீரில் கழுவி உலையிலிட்டுச் சோறு சமைத்து நீங்கள் சாப்பிடுங்கள். ஆனால் அதன கழுநீரை மாட்டிற்குக் குடி தண்ணீராகக் கொடுத்து விடுங்கள். இவ்வுலகில் வாயில் லா ஜீவன்களாகத் தாம அவை வளைய வரும். ஆதலால் நீங்களே அவற்றின எண்ணங்களையும் ஆசைகளையும் தெரிந்து நடக்க வேண்டியது.

உங்கள் முன்னே அடிக்கடி எஎனால் வரமுடியாது நீங்கள் தினமும் பார்க்கும் கடவுள் சூரிய பகவான் ஆவார். அவர் அருளால் தான் 'நாடு வளமுறும். அவரை நீங்கள் உத்தராயணத்து முதல் நாள் அன்று புதிய அரிசியைக் கொண்டு பொங்கல் செய்து பூஜை செய்ய வேண்டும்.

மறுநாள் மாட்டிற்காகப் பால் பொங்கல் நீங்களே செய்ய வேண்டும். மாடுகளைக் கழுவிக் கட்டவேண்டும். அலங்காரம் செயது அவைகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டுப் பூஜை செய்து பொங்கலைப் படைதக வேண்டும்.

பூமி, மாடு, மனிதர் இம் மூவருக்கும் நெருங்கிய [சம்பந்த மிருப்பதால், பொங்கல் தண் ணீரை எடுத்துப்போய் நெல் விளையும் பூமியிலும் 'பொங் கலோ பொங்கல்!' என்று கூறித் தெளிக்க வேண்டும். இதற்கு மாட்டுப் பொங்கல் என்று பெயர்!' என்றார்.

கடவுளின் கட்டளைப்படி பொங்கல் பண்டிகை மாதம் முழுவதிலும் கொண்டாடப் பட்டாலும் தமிழ் நாட்டில் தனிப் பெருமையுடன் கொண் டாடப்படுகிறது. பசுவும் கன்றும் தெய்வமாகப் போற்றப்படு கின்றன.

---

# பகவானைக்காணோம்!

பகவான் நாரதருக்கு ஆசை, கிருஷ்ண பரமாத் மாவைக் காண வேண்டு மென்று! திரிலோக சஞ்சாரி யான அவர் நினைத்த மாத் திரத்திலே துவாரகையை அடைந்தார். கண்ணனின் மாளிகையில் நுழைவதற்கு உத்தரவு பெறவேண்டுமா? 'கிருஷ்ணா' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந் தார். கண்கள் மாளிகை முழுவதையும் நோட்ட மிட்டன. ஆனால் எங்குமே பகவான் கண்களில் பட வில்லை. ''எங்கே போயிருப் பார்?'' மீண்டும் உரக்கக் குரல்கொடுக்க எண்ணிய அவரை, ருக்மிணியின் குரல் "வாருங்கள், முனிபுங்க வரே!'' என்று வரவேற்றது.

"பகவானை எங்கே காணோம்?" — நாரதர் கேட் டார்.

"பூஜையில் அமர்ந்திருக் கிறார்.''

"பூஜையிலா?'' வியந்த நாரதர் யோசனையில் ஆழ்ந் தார். 'எந்த கிருஷ்ணபர மாத்மாவைப் பரம்பொரு ளின் அவதாரம் என்று மூவுலகமும் போற்று கிறதோ, எவரை ரிஷிகளும் முனிவர்களும் யோகர்களும் சித்தர்களும், துறவிகளும் குடும்பிகளும், தியாகிகளும் போகிகளும் பாகுபாடின்றி வழிபடுகிறார்களோ, அவரே பூஜையில் இருப்பதாவது? அவர் யாரை வழிபடுவார்? தெய்வமே தெய்வத்தை வழிபடுமோ?' —நாரதருக்கு அந்த மாளிகையில் பூஜை அறையைப்பார்த்ததாகவே நினைவு வரவில்லை. ருக்மிணி யிடம் வழி கேட்டுத்தெரிந்து கொண்டு பூஜை அறையை எட்டிப் பார்த்த நாரதருக்கு ஒரு பேராச்சரியம் காத் திருந்தது.

பகவான் கிருஷ்ணர்பக்தர் களின் சிலைகளுக்கெதிரே அமர்ந்து தியானத்தில் ஈடு பட்டிருந்தார்.

—அக்ஷயம்

# கண்டவரும் விண்டவரும்

வெகு காலத்துக்கு முன் வைசாலி நகரத்தில் அறிவிற் சிறந்த ஓர் அந்தணர் வசித்து வந்தார். பெயர் பிருமமதத்தர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். உபநயனம் செய்வித்த பின், அவர்தம் இரு குமாரர்களையும் காசியில் உள்ள நண்பரிடம் கல்வி பயில அனுப்பி வைத்தார்.

குருகுலவாசம் செய்து இருவரும் சாஸ்திரங்களை நன்கு கற்றுத் திகழ்ந்தனர் பயிற்சி முடிந்த பின் குருவிடம் விடை பெற்று வீட்டை அடைந்தனர். வெகு நாட்கள் பிரிந்திருந்த தம் குமாரர்களைக் கண்டு பிரும்ம தத்தர் பெரு மகிழ்ச்சி கொண்டார்.

ஒருநாள் காலை நேரம். பிரும்மதத்தரும் அவர் குமாரர்களும் அமர்ந்து சாஸ்திர சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள். தம் குமாரர்களின் கல்வியறிவைச் சோதித்தால் என்ன என்று பிரும்மதத்தருக்குத் தோன்றியது "நீங்கள் இருவரும் நல்லபடி வேதம் பயின்றிருக்கிறீர்கள் அல்லவா? என் ஒரு கேள்விக்கு உங்களால் பதில் சொல்ல இயலுமா?" என்று கேட்டார்.

"தாராளமாகக் கேளுங்கள், தந்தையே!" என்றனர் ஏக காலத்தில் இரு குமாரர்களும்.

"பிரும்மம் என்றால் என்ன?" பிரும்மதத்தர் கேள்வியைத் தொடுத்தார்.

இரு பிள்ளைகளும் சிறிதுநேரம் மனத்துள் ஏதோ சிந்தித்தனர். பிறகு, மூத்தவன் கூறினான்: "பிரும்மம் என்பது பெரியது; பேரதிசயமானது. அது எத்தனை தூரம் பரந்து விரித்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துக் கூறுவதே கடினம். அது மண், விண் இரண்டிலுமே தோய்ந்திருக்கிறது. எண் திசைகளிலும் அது விரவியிருக்கிறது. வானத்தைக் காட்டிலும் விசாலமானது. ஆனால், அதன் நிழல் சிறு குடத்து நீரிலும் படியும். விய[illegible]கத்து விரி நீரிலும் விரியும். என்றாலும் வானம் வானந்தானே? அதன் வடிவம் குறுகவோ, பெருகவோ முடியுமா? அல்லது அதன் எல்லையைத்தான் கணக்கிட முடியுமா? குடத்து நீரில் விழும் வானத்து நிழலுக்கும், உண்மையான வானத்துக்கும் என்ன தொடர்போ, அதே தொடர்புதான், இந்தச்சராசரமானசிருஷ்டிக்கும் பிரும்மத்துக்கும்" எனறவன், "நான் கூறுவது விளங்குகிறதல்லவா?" என்று கேட்டு நிறுத்தினான்.

பிரும்மதத்தர் இளையவனைப் பார்த்து, 'இப்பொழுது நீ சா[illegible] பிரும்மம் என்றால் என்ன?" என்று கேட்டார்.

"பிரும்மம்! பிரும்மம் என்றால் பிரும்[illegible]ம்!" [illegible]ளக்க முடியாமல் அவன் மௌனமானான்.

அதோடு, தான் பெற்ற கல்வியின் தரத்தை எண்ணித் தலை குனிந்தான்.

இளையவனின் விளக்க இயலாத இந்த விளக்கத்தைக் கேட்ட தந்தையின் முகத்தில் மகிழ்ச்சி எக்காளமிட்டது. பிரும்மத்தைக் கண்டு விட்ட ஒளி கண்களில் வீச அவர் கூறினார்:

"குழந்தாய்! பரம்பொருளைப் பற்றிய பேரறிவை உண்மையில் நீயே அடைந்திருக்கிறாய். பிரும்மத்தை விரித்துரைப்பது என்பது முடியாத காரியம். அது சொல்லுக்கு அடங்காதது. பட்டறிவு ஒன்றாலேயே பெறக் கூடியது. அதை விளக்கச் சொற்கள் பயன்படா. அது பேரண்டம் முழுவதிலும் விரவியிருப்பது. வெளிப்படையாக அதைப் பார்க்க முடிவதில்லை. பாலில் வெண்ணெய் போல அதை அடைய வேண்டுமானால் கடைய வேண்டும். வெண்ணெயைப் பெறப் பாலைக் கடைகிறோம். பரம்பொருளைப் பெற மனத்தைக் கடைய வேண்டும். விளக்கின் ஒளி அறை முழுவதும் பரவிப் பிரகாசிப்பது போலப் பிரும்மத்தின் ஒளி உலகம் முழுவதிலும் விரவி ஒளி வீசுகிறது. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாயிருக்கும் பிரும்மம் விளக்கின் சுடரை ஒத்தது, சுடர் ஒளிக்கு எது முகம் என்று கூறமுடியுமா? எந்தப் பக்கமும் முகம்தானே? அதே போலப் பரம்பொருளின் உருவத்தையும் கோடி காட்ட முடியாது. எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைக் கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர்!"

பேச்சை முடித்த பிரும்மதத்தருக்குத் தாமும் மூத்த மகனாகப் பேசி விட்டோமோ என்ற எண்ணம் எழவே, வாய் மூடி மௌனியானார். இரு பிள்ளைகளும் தம் தம் மனோ தர்மத்துக்கு ஏற்பத் தந்தையை எடைபோட்டனர். —அக்ஷயம்


With Best Compliments From

# Penguin Textiles Limited

Tarnaka Uppal Road
Post Box No : 1204
HYDERABAD-500 039 A. P.

(Regd. office: No. 14, Second Cross Road,
Raja Annamalaipuram, Madras-600 028)

Telegram . 'Penguin' Hyderabad.
Phones : Mills : 703227
Office : 703370
Mg. Dir : 71359 (Per.)

Spindledge : 12096
Manufacturers of 60s cotton yarn
Chairman and Managing Director :-
Sri Ar. N. Ramasamy Chettiar.

# ஆனைமுகன்புகழ்

**"துறைவன்"**

தந்தையர் விழுந்து கும்பிடும் யானை
தாய்மார் பணிந்து தொழுதிடும் யானை
வந்தனை இளைஞர் இயற்றிடும் யானை
வழியில் அமர்ந்து வாழ்த்திடும் யானை

குழந்தைகளோடு குழைந்திடும் யானை
கூடியேவிளையாடிடும் யானை
விழுந்து பணிபவர்க்(கு)அருள்செயும் யானை
விக்கினமெல்லாம் விலக்கிடும் யானை

ஆர்தொழுதாலும் அருள்செயும் யானை
அபயம் தந்து காத்திடும் யானை
கார்தவழ்மேனிக் கணபதி யானை
கவிதையை மலையில் எழுதிய யானை

மோதகம் தேங்காய் விரும்பிடும் யானை
முதலும் முடிவுமாய் விளங்கிடும் யானை
வேதனையின்றி நம் முயற்சி களெல்லாம்
வெற்றியடைந்திட விரைந்தருள்யானை

கலக்கமுற்றோர்தம் குறைகளையெல்லாம்
காதுகொடுத்துக் கேட்டிடும் யானை
விலக்கித் தடைகளை விரட்டிடும் யானை
வீதியில் வீட்டில் விளங்கிடும் யானை!

ஒன்றென முதலில் நின்றிடும் யானை
உருவ எழுத்தில் இரண்டெனும் யானை
என்றும் நம் மோடிருக்கும் யானை
எப்பிழையாயினும் பொறுத்தருள் யானை

வந்தவர்க் கெல்லாம் வரந்தரும் யானை
வரையாதுதவி வழங்கிடும் யானை
அந்தமில் முனிவர் அமரர் ஆகியோர்
அனைவரும் துதிக்கும் அண்ணல் யானை

# பார்வை

## சாண்டில்யன்

கண் எனப்படும் உறுப்பு மூளையின் சாளரம் என்று விஞ்ஞானம் கண்டுபிடித்திருக்கிறது. இதை சாஸ்திரங்களும் அநாதியான வேதங்களும் பல்லாயிரம ஆண்டுகளுக்கு முன்னால் கூறியிருக்கின்றன தொன்றுதொட்ட நாளாக சமூகப்பழக்கமும் இதை உணர்ந்திருக்கிறது. ஒருவன் புத்தியையும் மனதையும பொறுததுப் பார்வையும் விளைவுகளும இருக்கும் என்பது ஹிந்துக்களின் பரிபூர்ண நம்பிகை. படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோருமே பார்வையைப்பற்றி சில திட்டமான கருத்துக்களைக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக ஒரு தெருவில் ஒரு கொடியவன் இருந்தால், ஏதாவது நல்ல காரியத்துக்கு பிள்ளையை அனுப்புபவன், "அப்பா! அந்தப் பக்கம் போகாதே, அவன் பார்த்து விடப்போகிறான்" என்று சொல்லுகிறான். கெடுதலை நினைக்கும் மனிதன் பார்வையில் அத்தனை கெட்டசக்தி இருப்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதே மாதிரிதான் மகான்கள் பார்வையிலும் சக்தி மகத்தானது, நல்ல சக்தி. "எதற்கும் அவரைப் போய் நமஸ்காரம் செய்துவிட்டுப் போ, அவர் பார்வை உன்மீது விழட்டும்" என்று சொல்வதையும் கேட்டிருக்கிறோம்.

ஒரேவிஷயத்தைப்பலபேர் பல விதமாகப் பார்க்கிறார்கள். ஒரு நல்ல ரோஜா புஷ்பம் செடியில் புஷ்பித்திருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அதைத் திருடன் பார்த்தால், திருடி விற்றால் என்ன கிடைக்கும் என்று யோசிக்கிறான். பக்தன் பார்க்கிறான், சுவாமிஅலங்காரத்துக்கு அது எத்தனை அழகாயிருக்கும் என்று சிந்திக்கிறான். காமுகன் பார்க்கிறான், அதை தனக்கு வேண்டிய பெண்ணின் தலையில் வைத்தால் அனுபவத்துக்கு நன்றாயிருக்குமே என்று எண்ணுகிறான். தோட்டக்காரன் பார்க்கிறான், போட்ட எரு போதாது, இன்னும் போட்டால் இன்னும் அதிகப் பெரிதாக மலரும் என்று நினைக்கிறான். இப்படி சிந்தனைக்கும், நடத்தைக்கும் பொறுத்த படி பார்வை ஏற்படுகிறது.

குழந்தைகளுக்கு ஏதாவது தொடர்ச்சியாக வியாதி வந்தால் திருஷ்டிபட்டு விட்டது என்று மிளகாயைச் சுற்றி அடுப்பில் போடுகிறோம். இல்லாவிட்டால் பழைய துடைப்பத்தை எடுத்துச் சுற்றித்துடைப்பத்துக்குத்தீவைக்கிறோம். காரத்தாலும் தீயினாலும் துஷ்டபார்வையை எரிக்க முடியும் என்ற நம்பிக்கை தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

இத்தகைய பார்வை நல்லவர்களிடமிருந்து வரும்போது நாம் நன்மை யடைகிறோம். அவர்கள் மனம் மாசு மறுவற்று இருக்கும் காரணத்தால், அவர்கள் புத்தியில் புனித எண்ணங்கள் எழுவதால்.

மகரிஷிகள் பகவானுடைய கடைக்கண் பார்வைக்கு ஏங்

கிறார்கள். அவன் கண்ணழகில் மயங்கினார்கள். சீதை ராமனைப் பற்றி அனுமானை வினவியபோது ''ராம: கமலபத்ராக்ஷ:'' என்று தான் பதிலைத் துவங்கினான் மாருதி. ''ராம'' என்ற பதத்திற்கு ''சௌந்தர்யக் கடல்'' என்றும், ''கமல பத்ராக்ஷ:'' என்பதற்கு ''அதில் ஒரு சுழியாயிற்று அமிழ்ந்துவர்க்கு வேண்டுவது'' என்றும், திருவாய் மொழியின் ஈடுக்கிரந்தம் கூறுகிறது. கடலில் உள்ள சுழலில் சிககியவன் எப்படி அதில் சுழன்று மூழ்கிப் போவானோ, அப்படியே ராமனது சௌந்தர்ய சாகரத்தில், சுழியைப் போலிருக்கும் கண்ணில் அகப்படுபவனும் அந்தக் கடலில் ஆழ்ந்து போவான் என்பது மகான்களின் வியாக்கியானம்.

அப்படி பகவானுடைய கண்களில் ஈடுபட்டு அமிழ்ந்து போவதற்கு திருப்பாணாழ்வார் உதாரணமாக இருக்கிறார். ரங்கநாதன் அழகிய கண்களை நேரில் சேவித்ததும் ''அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று கூறிச்சந்நிதியிலேயேமுக்தியடைந்ததாக சரித்திரம் இருக்கிறது.

ஈசுவரனுடைய கண்ணிலிருந்து ரத்தம் வடியக் கண்ட கண்ணப்ப நாயனார் தம் கண்களையே பிடுங்கிப் பசுபதிக்கு வைக்க முயன்றதாகவும் வரலாறு இருக்கிறது.

இவையெல்லாம் கட்டுக்கதைகளாக இருக்க முடியாது. சாதாரண மனிதர்களுடைய கண்ணுக்கே நல்லதையும் பொல்லாததையும் கற்பிக்கும்'நாம், குண பூஷணனான பகவானின் கண்களுக்கு எத்தனை விசேஷத்தைத்தான் கற்பிக்க முடியாது? அவன் பார்வையின் மகத்துவத்தை நாம் ஏன் உணரமுடியாது? நாமே உணரமுடியுமானால், மகான்களால் அவன் பார்வைக்கு எத்தனை மாகாத்மியத்தைக் கற்பிக்க முடியாது? கற்பித்துச் செயல்பட ஏன் முடியாது?

இப்படி சர்வசக்தி வாய்ந்த பார்வையில் பகவானின் பார்வையைவிட மகான்பார்வை உயர்ந்தது. அவர்கள் மனம் சதா ஆண்டவனை நோக்கிக் கொண்டிருப்பதால். அது நம்மீது திரும்பும் போது அதிலிருந்து கிடைக்கும் நன்மைகள் அனந்தம். முதலில் புரியாது, புரியும்போது வியப்பாயிருக்கும்.

உதாரணம் இப்பொழுது கண் முன்னால் நிற்கிறது. பதவி இழந்த நிலையில், அதிகார வர்க்கம் அழிக்க முற்பட்ட சங்கடத்தில். சாந்தி பெற இந்திராகாந்தி பெரியவாளைப் பார்க்கப் போனார், பார்த்தார். பெரியவாள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இந்திரா சொன்ன எதற்கும் பதில் கிடையாது. விடைபெற்ற போதும் அதே நிலை. அநேகர் என்னிடம் சொன்னார்கள் ''பெரியவாள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை'' என்று.

''அதனாலென்ன?'' என்று கேட்டேன் பதிலுக்கு.

''போய் என்ன பயன்?'' என்று கேட்டார்கள்.

ஒரு விஷயத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். முக்கால் மணி நேரம் ஒரு மகானின் பார்வை அவள்மீது விழுந்திருக்கிறது என்பதைப் பலர் உணரவில்லை. அதன் பயன் இன்று தெரிகிறது.

அதளபாதாளத்தில் அமிழ்ந்துவிட்ட ஓர் அபலையை பாரதத்தின் உச்சிக்கு ஒரு மகானின் பார்வைதான் உயர்த்தியிருக்கிறது. வேறு எதுவும் இந்திராகாந்தியை உயர்த்தவில்லை, உயர்த்தியிருக்க முடியாது. இதில் சந்தேகம்வேண்டாம். பார்வையின் சக்தி அப்படி.

# வானதி வழங்கும் தெய்வீக நூல்கள்

உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் அவசியம் இடம்பெற வேண்டியவை.

1. தெய்வத்தின் குரல் 1 (ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜ.பை. ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அருள் வாக்குகள்) 25-00
2. தெய்வவாக்கு (ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அருளவாக்குகள) ,, 9-00
3. ஞான வழி ,, 4-00
4. இந்து தர்மங்கள் ,, 4-00
5. நல்வழி ,, 3-00
6. நவராத்திரி நாயகி (தேவியின் மகிமை) ரா. கணபதி 20-00
7. காமாக்ஷி கடாக்ஷி ,, 3-00
8. திருப்புகழ் விரிவுரை (திருப்பறங்குன்றம், திருச்செந்தூர்) திருமுருக கிருபானந்தவாரியார சுவாமிகள் 20-00
9. திருப்புகழ் விரிவுரை (பழனி) ,, 20-00
10. திருப்புகழ் விரிவுரை (சுவாமிமலை) ,, 9-00
11. பிள்ளையார் பெருமை ,, 5-00
12. கநதரனுபூதி (விரிவுரை) ,, 5-00
13. கந்தரலங்காரம் (விரிவுரை) ,, 9-00
14. கந்தவேள் கருணை (கந்தபுராணம்) ,, 10-00
15. சிவனருட் செல்வர் (பெரியபுராணம்) ,, 12-00
16. சிந்தனைச்செல்வம் ,, 7-00
17. வாரியார் வாழ்க்கை வரலாறு ,, 12-00
18. தமிழ் மந்திரம் (திருமந்திர விளக்கவுரை) பாலூர் கண்ணப்ப முதலியார் 14-00
19. பாகவதம் (பக்தி வயல்)—பௌராணிகர் 7-50
20. ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள்—வி. என். சிதம்பரம் 3-00
21. ஸ்ரீ தர்ம சாஸ்தா —கே. எஸ். குளத்து ஐயர் (சபரிமலை ஐயப்பன் வரலாறு) 3-50
22. பத்துப் பொருததங்கள் —வித்வான் வே. லட்சுமணன் 5-00
23. பொன்மழை (கனகதாரா ஸ்தோத்திரம்) கவிஞர் கண்ணதாசன் 2-00

☐ தனிப்பிரதி பதிவு தபாலில் பெற புத்தக விலையோடு ரூ 2-50 சேர்த்து M. O. செய்க. வி. பி. பி. தபால் செலவு தனி. வி. பி. பி.யில் பெற எழுதுங்கள்.

:விவரங்களுக்கு:

## வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு—பாண்டிபஜார் பக்கம்,
தி.நகர். சென்னை-600 017
போன் :: 442810

# பரிசு

## மகாகவி ரவீந்திர நாத் டாகுர்

கோவில் மணி கண கணத்தது. கெட்டி மேளம் கொட்டியது. அலங்கார தீபாராதனை நடந்தது. பக்தர்கள் அனைவரும் மெய்மறந்து கன்னத்தில் போட்டுக் கொண்டனர். ஆண்-பெண் அடங்களாக அவன் நினைவாகவே இருந்தனர்.

அதைக் கண்ட ஆண்டவன் மெய்ம்மறந்தான். தன் கணங்களைக் கூப்பிட்டு, "என் பக்தர்களுக்கு உகந்த பரிசு அளியுங்கள்!" என்று ஆணையிட்டான்.

"சக்தி தரவா?"

"ஊஹூம்."

"பெயரும் புகழும்?"

"ஊஹூம்!" உதட்டைப் பிதுக்கிய ஆண்டவன், "அவர்கள் அடைய விரும்பும் பொருள்களைத் தாமாகவே அடையவேண்டும். அப்படி ஒரு பரிசு எடுத்துச் செல்லுங்கள்!" என்றான்.

"அப்படி என்ன பொருள் இருக்கிறது, ஆண்டவா?"

"தைரியமும் துணிவும். இவற்றை அவர்கள் பெற்று விட்டால், மண்ணுலகில் அவர்கள் வேண்டும் பொருள் வேண்டியது கிடைக்கும்!" என்றான் ஆண்டவன்.

மறுகணம் கைகூப்பிய கணங்கள். "ஆண்டவா! பெண்களுக்கு என்ன பொருள் கொடுக்கலாம்?" என்று கேட்டன.

"நீங்களேதான் தீர்மானியுங்களேன்!"

வெகுநேரம் மண்டையை உடைத்துக்கொண்ட கணங்கள், "நாணம்" என்று இழுத்தன.

"அதைப் பிறக்கும் பொழுதே நான் அவர்களுக்கு வழங்கி விட்டேன்"

"அன்பு?"

"இயல்பாகவே அது அவர்களிடம் நிறைந்திருக்கிறது."

"அப்படியானல் ஆண்டவா, நாங்கள் எதை எடுத்துச் செல்லலாம் என்பதை நீங்கள்தான் கூறவேண்டும்!" கணங்கள் கையைப் பிசைந்து நின்றன.

"அவர்கள் பொழுது போக்குக்கு அன்பும் அழகும் உருவான குழந்தையைக் கொண்டு செல்லுங்கள். அதை அடைந்து அவர்கள் இன்பம்—துன்பம் இரண்டையுமே மறந்து விடுவார்கள்!" என்றான் ஆண்டவன்.

அடுத்த கணமே அவரவர்க்குரிய பரிசுப் பொருள்களைக் கணங்கள் கொண்டு சேர்த்து விட்டன. அது முதற்கொண்டு துணிவே துணையாக வாழும் ஆண் மகனும், குழந்தையே கதியாக வாழும் பெண்ணும் இன்பதுன்பங்களை மேவி நிற்கிறார்கள்.

—தமிழாக்கம்: ரா. வீ.

# சந்தனச் சிமிழ்



**வசுமதி ராமஸ்வாமி**

மறுநாள் குரு மகாராஜ் ஜயந்தி. நித்யானந்த மடம் வழக்கம் போல் அமைதியாக இருந்தது. சத்யானந்தர் தம் அறையை விட்டு வெளியே வந்து, அடுத்திருந்த அறையைப் பார்த்தார். வடக்கு நோக்கி இருந்த அந்த அறையின் கதவுக்கு மேல் 'குரு மஹாராஜ்' என்று எழுதியிருந்தது. அந்த எழுத்துக்களுக்கு மேல் மும்மூர்த்திகளின் உருவம் பொறித்த ஒரு சலவைக் கல் சுவரில் பதிக்கப்பட்டிருந்தது. நாளாகி விட்ட காரணத்தினால் சலவைக் கல்லின் வெண்மை வெகுவாக மங்கி இருந்தது. 'தியானம் கலைவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்' என்று கணக்குப் போட்ட சத்யானந்தர் கையில் திருக்குறளை எடுத்துக் கொண்டு, மறுநாளைய வைபவத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றார்.


அன்று ஏனோ அவர் மனம் ஒரு நிலையில் இல்லை. வாய் ஏதோ ஓதிக் கொண்டிருந்ததே யொழிய மனம் அன்று காலை நடந்த சம்பவத்தைச் சுற்றியே வலம் வந்து கொண்டிருந்தது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஒரு சம்பவம் நிகழுமென்று அவர் நினைக்கவேயில்லை. 'என்றோ புதைந்து விட்டது' என்று நினைத்த ஓர் அதிர்ச்சியின் கனல் இன்றும் உமிக்கனலாக இருக்குமென்று நினைக்கவேயில்லை.

அன்று காலை வழக்கம் போல் அவர் பிரார்த்தனைக்குச் சென்றிருந்தார். குரு மகாராஜ் பஜனை செய்ய, அவருக்குப் பின்னால் சத்தியானந்தரும மற்றவர்களும் நாமாவளியைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். பஜனை முடிந்ததும் பக்தர்கள் வரிசையாகக் குரு மகாராஜின் ஆசி பெற வந்து கொண்டிருந்தார்கள். சத்யானந்தர் லயித்துக் கண்களை மூடிக் கொண்டிருந்தார். "சுவாமி! என் கணவர் தீய பழக்கத்தினால் நோய் வாய்ப்பட்டிருக்கிறார். இருநூறு ரூபாய் செலவு செய்தால் அவரைப் பிழைக்க வைக்கலாம். என்னால் மருந்து கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இத்தனை நாட்கள் என்னை ஏறிட்டுப் பார்க்காதிருந்த அவர் செல்வம் இழந்து, சிறப்பிழந்து, சொந்தத் தொழிற்சாலையையும் இழந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டு, என்னிடம் வந்திருக்கிறார். எனக்கு வசதி இல்லை, சுவாமி! உங்கள் ஆசீர்வாதம் தான் எனக்கு மாங்கல்ய பலனை அளிக்கவேணும்.''

சத்யானந்தருக்கு அது அறிமுகமான குரலாகத் தோன்றவே, கண்களைத் திறந்தார். பூத்துக் குலுங்கும் பச்சைக் கொடி போன்ற அழகி நிர்மலாவா இப்படித் தோலும் எலும்புமாகி விட்டாள்? அவருக்கு மனத்தை என்னவோ செய்தது. தலையைத்

தாழ்த்திக் கொண்டார். மீண்டும் நிமிர்ந்த போது அங்கே நிர்மலாவைக் காணேம். ஆனல் நிர்மலமான பெண்மைக்கே எடுத்துக் காட்டாக அவள் பேசியது மட்டும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. 'இருநூறு ரூபாய் இருந்தால் அவர் கொடியாகப் படர்ந்த மூங்கிலை உளுக்காமல் செப்பனிடலாம். குழந்தைகள் பிறந்திருக்குமோ? என் பாவத்தை எங்கே கரைப்பேன்?'

இரவு பன்னிரண்டு மணி ஆகியும் உறக்கம் வராமல் சத்யானந்தர் தம் அறையிலேயே குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்று கொண்டிருந்தார். மனம் தாமரை இலைத்தண்ணீராக அலை பாய்ந்து கொண்டிருந்தது. கையிலே கீதையும் திருக்குறளும் ஒரு கேடா?



'கடமை! கடமை! நான் எங்கே என் கடமையைச் செய்தேன்? நான் மிகவும் தன்னலக்காரன்; என் கடமையைக் காற்றில் விட்டுவிட்டேன்!' அவர் மனம் பின்நோக்கி, நடந்ததை நினைக்க ஆரம்பித்தது.

கல்லூரியில் படிக்கும் போது நிர்மலா அவருக்கு அறிமுகமானள். எல்லாக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் பேச்சுப் போட்டி – பெரிய அளவில் நடந்தது. நிறைய மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

தலைப்பு:- வரதட்சிணைக் கொடுமை

சத்தியநாதன் என்ற சட்டக் கல்லூரி மாணவன் பல கொடுமைகளை எடுத்துரைத்து, ஆணித்தரமாகப் பேசினன். ஆண்களுக்குப் பெற்றோரால் ஏற்படும் சங்கடத்தை எப்படித் தவிர்ப்பது என்ற நுணுக்கமானபிரச்னைகளையும்அலசி ஆராய்ந்தான். கூட்டத்தில் ஒருகுரல்!

''இத்தனை பேசுகிருயே! நீ வரதட்சிணை இல்லாமல் திருமணம் செய்து கொள்வாயா?'' என்று அது கேட்டது.

''என் பெயரே சத்தியநாதன்! நான் ஒரு தமபிடி கூட வரதட்சிணை பெற்றுக் கொள்ளாமல் மனத்துக்கிசைந்தவளை மணப்பேன்''

மேசை அவன் அடித்த அடியில் அதிர்ந்தது. அடுத்து பெண்கள் கல்லூரியில் ஹோம்சயன்ஸ்படிக்கும்நிர்மலாவின் ஆணித்தரமான பேச்சு! அவனையும் தூக்கியடித்தது அது.

அந்தப் பேச்சுப் போட்டி அவர்கள் நெருக்கத்துக்குப் பாலமாக அமைந்தது.

சத்யானந்தர் கைகளைத் தேய்த்து விட்டுக் கொண்டார். பால் போன்ற நிலவு ஆசிரமத்தைப்போர்த்திக் கொண்டிருந்தது.

'இனி நமக்கு ஏன் இந்த நினைவு? நிர்மலா யார்? நாம் யார்? இந்த ஆசிரமத்திலே நான் இடம் பெற்றுத் துறவியாகிக் குருமகாராஜின் முக்கிய சீடனுகவும் ஆகிவிட்டேன். கடந்த நாட்களைப் பற்றி வேண்டாது நினைப்பு கூடவே கூடாது.'

இப்படி மனக் குதிரைக்கு கடிவாளம் போட்டும் அதுகட்டுக்கு அடங்காமல் திரும்பப் பின்னுக்கி ஓடியது.

நிர்மலாவின் பெற்றோரை அணுகி அவர்கள் லட்சியத்தைச் சொல்லித் திருமணத்திற்கு அநுமதி கேட்டபோது, சுலபமாகக் கிடைத்து விட்டது. ஆனால் சத்தியநாதனின் பெற்றோர்களைத் தான் சரிக்கட்ட முடியவில்லை. காரணம், மரம் போல் வளர்ந்திருந்த அவன் தங்கைக்குக் கை நிறைய வரதட்சிணையுடன், ஐந்து ஆண்டுகள் வரன் தேடிச் சலித்த பின்தான், கல்யாணம் நிச்சயமாகியிருந்தது.

அவன் அம்மா, அதை ஈடு கட்ட நிறைய வரதட்சிணையுடன் வரும் அவன் மாமா பெண்ணை அவன் சம்மதமின்றியே நிச்சயம் செய்திருந்தாள். அவன் லட்சியம் யார் காதிலேயும் விழவில்லை.

''நான் நிர்மலாவின் தகப்பனரைப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கச் சொல்லுகிறேன். மாமாபெண் சகோதரிக்குச் சமம் என்று இறுதியாக ஓர் அஸ்திரத்தைப் போட்டுப் பார்த்தான். அது திரும்ப அவனையே தாக்கி விட்டது.

நிர்மலாவின் தந்தை பத்தாயிரம் ரூபாய்க்கு எங்குபோவார்? அவனுக்குத் தெரியாதா? இருந்தாலும் அவளுக்குத் தானே விளக்கி ஒரு கடிதம் எழுதினான். ''எப்படியாவது உன் அப்பாவை பத்தாயிரம் ரூபாய் புரட்டி கொடுக்கச் சொல்லு. நான் சம்பாதித்து நம் கல்யாணம் ஆன பிறகு திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்று எழுதினான். தபாலில் சேர்க்குமுன் அந்தக் கடிதம் அவன் மாமா பெண் சகுந்தலாவின் கையில் சிக்கியது.

அன்று இரவு மொட்டை மாடியில் அவன் அலைபாய்ந்து கொண்டிருந்த பொழுது அவள் 'அத்தான்' என்று அழைத்து கொண்டே வந்தாள்.

''நீங்கள் நிர்மலாவுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். அந்தக் கடிதத்துடன் நானும் ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்த்து விட்டேன். ''சத்திய நாதனை மணந்து பல்லாண்டு வாழ்வாய்'' என்ற ஆசியுடன் என் நகைகளை யாருமறியாமல் விற்றுப் பத்தாயிரம் ரூபாய் பணத்தோடு கடிதம் தபாலில் போகிறது. இதை யாரிடமும் சொல்லவேண்டாம்'' என்றாள்.

சத்தியநாதன் குன்றிப் போனான். எதிரே ஒரு தேவதை நின்று பேசுவதுபோல் தோன்றியது. இப்படியும் ஓர் அன்பா? தியாகமா? நான்கு நாட்களில் அவனுக்கும், சகுந்தலாவுக்கும் இரண்டு கடிதங்கள் வந்தன. அவனுக்கு வந்த கடிதத்தில் நிர்மலா அவனை வீராவேசத்துடன் சாடியிருந்தாள், அவன் வரதட்சிணைக் கொடுமை பற்றிப் பேசியதை நினைவு படுத்தி! பலன், இரு பெண்களின் உள்ளங்களைத் துறந்து அவன் துறவிக் கோலம் பூண்டான்.

குரு மகாராஜின் முன்னிலையில் சிறிது நிம்மதி கிடைக்கும் போலத் தோன்றியது. என்றாலும் நிர்மலாவின் நினைவு மாறவில்லை.

'நிர்மலாவுக்குநான்யாரெனத் தெரிந்தால் காறி உமிழ்வாளோ? அவளுக்கு எப்படி உதவலாம்? சத்யானந்தராகிவிட்ட சத்ய நாதனின் உள்ளத்தில் இரவு முழுவதும் ஒரே போராட்டம். 'துறவிக்கு ஏது பணம்? ஏது

பொருள்? ஆசிரமத்துப்பொருளை எடுத்துக் கொடுக்க என்ன உரிமை? அப்படிக் கொடுப்பது திருட்டு ஆகாதா?'

"ஸ்வாமி! குருமகாராஜின் ஜயந்தி நாளைக்குத் தானே? ஏழைக் குழந்தைகளுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் நானே உணவு அளிக்கப் போவதாகக் கேள்வியுற்றேன். ஆபீஸ் வேலையாக அவசரமாக இன்றே வெளியூர்போகிறேன். திரும்பப் பத்து நாட்களாகும். இந்த இருநூறு ரூபாயை அந்தப் பணிக்கு என் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறிக்கொண்டு ஒருவர் வந்தார்.

சத்தியானந்தருக்கு திக்கு திசை தெரியவில்லை. கபட நாடக சூத்ரதாரியான கண்ணன் என்னைச் சோதிக்கிறானே?

. ''அர்ஜுனா! உன் கடமையைச் செய். அதுதான் மேலான தர்மம். உத்தவரே! ஒருவனுக்கு நன்மைபயக்கச்சொல்லும் பொய்யும் மெய்யாகும். ஒருவருக்குத் தீமையாக முடியுமானால் மெய்யே சொன்னாலும் பொய்யாகும்.''

புராணச் சொற்கள் புதுப் பொருள் தந்தன.

'நிர்மலா சொன்னது போல் இன்றும் நான் கோழையா? நான் உதவி செய்யாவிட்டால் என்ன வந்தது? அவளுக்கு யாரோ உதவி செய்கிறார்கள்!' இப்படி மனத்தைத் தட்டிக்கழித்தார் சத்யானந்தர்.

மறுநாள் குரு மகாராஜின் ஜயந்தி விழாவுக்குக் கும்பல் கும்பாக மக்கள் வந்தார்கள். பாதகாணிக்கையாகத் தங்களால் இயன்றதைப் பொருளாகவும், பணமாகவும் வைத்தார்கள்.

சத்தியானந்தர் அவர்களுக்கெல்லாம் விபூதி, குங்குமம், பழம் என்று தட்டில் எடுத்து வைத்துக் குருவிடம் நீட்டிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது நிர்மலா அமைதியாக நடந்து வந்து, குனிந்து, குருமகாராஜின் பாதத்தில் ஏதோ ஒரு பொருளை வைத்து "சுவாமி! இது சின்ன சந்தன மரக் குங்குமச் சிமிழ். என் திருமணத்திற்கு முன் ஓர் அன்பர் அளித்த பரிசு. என் குங்குமம் நிலைக்க உங்கள் பாதத்தில் இந்தப் புனிதப் பொருளை வைக்கிறேன். இதோ என் மகன். ஐந்து வயதாகிறது. சத்தியநாதன் என்று பெயர். பெயரைக் காப்பாற்றிக் கொள்ள ஆசீர்வதியுங்கள், ஸ்வாமி!'' என்றாள்.

சத்யானந்தரின் கண்களில் நீர் பொங்கியது. விபூதி, குங்குமம், புஷ்பம் பழம் எல்லாமாகப்பெரிய பொட்டலம் ஒன்று தயாராக இருந்தது. அதைத் தட்டில் வைத்தார். குருமகாராஜ் அப்படியே அதை நிர்மலாவிடம் அளித்தார். அவள் முகத்தில் அந்த நேரத்தில் தனிப் பட்ட ஒளி.

ஆசிரமத்துக் கொண்டாட்டங்கள் எல்லாம் முடிந்தன. இரவு சத்யானந்தர் மனத்திலே பெரிய போராட்டம். இனி இந்த ஆசிரமத்தில் இருக்கக் கூடாது. ஏழைகளுக்கு உணவளிக்கக் கொடுத்த பக்தரின் பணத்தை தான் நிர்மலாவுக்கு எப்படிப் பிரசாதத்துடன் கொடுக்கலாம்? பெரிய புரட்டுதானே? நான் செய்த இந்தத் தவற்றை அவள் தெரிந்துகொண்டால் கொதித்து எழுவாள். உயிரை விட்டு விடுவாள்.

'ஆனால்—

' ஆனால் என் பாவகரத்தினால் கொடுக்க வில்லையே.'

குருமகாராஜின் திருக்கரத்தால் தானே அளிக்கும்படி செய்தேன்! பாவி நான் கொடுத்த குங்குமச் சிமிழைக் கூடக் குருமகாராஜுக் குச் சமர்ப்பித்துத் தன்னுடைய மங்களத்தைப் புனிதமாக்கிக் கொண்டாள்.'

இப்படி அவர் சிந்தனைசெய்து கொண்டிருந்தபொழுது, யாரோ அறைக் கதவைத் தடதட வென்று தட்டினார்கள். 'சுவாமி! குருமகாராஜ் உங்களைத் தமது அறைக்கு வந்து போகச் சொன் னார்கள்!' என்று கூறிச் சென் றார்கள்.

குருமகாராஜின் அறை ஒரு புனித கோயில் மாதிரி இருந்தது. வழக்கத்தை விட அன்று அந்த அறையில் தெய்வீக மணம் நிரம்பியிருந்தது.

குருதேவர் புலித்தோலில் அமர்ந்து தியானம செய்து கொண்டிருந்தார். அனறு சுவா தீனமாக உள்ளே நுழையச் சத் தியானந்தரின் கால்கள் தயங் கின. தலைகுனிந்தவாறே உள்ளே சென்றார்.

''ஸத்யா! இன்று ஆசிரமத்தில் ஏழைகளுக்குத் திருப்தியாக உணவு அளிக்கப்பட்டதா?'' என்று கேட்டார் குருமகாராஜ்.

சத்தியானந்தரின் நாக் குழறி யது மனவேகம் குன்றியது!

''ஸத்யா! எல்லா அறப்பணி களையும் விட இன்று அந்தத் துர்ப்பாக்கிய நிலையிலுள்ள பெண் ணுக்குப் பண உதவி செய் தாயே, அதுதான் மேலானது!''

''குருதேவா! என் தவற்றை மன்னிக்க வேண்டும்! தங் கள் புனித கரங்களால் அளித்த தொகை இந்தப் பாவ கரங்கள் பட்டவை. என்றாலும் அப்பெண்ணுக்கு மங்களம்பெருக வேண்டும்!''

கெனியாத் தலைவரின் மகள் குமாரி மார்க்கரேட் கென்யாடா இந்தியாவுக்கு வந்திருந்த பொழுது, 'வர தட்சிணை கொடுக்க வில்லை என்றால், என்ன தான் ரதி யாக இருந்தாலும் எங்கள் நாட்டில் பெணகளுக்குத் திருமணம் நடப்பதில்லை!'' என்றார்கள். அதைக் கேட்டவர் கட கட வென்று நகைத்து, ''உங்கள் நாட்டுக்கும் எங்கள் நாட் டுக்கும் எத்தனை ஒற்றுமை, பாருங்கள். எங்கள் கென் யாவில் பெண்களுககுப் பிள்ளைவீட்டார்கள் நிறை யப் பரிசம் போடவேண் டும். இல்லையென்றால், அழகில் மன்மதனைசுவ இருந்தாலும் பையன்களுக் குத் திருமணம் நடப் பதில்லை!'' என்றார்.

''ஸத்யா! பூர்வாசிரம நினை வில் நீ மனம் உடைந்து விட் டாய். சமுகத்தில் புறையோடி விட்ட வரதட்சிணைக் கொடு மையை எதிர்க்கும் சக்தி அன்று பேச்சோடு நின்றுவிட்டது. உன் வாழ்வையும் திசை திருப்பிவிட் டது. இன்பமான இல்லறத்துக் குப் பகையாக நிற்கும் இந்தக் கொடுமை தீரவேண்டும். அப் பொழுதுதான் சமுதாயம் நல முறும்! இதை மக்கள் உணரும் நாள் தொலைவில் இல்லாமல் இருக்கட்டும் என்று பிரார்த்திப் போம்!'' என்று குருமகாராஜ்.

சத்தியானந்தரின் கண்கள் அந்த நாளை எதிர்பார்க்கிறு போல் குருவை நோக்கின.

*With the best compliments*

*of*

# ENTERPRISING ENTERPRISES

**"THE GRANITE PEOPLE"**

—○—

**THE FIRST FACTORY**

in

**TAMIL NADU**

to

**PROCESS GRANITE STONES**

with

**HIGHLY SOPHISTICATED IMPORTED MACHINERY**

Phones : 420729
69436
69341

Cable : 'EXPERTISE'

Telex : BROS

Chembarambakkam

MADRAS – 602 107

Tamil Nadu

INDIA

# அறிவார் தொழில்

## ஸ்ரீபிரகாசா

நமது நாட்டிலே, மதச் சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது என்று முடிவு ஆகியது. அதன் பயனுகக் கல்விக் கூடங்களிலிருந்து அறக் கல்வி வெளியேறியது. அற நம்பிக்கையும் அற ஒழுக்கமும் தனி மனிதனின் சொந்த உணர்வைப் பொறுத்த விஷயம். மனிதனையும் அவனைப் படைத்தவனையும் சார்ந்த விஷயம். அக்கல்வியை அவனுக்குப் புகட்டுவதோ புகட்டாமல் இருப்பதோ அவனைப் பெற்ற தாய் தந்தையரின் பொறுப்பு. எனவே, இக்கல்வியை அவரவர் குடும்பப் பொறுப்பு ஆக்கிவிட வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப் பட்டது.

இங்கு ஒரு விஷயம் நினைவில் கொள்ள வேண்டும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில், ஆங்கிலேயர்களின் ஆட்சி வேரோடி நிலைத்து விட்டிருந்த காலத்தில், எத்தனையோ கிறிஸ்துவக் கல்விக் கூடங்கள் நாட்டில் தோன்றி வழக்கில் வந்துவிட்டிருந்தன. மற்ற தர்மங்களைச் கடைப்பிடிப்பவர்களின் மனத்தில் அதைக் கண்டு தங்கள் தர்மங்களைப் போதிக்கவும் கல்விக் கூடங்கள் வேண்டும் என்ற எண்ணம் தலையெடுத்தது. அதன் பலனுக, வெவ்வேறு இடங்களில் கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன. அவற்றின் பெயரோடு ஹிந்து, முஸல்மான் என்ற சொற்களும் ஒட்டிக் கொண்டன. வைதிக, சநாதன தர்மம், ஜைன, பௌத்த தர்மம் ஆகியவற்றின் பெயரால் பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டன. கூடவே, பெருமளவில் கிறிஸ்து வச்சங்கங்களும் பணியாற்றிக் கொண்டிருந்தன. சொல்வதன் கருத்து என்ன வென்றுல், எல்லா இடங்களிலும் தார்மிகச் சூழலை நிலைநாட்டும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மதங்கள் வெறும் நம்பிக்கைத் தொகுப்புகள் அல்ல. அவை நெறி முறைகளையும் நல்லொழுக்கங்களையும் வலியுறுத்துபவை. வெவ்வேறு மதங்களும் நல்லொழுக்கங்களைப்பற்றி வெவ்வேறு கருத்துக் கொண்டிருந்தாலும், அடிப்படையில் உண்மை சகோதரபாவம், கொடைத்தன்மை, தயை ஆகிய குணங்களைக் கொள்ளுமாறே உபதேசிக்கின்றன.

அற நிறுவனங்களில், இக் குணங்கள் விசேஷமாகக் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களின் மனத்திலே இக்கருத்துக்கள் நிலை பெற வழி கோலுகின்றன. மதங்களையோ தர்மங்களையோ தனிப்பட்டவர்களைப் பொறுத்த விஷயமாகக் சொல்லலாம். ஆனுல் அவற்றின் சமூகவடிவமே வலிமை மிக்கது. ஏனென்றுல், அதன்மூலம்ஒருநிலைபெற்றசமூகத்தின் அங்கத்தினர்கள் பரஸ்பரம் எப்படிநடந்து கொள்ள வேண்டும் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. வீட்டில் உள்ள அனைவரையும் தினம் ஒன்றுகூட்டிப் பிரார்த்தனையில் ஈடுபடுத்த வேண்டும் என்றோ, அறச் செயல்களில் நாட்டம் கொள்ளச் செய்ய

வேண்டும் என்றே தாய் தந்தையர் அனைவரும் கவலை காட்டுவதில்லை. இந்நிலையில் பொதுக் கல்விக் கூடங்கள் தங்கள் கடமையைத் தலைப் பொறுப்பாக ஏற்றே தீர வேண்டியிருக்கிறது. வெவ்வேறு அறிவுத்துறை விஷயங்களைப் புகட்டுவதோடு தங்கள் மாணவர்களுக்கு, நீதி நெறியையும் நல்லொழுக்கங்களையும் புகட்டி வழிகாட்டும் பொறுப்பை ஏற்பதை அவை ஒருநாளும் தவிர்க்க முடியாது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சுதந்திரமும் மதச்சார்பற்ற கொள்கையும் வருவதற்கு முன்னால், நமது இளைஞர்களும் இளம்பெண்களும் கல்விக் கூடங்களிலிருந்து பெருமளவுக்குத் தார்மிக உணர்வைப் பெற்றே வெளியேறினர். இந்தக்கல்விக் கூடங்களைத்தவிர, நாட்டில் எத்தனையோ அறவழிச் சான்றோர்கள் ஆசிரமம், மடம் போன்றவற்றை நிறுவிச் சொற்பொழிவுகளின் மூலமாகச் சாதாரணப் பொதுமக்களிடையே அறநெறி உணர்வைப் போதித்து வந்தனர். கல்விக் கூடங்களுக்குச் சென்று கல்வியறிவு பெற இயலாதவர்களுக்கு, இவ்வாசிரமங்கள் பெரும் பயனை நல்கின. அறச் சான்றோர்களின் பேச்சைக் கேட்க மக்கள் பெருமளவில் கூடினர்.

மதச் சார்பற்ற கொள்கை பிறந்ததன் விளைவாக, அறநெறி உணர்வு குறையலாயிற்று. 'நான் ஆண்டவனைத் தவிர யாருக்கும் அஞ்சுவதில்லை' என்று கூறி வந்தார் காந்தியடிகள். ஆனால் ஜவாஹர்லால் நேருவோ ஒரு பெரும் பொதுக்கூட்டத்தில், 'நான் ஆண்டவனிடத்திலும் அஞ்சுவதில்லை' என்று கூறினார். "'தங்களைப் போன்ற உயர் பதவியில் உள்ளவர்கள் பொது மக்களிடையே இப்படிப் பேசக் கூடாது. தங்களால் யாருக்கும் அஞ்சாமல் மிகத்தூய்மையாக நடந்து கொள்ள முடியலாம். ஆனால் பாமர மக்கள் உலகத்தைச் சேர்ந்த அல்லது உலகத்துக்கு அப்பாற்றபட்ட ஒரு சக்திக்கு அஞ்சியே ஆகவேண்டும். அந்த அச்சமே அவர்களுக்கு நல் வழி காட்டும்" என்றேன் நான்.

அன்றாட வாழ்க்கையில் நாம்பார்க்கிறோம். நாற்சந்தியில் போலீஸ்காரர் நிற்கவில்லையென்றால், கார்காரரோ வண்டிக்காரரோ குறுக்கு வழியில் செல்லவே முற்படுகிறார்கள். போலீஸின் பயத்தினால் தான் அவர்கள் சரியான வழியில் செல்கிறார்கள். ஆபத்து விபத்துகளைக் குறைக்க இந்த அச்சம் அவசியமானதே.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ பகவத் கீதையில், பாமர மக்களின் மனத்தைச் கலக்கி அலைபாய விடக் கூடாது என்கிறார். 'யாரும் நம்மைப் பார்க்கவில்லையே! பார்க்கவும் முடியாதே!' என்று எண்ணி ஒருவன், மக்கள் இல்லாத இடத்தில் தவறாக நடந்து கொள்ள முற்படுவானேயாகில், மகாபாரதம் அவனை எச்சரிக்கிறது: "இப்படித் தவறாக எடைபோட்டுத் தவறான காரியத்தில் இறங்காதே. சூரியன், சந்திரன், காற்று, நீர், நெருப்புஆகிய இயற்கைச் சக்திகள் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. தேவையேற்படும் பொழுது அவை உனக்கு எதிராகச் சாட்சி சொல்ல வந்துவிடும்!" என்று.

இது போன்ற நம்பிக்கைகளால் மக்களின் உள்ளத்திலே ஒரு வகை அச்சம் தோன்றுகிறது. அதன் உதவி கொண்டு அவர்கள் நல்வழி செல்லுகிறார்கள். வேற்

றுலகச் சக்தி தோற்றுவிக்கும் அச்சம், போலீஸ், மாஜிஸ்திரேட் ஆகியவர்களிடம் ஏற்படும் அச்சத்தைக் காட்டிலும் எத்தனையோ அதிகமானது; வலுவானது.

வியப்புக்குரிய ஒரு விஷயம் என்னவென்றால், ஆட்சியினரும் தலைவர்களும் 'மதச் சார்பற்ற நாடு' என்று எத்தனைதான் பெருமையாகப் பேசிக்கொண்டாலும், நமது அமைச்சர்களும், உயர் பதவி வகிக்கும் அதிகாரிகளும், செல்வாக்கும் செல்வமும் படைத்த மக்களும் தங்கள் பெண், பிள்ளைகளைக் கிறிஸ்துவக் கான்வெண்ட் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். என் நண்பர் லால்பஹாதூர் அவர்களே தங்கள் வீட்டுக் குழந்தைகளைக் கான்வெண்டுக்கு அனுப்பினார். 'காசி வித்யாபீடத்து மாணவராகிய தாங்களே இப்படிச் செய்வது எனக்குப் பெரு வியப்பை அளிக்கிறது!'' என்றேன் நான். ''கான்வெண்ட் பள்ளிகளில் மற்ற பள்ளிகளைக் காட்டிலும் கல்வித்தரம்நன்றாகயிருக்கிறது!'' என்று எனக்கு விளக்கம் கொடுத்தார் அவர். இந்த நிகழ்ச்சியிலிருந்து ஒன்று தெளிவாகிறது. அறச் சார்புளளகல்விக்கூடங்களை மதச் சார்பற்ற கொள்கையை வலியுறுத்துபவர்களே விரும்புகிறார்கள என்றால், அறக் கல்வியை அவர்களுமே நாடுகிறார்கள் என்பது உறுதி ஆகின்றது அல்லவா?

மதச் சார்பற்ற கொள்கை ஹிந்துக்களையே மிகவும் பாதித்திருக்கிறது. நம் நாட்டின் பெரும்பான்மை மக்கள் ஹிந்துக்கள். அவர்கள் பல சாதிகளால், சம்பிரதாயங்களால் வேறு பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறக்கருத்துக்களிலும் சமத்துவம் இல்லை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் கூட ஆண்டவனை வெவ்வேறு பெயர்களால் வழிபடுகிறார்கள். அறச் செயலகளைக் கூட வெவ்வேறு விதமாக அநுஷ்டிக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு அறக் கல்வி புகட்டுவது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் பொது நிறுவனங்களிலும்கல்வி நிலையங்களிலும் அவர்களுக்கு அறத்தின் வேரான மூலக் கொள்கைகள் மட்டுமே கற்பிக்கப்படும். நீதி தழுவிய நெறிமுறைகளே வலியுறுத்தப்படும். கல்விக் கூடங்களில் அற நெறிக் கல்வி அருகி விட்டமையால், மக்களுடைய தார்மிக நெறிமுறைக் கட்டுப்பாடுகளிலும் தளர்ச்சி ஏற்பட்டு விட்டது.

சான்றோர்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ, அப்படியே சிறியவர்களும் நடப்பார்கள் என்கிறது பகவத் கீதை.

முன்பெல்லாம் ஒருவன் தவறாக நடந்தாலும், தவற்றை உணர்ந்திருந்தான். ஆனல் இப்பொழுது எல்லாம் எதையுமே தவறாக எண்ணுவதில்லை. கள்ள மார்க்கெட்போன்ற தீய காரியங்களுக்குச் சிறிதும் வெட்கப்படாமல்பவர்அதைப்பெருமையாகவே எண்ணத்தலைப்பட்டு விட்டனர்.

---

உலகத்துக் கதவுகள் அத்தனையும் அடைபட்டு விட்டாலும் மனிதன்நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. அவனுக்காக எப்பொழுதும் ஒருகதவுமட்டும் திறந்திருக்கிறது.அதுவே தர்மத்தின் கதவு அதனைஅவன் எப்பொழுதுவேண்டுமானலும் தட்டலாம். திறந்து கொள்ளும். —ஈன்ஸ்டீன்

மற்றவர்களும் அவர்களது செயலைப் புகழ்கிறார்கள். இத்தகைய தீய செயல்களை எதிர்த்து எத்தனை கூச்சல் போட்டாலும், அவற்றைத் தடுக்க எத்தனை கூட்டங்கள் போட்டாலும், சாதாரண மக்களிடையே உயர்ந்த ஆன்மிக உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பாத வரையில், பயனில்லை; தீமையைக் களைய முடியாது.

நமது கல்விக் கூடங்களில் அறக் கல்வி தரப்படுவதில்லை. அறவழிச் சான்றோர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை. மிக முக்கியமான இந்தக்காரியத்தைத் தாய் தந்தையர்களிடம் மட்டுமே விடுவோமானால், அளிக்கப்படும் அறக்கல்வி வெகு குறுகிய நோக்கம் படைத்ததாகவும், கடுமையானதாகவும் ஆகி விடும் என்பதில் ஐயம் இல்லை. அவற்றால் தீமை விலகுவதற்குப் பதிலாக வளரவே செய்யும். சம்பிரதாய இழுபறியும் சமூக விரோதமான செயல்களுமே பெருகும். எனவே, கல்வி நிலையங்களில் அற போதனை அவசியம் நடைபெற வேண்டும். ஒழுக்கம் விழுப்பம்தர அதுஒன்றேவழி.

---

## தர்ம சங்கடம்

மாரிக்காலம். மழைத்துளி ஒன்று வானிலிருந்து இறங்கியது. சட்டென்று தன் வேகத்தை மட்டுப் படுத்துக் கொண்டு நின்றது.

ஒரு புறம் அலை பாய்ந்து கொண்டிருந்த கடல் கை நீட்டி அழைத்து, ''வா, வா! எனனோடு கலந்து எல்லையில்லாத் தன்மைக்கு எசமானியாகி விடு!'' என்றது.

இன்னொரு புறம் சூடேறிப் போயிருந்த பாலைவனம். முதல் மழைத் துளியைக் கண்ட அதன் வறண்டு உலர்ந்த உதடுகள் திறந்து கொண்டன. ஆவலோடு வானத்தை நோக்கி, ''பல மாதங்களாக நான் உன்னை எதிர் நோக்கிக் கொண்டிருககிறேன். உன் பிரிவுத் தீயில் வெந்து கொண்டிருக்கிறேன். என் இதயத் தீயை நீ தணிக்கவில்லையென்றால், நான் வெந்து சாம்பலாகி விடுவேன். நீ எனக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு வேறு யாருக்கும் இல்லை. வா, வா! வந்து என் கனிதீர்!'' என்றது.

மழைத்துளி இருவர் பேச்சையும் கேட்டது. தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டது. சிறுநேரத்தில் பெரு யோசனை செய்தது. கடலிடம் செல்வதா? பாலைவனத்திடம் செல்வதா? முடிவு எடுப்பது கடினமாகத் தோன்றியது. என்றாலும நொடியில் முடிவு எடுத்தது. 'கடலுக்குச் சென்றாலும், பாலைவனத்துக்குச் சென்றாலும் நான் அழிவது என்பது உறுதி. ஆகையால், யாருக்கு நான் அதிகம் தேவையோ, அவரிடம் செல்வதே நல்லது!' எண்ணிய மாத்திரத்திலே பாலை வனத்தில போய் விழுந்தது. விழுந்த அடுத்த கணமே ஆவிதுறந்து ஆவியாகி விட்டது.

# எங்கள் கனவு

"ஆண்டவனைப் பற்றாதே. அவன் அடியார்களைப் பற்று. ஆண்டவன் நிதியும் நிலமும் தான் தருவான். அடியார்களோ அவனையே தருவார்கள்."

—கபீர்தாசர்.

பல ஆண்டுகளுக்கு முன் என் குல குருவின் தூண்டுதலால் ஞான குருவைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. ஞானம் பெறும் அருகதை இல்லையாயினும், அவர் அருளைப் பெறும் பேறு கிடைத்தது. ஞானம் பெற, பெறுபவரின் முயற்சியும் ஈடுபாடும் தேவை. ஆனால் அருளைப் பெறுபவரின் முயற்சி தேவையில்லை. பொழிபவர் பொழிந்தால் பெறுபவர் வேண்டாம் என்றாலும், அருள் மாரி அவரையும் நனைக்கவே செய்கிறது. என் முன்வினைப் பயன், இப்பிறவியில் எனக்கு அவர் தாளடி சேரத் தானாகவே உதவுகிறது.

என் இரண்டொரு எழுத்துக்களை ஏட்டில் பார்த்து விட்ட மகிழ்ச்சியில், என் குல குரு ஒரு நாள் கேட்டார்: "ஞானகுருவின் அருளாசியோடு ஒரு பத்திரிகை வருகிறது. அதில் பணியாற்ற உனக்குச் சம்மதமா?"

அச்சில் ஏறிவிட்ட இறுமாப்பில், அருளைக் காட்டிலும் பொருளில் என் நாட்டம் மிகுந்திருக்க வேண்டும். என் நா புரள மறுத்துவிட்டது.

ஆனால் குருவருள் என்னைப் பத்திரிகைத் தொழிலுக்கே இழுத்து விட்டது. என் அறியாமைக்குமே புகழும் பாராட்டும் இட்டுச் செய்து விட்டது.

என் அத்தொழில் இடையில் கத்திரித்துப் போன போது, சிவாஸ்தானம் சென்று ஞான குருவாம் மோன குருவைத் தரிசனம் செய்தேன். 'முயற்சி செய்தால் உனக்கு வேலை கிடைக்கும். காரியம் ஆக வேண்டுமென்றால், பார்க்க வேண்டியவர்களைப் பார்க்க வேண்டும்' என்று இதழில் நகையோடத் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

என் அஞ்ஞானம் எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, நடமாடும் தெய்வத்தின் வழித் தோன்றலாக ஸ்ரீ காம கோடி பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீஜயேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகளிடம் கொண்டு விட்டது. "இப்படி நீ சும்மா இருக்கக் கூடாது" என்று கூறி ஒரு வழி காட்டி விட்டார்கள். அதோடு நான் துணிந்து செயற்பட ஸ்ரீ விசுவநாதனையும் சேர்த்து விட்டார்கள். ஸ்ரீ விசுவநாதன் என் பழைய நண்பர், இனிய நண்பர், வயதில் இளைய நண்பர். அவரது செயலூக்கமே என் முதுகெலும்பு.

'அமரபாரதி'யின் அவதார வரலாறு இது. அது வரலாறு சமைக்கப் போகிறது என்பதற்கு அறிகுறி, அதன் பெயருக்குள் பொதிந்திருக்கும் பல பொருள்கள், விரிவுரை விளக்கவுரைகள்

---

நம்மை நாம் ஆண்டவனின் கருவியாக்கி அவன் இஷ்டத்துக்கு விட்டு விட்டோமானால் எந்த நேரமும் நாம் கவலைப்பட வேண்டியிராது. -மகாத்மாகாந்தி.

மட்டும் அல்ல. இவை எல்லாவற்றுக்கும் மேலாக 'அமரபாரதி'க்குள்ள தனிச் சிறப்பு என்ன வென்றால், ஸ்ரீ காஞ்சி முனிவர் தம்திருவாயால் சூட்டி, 'நன்றாக நடைபெறும்' என்று அருளாசி வழங்கியதே ஆகும்.

இப்படி இரு பெரியவர்களின் அநுக்கிரக பலத்தோடு தமிழ் கூறும் நல்லுலகத்தில் வளைய வரப் போகும் 'அமரபாரதி'க்கு அறச் சான்றோர்கள் அனைவரின் ஆசியும் அருளும் கிட்டியுள்ளதாகவே கருதி மகிழ்கிறோம். அதே நேரத்தில் அவர்களுடைய மேலான ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

இந்தியப்பண்பாடுஎத்தனையோ பழைமையானது. வேத காலந் தொட்டு அற வழி ஒன்றையே ஆணிவேராகக்கொண்டு இயங்கி வருவது. வேதம் தொடங்கி, உபநிஷதங்கள், ஸ்மிருதிகள், இதிகாச புராணங்கள் எல்லாம் தர்மத்தையே அச்சாகக் கொண்டு சுற்றி வருபவை. இலக்கியத்தின் இலட்சியமும் அதுவே தானே?

இலக்கியம் என்றவுடன் நம் கண் முன் நிற்பவை பண்டைய ஏடுச் சுவடிகளே. அவை கலைவாணி சரஸ்வதியின் கோவிலாகப் போற்றப்படுகின்றன. அறிவு தெய்வத்தின் அருளால் ஒளி பெற்ற பாரதத்தின் 'தான் பெற்ற இன்பம் இவ்வையம் பெறுக' என்னும் கருத்தை அமரபாரதி தன் சின்னமாகக் கொண்டுள்ளது. இதனை வடித்துத் தந்த ஓவியர் ரகுநாத், இளம் தலைமுறையில் உருவாகி வரும் கல்லூரி மாணவர் மகேஷ் ஆகியவர்கள் அமரபாரதியின் அடக்கமான தோற்றத்துக்கு எடுப்பான தொடக்கம் காட்டியிருக்கிறார்கள்.

எங்களுக்குள்ள சாதனக் குறைவுகளைத் தெரிந்தே செயற்பட்டிருக்கிறோம். ஆனால் எத்தனை எத்தனையோ செய்ய ஆசைப்படுகிறோம்.

வடமொழி யென்று கூறப்படும் வாடா மொழியான சம்ஸ்கிருதத்தின் சிறப்பிலக்கியங்கள், தென் மொழி என்ற பெயரால் தேன் மொழியாகத் தித்திக்கும் தமிழின் அருமை பெருமைகள், எம்மதத்துக்கும் சம்மதமான எல்லா மொழி நல்லிலக்கியங்கள், ஒழுக்கம் சார்ந்த படைப்பிலக்கியங்கள் எல்லாமே இடம் பெற்று அமரபாரதிக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

எங்கள் இந்தக் கனவு நனவாக எழுத்தாளர்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள் அடங்கிய அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடுகிறோம், எத்துறையிலும் அமரபாரதியின் ஏற்றத்துக்கான ஆலோசனைகளையும் எதிர் பார்க்கிறோம்.

அமரபாரதி முதல் சுவடியின் முதல் ஏட்டை ஸ்ரீ காஞ்சி முனிவருக்கு விநயத்துடன் சமர்ப்பிக்கிறோம். அவரது அருட்கரம் என்றென்றும் வழிகாட்டி அமரபாரதியின் புகழை நிலைநாட்டுமாக.

ரா. வீழிநாதன்.

---

வெளியிடுபவர்: எம். விசுவநாதன் 12/131- கிழக்குத் தெரு மேற்கு சி. ஐ. டி நகர், சென்னை 600 035

அச்சிடுபவர்: வி. ராமஸ்வாமி, ஆஷா அச்சகம், 304, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை 600 005

ஆசிரியர்: ரா. வீழிநாதன்.